697

# ஜகன்மோகினி

ஆசிரியை :
வை. மு. கோதைநாயகி அம்மாள்



OFFICE OF THE ... 2-MAY 1938 MADRAS

தாய் !

தந்தை !

தாரம் !

இவர்களுக்குரிய
கடமைகளைச் செய்வது மேலானதா ?

தான் செய்த பாவத்திற்குப்
பிராயச்சித்தம் செய்வது மேலானதா ?

## மகிழ்ச்சி உதயம்

இதற்குச் சரியான பதிலை அளிக்கும்

அடுத்த மாதம் வெளிவரும்

விலை அணா எட்டு.

ஏப்ரல் 1938

## வாழ்க்கையின் நாதம்

அல்லது வானக் குயில் (தொடர்ச்சி)

அணா 2

"அனாதைப் பெண்"ணில் நடிக்கும்



ஸ்ரீமதி டி. ஏ. சுந்தராம்பாள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-MAY 1938
MADRAS

ஸ்ரீராமஜெயம்

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து

—ஸ்ரீ வீரராகவ கவி.



| | | |
|---|---|---|
| மலர் 15 | ஈச்வர ஸு பங்குனி மீ ஏப்ரல் 1938 | இதழ் 4 |



## திருமால் துதி

பாற்கடல் மேவும் பரமன் அடிக்கே
நெஞ்சகந் தந்த நிறையுடை மாந்தர்
மால்வினை நீங்கி மகிழ்வார்
வால்வளை யாழியன் வைகுந் தத்தே.

தன்னடியார் தம்மகத்துத் தங்கியவர் விரும்பிச்
சொன்னபடி செய்யும் துளவன்காண் அம்மானை
சொன்னபடி செய்யும் துளவனே யாமாயின்
மன்னுபுகழ் மாவலியை வாட்டினதேன் அம்மானை
வாட்டினதும் தாளாண்மையால் அன்றோ அம்மானை.

—வீரராகவ கவி.

JL 2271 A2258 N38-154
183020.

# புது வருட வாழ்த்துப் பா!

புதிய வருடப் புதுப் புனல் ஓங்கக்
கதிரவன் உற்ற காட்சியைக் கண்டு
ஞாலத் துயிர்கள் நலமுறக் களிப்ப
ஆலத் திலைமீது அரும்பெறற் குழவியாய்
அருந்துயில் கொள்ளும் அமலன் தாள்மலர்
பொருந்திய அன்பால் யாவரும் போற்றுக
திருந்துஞ் செங்கோல் சிறப்புடன் வாழ
அறமும் பொருளும் அன்புடன் இன்பும்
மறமற வேண்டுவர் மானிடர் எவரும்
இன்பம் அடைய விரும்புவர் யாவரும்
துன்பம் நீங்கத் துயர்பல பொறுத்தல்
ஆடவர்க் குரியதே யாயினும் அவர்க்குப்
பாடுகள் பலவும் படிந்திருத் தலினல்
கடமையை முடிக்கக் கருதினும் இயலாது
அன்னவர் தொழிலை அன்பே உருவாய்த்
துன்னிய மடவீர் துகளறச் செய்யும்
உரிமை உமக்கே உதவிய இறைவன்
கருதிய உள்ளக் கருத்தை முடித்தல்
பெருமையே நுமக்குப் பிறிதொன் ருகா
இருமையும் அடைந்தே இன்புற நாங்கள்
அருமையாய் உங்கட்கு ஆசி கூறுதலே
தகுதியென் றறிந்து தயங்குவ தன்றி
மிகுதுயர் நெஞ்சில் மீக்கொளும் தன்மையை
மாற்றுதல் உங்கள் மகிமையே யாகும்
போற்றுதல் உங்களைப் புருடர் கடமையாம்
எண்ணினம் உங்கள் இயற்குணம் வாழி!
திண்ணிய நிறையும் திருவுடன் வாழி!
பண்ணியல் மொழியும் பழிப்பறு குணமும்
கண்ணிய மதியும் கறையறு செயலும்
மண்ணுலும் விண்ணுலும் மகிழ்வுற வாழி!
பெண்மையும் அன்பும் வாழி! வாழியவே!

—திரு. ராகவாசாரியர்.

# " அளவுக்கு மீறினால்?"

வி. எம். ஸ்ரீநிவாஸன், எம். ஏ.

"அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சாம்" என்பது முதுமொழி. இதன் உண்மையை நாம் பல துறைகளிலும் நம் நித்திய வாழ்வில் கண்டுள்ளோம்; கண்டு வருகின்றோம்; காணவும் போகின்றோம். மனிதனின் இச்சையிலும் ஒரு அளவுக்கு மேல் சலிப்பேற்படுவது சகஜமானது என்பது காலச் சக்கரத்தின் படிப்பினை.

உதாரணமாக நம் ஆடல் பாடல் கலைகளில் சம்பந்தப்பட்ட சிலவற்றைக் கவனிப்போம். நாடகத்தைப்பற்றி எடுத்துக்கொண்டால், நம் நாட்டில் முன்பொரு காலத்தில் அதற்கிருந்த ஆதரவும், 'மோஸ்தரும்' இப்போது இருந்தவிடம் தெரியாது மறைந்துவிட்டதானது தெட்டென வெளிப்படுகிறது. சில (பொறுக்கு) நாடகங்களைத் தவிர, இக்காலத்தில் நாடகம் என்றால் உயிரற்ற "நடிப்பு" என்று சொல்லப்படும் பொம்மை ஆட்டம்தான் எனச் சொல்வதற்குக் கலா ரஸிகர்கள் தயங்குவதில்லை. அவர்கள் புகல்வதும் சரியேயென்றுதான் ஒப்புக் கொள்ளும்படியான நிலைமையில் ஓர் பெரிய கலை மங்கிக் கிடக்கின்றது.

ஒருகாலத்தில் நாடகத்தின்பால் ஜனங்கள் காட்டிய அளவற்ற ஆதரவால், யோக்கியதை யற்றவர்களும், அக்கலையின் நுட்பங்களை உணர்ந்து ரஸிக்க இயலாதவர்களும் அக்கலைக்காக உழைக்கத் தென்பட்டு, "பொம்மையாட்டமும், கிளிப் பேச்சும், யந்திர கீதமும்" சரமாரியாகப் பொழிந்து, அக்கலையின் கௌரவத்தையும், எதிர்காலத்தையும் கெடுத்துவிட்டதானது நாம் சில வருடங்களுக்குள் கண்ட உண்மையல்லவா?

அதேபோல நம் படக்கலையின் போக்கையும் சற்று ஆராய்வோம். முதன் முதல் பேசும் படத்திற்கு ஜனங்கள் ஆதரவு அளித்தது ஒரு தனித்த விஷயமாகக் கருதவேண்டும். அதாவது, புதிதாகப் பேச ஆரம்பித்த ஒரு குழந்தையினிடத்தில் அதன்

குறைகளைக் கவனியாது ஒரு வாஞ்சை ஏற்படுவதில்லையா?—அது போலத்தான். அதேமாதிரி நாள் செல்லச் செல்ல அக்குழந்தை மிகவும் உயர்ந்த குணத்துடன் சிறந்து விளங்க வேண்டுமென எவ்வாறு இச்சிப்பது இயற்கையோ, அங்ஙனமே இப்படக் கலை குறைகளின்றி நன்கு விருத்தியாக வேண்டுமென்று எதிர்பார்ப்பது சகஜமாக ஏற்பட்டுள்ளது. அதனால்தான் எல்லாப் படங்களுக்கும் இப்போது ஒரேமாதிரியான—முன்போன்ற—ஆதரவு இருப்பதில்லை.

> நன்றாகவில்லாத படங்களே மொத்தத்தில் அளவுக்கு மீறி வந்துவிட்டதால், இப்போது தினம் ஒரு புதுப்படம் (புராணமோ, கத்திரிக்கோலோ) விளம்பரப் படுத்தப்பட்டால், ஒருவித வெறுப்பும், அலக்ஷியமும்தான் தலை தூக்குவதால், படம் வெளி வரும்வரை ஒன்றும் விசேஷமாக (விருத்தி யடைவதைப்பற்றி) எதிர்பார்ப்பதற்கில்லாம லிருக்கிறது. பத்து படங்களில் ஒன்று சிறந்ததென அமைவதே அபூர்வமாயிருக்கிறது.

மேற்குறித்த இரண்டு உதாரணங்களிலும் ஒரு விஷயம், தானாக விளங்கும். அதாவது நாடகத்திற்கோ, அல்லது படத்திற்கோ ஆதரவு முன்புபோலல்லாமல் மாறி யிருப்பதன் நிலைமையின் பின்னணியில் நாம் ஒரு புது அவாவைக் காண்கிறோம். அது யாதெனில், பொது ஜனங்களில் பெரும்பான்மையோர் இப்போது கலையபிவிருத்தியில் நோக்கங்கொண்டவர்களாகவும், அதன் எதிர்காலத்தில் மிகவும் முன்னேற்றத்தை எதிர்பார்ப்பவர்களாகவும் தேன்படுகிறார்கள் என்பதே. ஸினிமா கலை அபிவிருத்திக்கு, இது ஒரு நல்ல அம்சமே.

நிற்க, "அளவுக்கு மீறினால்" என்னும் தலைப்பின்கீழ் ஒரு மிகவும் முக்கியமான விஷயம் தெரிவிக்கவேண்டி யிருக்கிறது. அதாவது, சமீபத்தில் ஏற்பட்டுள்ள பொதுஜன 'மோஸா' அல்லது "மோகம்" சங்கீதத்தின் காந்த சக்தியானது மனிதர்களிடமின்றி, மிருகங்களிடமும் நிதர்சனமாகக் காணலாம். சிலருக்கு நம் சம்பிரதாயப்படி சுத்தமான கர்நாடக சங்கீதம்தான் ஹிருதயத்தின் உட்

புறம்வரை பிடிக்கும். ஆனால் பெரும்பான்மையோர்க்கு டாக்கீகள் மலிந்து கிடக்கும் இக்காலத்தில் தேசியம் கலந்த வர்ண மெட்டுகள் ரொம்பவும் இன்ப மளிக்கின்றன. இவைகளின் பேரிலுள்ள பெரும் ஆதரவானது, சினிமா கீத ரிகார்டுகள் அதிகம் விற்பனை யாவதிலிருந்து நன்கு வெளியாகின்றது.

ஒரு சங்கீத மெட்டில் உள்ள மோகமானது, அதில் வரும் சாஹித்தியத்தின் அர்த்த பாவத்தைக்கூட மறக்கும்படி சிலரை—ஏன்? பலரை—அடிமையாக்குகின்றது. கொஞ்சம் "சாரீரம் உண்டு" என்று சொல்லிக்கொள்ளக் கூடியவர்களெல்லாம், மெட்டுகளுக்காக மயங்கி, வார்த்தைகளை—அதுவும் தன்னுடைய தாய்ப் பாஷையிலேயே யுள்ள வார்த்தைகளைக்—கவனியாமல் பாடும் விநோதத்தின் அனர்த்தம் சற்று யோசித்தால் பளிச்செனப் புலப்படும்; வேதனையையும் உண்டாக்கும்.

சில மெட்டுகளின்மீதுள்ள மோகத்தால்—அளவுக்குமீறிய ஆனந்தத்தால்—சாஹித்தியத்தையும், சந்தர்ப்பத்தையும், யார் பாடலாம் அல்லது கூடாது என்ற தராதரத்தையும் கவனியாமல் பாடுவதன் அனர்த்தத்தைச் சில உதாரணங்களால் விளக்குவோம். ஒரு விவாக மகோத்ஸவத்தில் மணப் பெண்ணை நலங்கிடுகையில் பாடச் சொன்னவுடன்; "சுனோ சுனோ" மெட்டிலிலுள்ள மிகவும் புகழ் பெற்ற "கிருஷ்ணா கிருஷ்ணா" வென்ற துக்கடா உருப்படியை ரொம்பவும் நன்றாகவும் அந்த ரிகார்டிலுள்ளது போன்றும் பாடுகிறாள். அனுபல்லவியை "விலைமாதாய் ஏன் பிறந்தேன் நான், பலரும் பழிப்பார் எனை........" யென்று மணப் பெண் பாடுகிறாள். மணையிலுள்ள மணமகனின் மனமும், முகமும் எங்ஙனமிருக்கும்?....ரகளைதான்!

மற்றுமோர் உதாரணம். நாள் முழுதும் வேலை செய்துவிட்டுக் களைப்புற்று வீடு திரும்பிய ஒருவன் சங்கீத சுகத்தால் பரவசமடையக் கருதித் தன் மனைவியைப் பாடச் சொல்லுகிறான். அவள் உடனே, "பாக்கிய சக்ரா" புகழ் பெற்ற மெட்டிலுள்ள "ஈன ஜென்மம் எடுத்தேன் என் ஐயனே" வென்ற பாட்டை

பிலிம் ரிகார்டிலிருந்து பாடம் பண்ணினவாறே எல்லா சங்கதிகளுடனும் அப்படியே அளந்து கொட்டுகிருள். அதில் "காண்பவர் எல்லாம் கண்ஜாடை காட்ட, நாணமில்லாமலே நாயினுங்கேடாய்'' என்று ஒரு நீள சங்கதியுடன் இழுக்க ஆரம்பித்தவுடன், களைப்பு நீங்கி, களிப்புற எண்ணிய கணவன், என்ன ஆத்திரமடைகிருன்! என்ன ஏமாற்றமடைகிருன்! ஸாகித்தியத்தைக் கவனியாது பாடும் மூடத்தனத்துக்காக என்ன வருத்த மடைகிருன்! கூறத் திறமா?

என்னதான் ஒரு மெட்டு கவரத்தக்கதாயிருந்தாலும் அதன் மேல் அளவுக்குமீறி மோகமும் மோஸ்லும் வைத்து, சாகித்தியத்தை மறந்தால், விஷத்திற்கொப்பான அனர்த்தமும் அசம்பாவிதமும் ஏற்படுவதால், நம் பெரியோர் முதுமொழி தத்துவத்திற்கு எதுவும் விலக்கில்லை யென்று நன்கு புலப்படுகின்றது.

"அளவுக்கு மீறினல்" என்னும் தலைப்பின்கீழ் நானும் அளவுக்கு மீறி எழுதிக்கொண்டே போனல் நீங்களும் படிக்க இணங்கமாட்டீர்கள் என்பது எனக்கு நன்ருய்த் தெரியும். ஆனல், இம்மாதிரி விஷயங்கள் மட்டும் எழுதுவதற்கு அளவுக்கு மீறியிருக்கின்றன வென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் சந்தர்ப்பமேற்படுகையில், திரும்பவும் இவ்விஷயமாக உங்களைக் கோரி வருகிறேன்.

நேயர்களே! உஷார். சங்கீதத்திலும், வாழ்க்கையிலும், எதிலும் அளவுக்கு மீறினல்............?

---

## சம்மதமில்லாமலா சமஷ்டி

"கால் நடைகள்போல, மிருகங்களைச் செய்வதைப்போல, சம்மதமின்றி அங்கும் இங்கும் மாற்றக்கூடிய வஸ்துக்களல்ல ஜனங்கள்! சமஸ்தானங்கள் பிரதிநிதிகளுடன் காங்கிரஸ் சமஷ்டியில் சேர்ந்து உட்கார மறுத்து விட்டது. ஆதலால், சமஸ்தான ஜனங்களுக்குச் சரியான பிரதிநிதித்துவம் இல்லாவிடில் சமஸ்தானங்களில் பொறுப்பாட்சி ஏற்படுத்தப் படாத வரையில், காங்கிரஸ் இவ் விஷயத்தைப்பற்றிக் கொஞ்சம்கூட சிந்தனையே செயயாது."

—சர்தார் படேல்.

# போலீஸ் நிர்வாகமும் காங்கிரஸ் மந்திரி சபையும்

போலீஸ் நிர்வாகம் சம்பந்தமாக சர்க்காரின் நோக்கத்தை விளக்கி சென்னை அசெம்பிளியில் பிரதம மந்திரி பின்வருமாறு கூறினார்:—

"போலீஸ் இலாக்கா செலவு முன் வருஷங்களிலிருந்ததுபோலவே தான்; ஆனால் ஒவ்வொரு வருஷமும் நிர்வாக மாறுதல்களால் சிறிதளவு விசேஷ செலவு அவசியமாகிறது. பெரிய மாறுதல் எதுவுமில்லை. இதனை நிச்சயமாக நம்பலாம். இந்த இலாக்கா, சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்க வேண்டியிருப்பதால், இது மிகவும் பொறுப்பு வாய்ந்ததாகும். இந்த இலாக்காவின் முக்கிய பலத்திற்குப் பிரதிநிதி கான்ஸ்டேபிளே. இதுவரையில் கான்ஸ்டேபிள் நேர்முகமாக ஜனங்களுக்கு ஊழியம் செய்யவில்லை; ஆனால் ஒரு அந்நிய அதிகாரத்திற்கு ஊழியம் செய்ததன் மூலமே. மாகாண அரசியல் சட்டம் மாறிவிட்டபடியால், கான்ஸ்டேபிள் முற்றிலும் புது நிலைமையில் வைக்கப்பட்டிருக்கிறார். தேசத்தின் மாறுபட்ட நிலைமையின்கீழ் கான்ஸ்டேபிள் விஷயத்தில் பொறுமை காட்டும்படி நான் பொது ஜனங்களை வேண்டுகிறேன். பொது ஜன ஊழியத்திற்குப் புது சந்தர்ப்பம் பெற்றிருக்கும் கான்ஸ்டேபிளைக் கண்டனஞ் செய்வது கொடிய செயலாகும். புது நிலைமையில் கான்ஸ்டேபிள்களின் மனோபாவம் முற்றிலும் மாறவேண்டியிருக்கிறதென்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

"இத் தேசத்தின் நிர்வாகத்தைச் சீர்திருத்தும் விஷயத்தில் மிகவும் முக்கியமான அஸ்திவாரமாக விருப்பது போலீஸ் இலாகாதான். ஆகவே நான் இவ்வளவு பரிந்து பேசுகிறேன். மிக கஷ்டமானதும் பாராட்டப்படாததுமான வேலை செய்யும் இந்த இலாகாவை நன்றாக நடத்தினால் தான், அவர்களுடைய வேலையை நாம் உணர்ந்து அவர்களை தாமாக தங்களை நல்ல அந்தஸ்துக்குத் திருத்திக்கொள்ள அனுமதித்தால்தான் நமது லட்சியம் பூர்த்தியாகும். போலீசாரின் தடியடிபட்டவர்கள் 'இந்த இலாகாவை ஒழித்து விடலாம்' என்று கூறுவது சுலபமாகும். அப்படிச் செய்வதால் நிர்வாகத்தின் ஒரு முக்கிய அங்கம் தொலைந்துபோம். போலீஸாருக்கும் பொது ஜனங்களுக்குமுள்ள சம்பந்தம் முற்றிலும் சீர்திருந்த வேண்டுவது மிக்க அவசியமாகும். போலீசாரின் கஷ்டங்களைக் கவனியாமல் அவர்களை நடத்துவதால் அவ்வித பலன் ஏற்படாது. ஆகவே நான் இந்த மான்யம் மிகவும் முக்கியமானதென்று கருதுகிறேன். நான் எந்த உணர்ச்சியுடன் கேட்கிறேனோ அதே உணர்ச்சியுடன் இக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும்."

## காவல் புரியும் நாயின் குணம்

"காவல் புரியும் நாயை இந்நாட்டில் இதர நாடுகளைப்போல் அவ்வளவு அன்போடும் விஸ்வாசத்துடனும் நடத்துவதில்லை. ஆனால்

நாய் நமது வீட்டையும் வயல்களையும் கால் நடைகளையும் குழந்தைகளையும அன்போடு காவல் புரிவதை உணர்ந்தவுடன் நாம் அந்நாயை நேசிக்காம லிருக்க முடியாது. மெம்பர்களில் பலரிடம் நாய்கள் இருக்கின்றனவா யென்பதும், அவர்களுக்கு அந் நாய்களின் குணம் தெரியுமா வென்பதும் எனக்குத் தெரியாது. காவல் புரியும் நாயிடமிருந்து நாம் பல படிப் பினைகளைத் தெரிந்து கொள்ளலாம். ஒரு கான்ஸ்டேபிள் ஒரு காவல் நாயைப்போல் அன்பும விஸ்வாசமும் கொண்டு நடக்கும்படிச் செய்யலா மென்று நான் கூறுகிறேன். போலீஸ் உடை தரித்திருந்தபோதிலும் அவர் மனிதர் என்பதை நான் அறிந்து கொள்ள வேண்டும். போலீஸ் உடை இல்லாமல் அவர் வீட்டிலிருக்கும்போது நம்மைப்போல் கனவா னாகவே இருக்கிறார். கான்ஸ்டேபிள் எந்த உடை வேண்டுமானாலும் தரித்துக் கொள்ளலாம். ஆனால், அவரும் ஒரு மனிதரே. அவரது சம்பளம் சொல்பமே. நாள் முழுதும் அவர் வெயிலில் நிற்கிறார். அவர் ஒரு மனிதரென்பதை மறந்து, அவரை ஒரு மிருமாக மதிக்கிறோம். அவரது தவறையும் குறைகளையும் நாம் சகித்துப் போகவேண்டும். அவரது வேலையைப் பாராட்டவேண்டும்."

"தற்போது போலீஸ் படையைக் குறைப்பது சாத்தியமல்ல. ஆனால், தேசத்தின் நிலைமையும் ஜனங்களின் குணமும் நல்லதாகுமென்றும், தன் முயற்சி, தற்பாதுகாப்பு, ஒத்துழைப்பு கட்டுப்பாடு, இவை ஏற்படுமென்றும் அப்பொழுது இவ்வளவு கான்ஸ்டேபிள்கள் அவசியமல்லாமற் போய்விடு மென்றும் நான் நம்புகிறேன். அவ்வித நிலைமை ஏற்பட அதிக வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே போலீஸ் படையைக் குறைப்பதாக வாக்களிக்க முடியாது. மாகாணத்திற்குப் பணம் அதிக மில்லாததால் போலீசை அதிகப்படுத்தவும் முடியாது.

"திறமைக்குப் பங்கமின்றிச் சர்க்கார் உத்தியோகங்களில் எல்லா சமூகங்களையும் சேர்ந்தவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டு மென்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். போலீஸ் படையில் வகுப்பு உணர்ச்சியைப் புகுத்தும் எண்ணத்தை நான் பலமாகக் கண்டிக்கிறேன்; போலீஸ் படையில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டுமென்று பேசு வதால் பெரும் ஆபத்துக்கள் விளையும். ஆனால் சர்க்கார் போலீஸிலும் ராணுவத்திலும எல்லா சமூகங்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் விஷயத்தைக் கவனத்தில் வைக்க வேண்டும்; அவ் விஷயத்தைப்பற்றி அசெம்பிளியில் பேசுவது அபாயகரமான செயல். ஸ்பெஷல் போலீஸை எடுத்துவிடும் காலம் சீக்கிரம் வருமென்பது எனது நம்பிக்கை."

---

## சுதந்திரம் நிச்சயம்

"எங்கள் வாழ்நாட்களுக்குள்ளேயே இந்தியா சுதந்திரமடைந்து விடுமென்று நான் கூறுவது வெறும் விளையாட்டுப் பேச்சல்ல."

"காங்கிரஸ் பலத்தை உணர்ந்த எவரும் பிரத்யக்ஷமாக நிலைமையை அறிந்த யாவரும் நம் வாழ்நாட்களுக்குள்ளேயே இந்தியா சுதந்திர மடைந்து விடுமென்பதைக் கூறுவார்கள்."

—சுபாஷ் பாபு.

# காந்திஜியின் அமுத மொழிகள்

## தேசீயக் கல்வி

"வார்தா கல்வித் திட்டத்தில் காணப்படும் தேசீயக் கல்வி, தேசீய உணர்ச்சியையும் தேச சேவகர்களையும் உற்பத்திச் செய்யும். காங்கிரஸ் இப்பொழுது பதவி யேற்றிருப்பதால், தேசம் பூராவும் ஒரேவித கல்வி முறையைப் பரப்பவேண்டிய அவசிய மேற்பட்டிருக்கிறது. இந்த லக்ஷ்யத்தை ஞாபகத்தில் வைத்துக்கொண்டுதான் வார்தா கல்வித் திட்டம் தயாரிக்கப்பட்டது. கல்வியைத் தாய் பாஷையின் மூலம் போதித்தால்தான் இந்த லக்ஷியத்தை அடைய முடியும். காங்கிரஸ் இத்திட்டத்தை அங்கீகரித்துவிட்டது. ஆகவே இப்பொழுது ஆங்கில கலாசாரம், பாஷை இவைகளில் நடத்தப்படும் நிர்வாகத்தில், இந்தத் திட்டத்தை நுழைக்க முயற்சிக்கவேண்டியது இம்மகாநாட்டின் கடமையாகும்."

## அஹிம்ஸையின் உயர்வு

"பயந்தாங்கொளிகள், அவர்களுடைய சக்தியின்மையை அஹிம்ஸா ஆயுதத்தால் மறைத்துக் கொள்ளவேண்டாம். இப்படி மறைத்துக்கொள்வதைவிட, நமக்கு அந்த (அஹிம்ஸா) கொள்கையில் நம்பிக்கையில்லையெனச் சொல்லிவிடுவது ரொம்பவும் நல்லது."

"நீங்கள் அனைவரும் தைர்யமான அஹிம்ஸா வீரர்களா யிருங்கள். அஹிம்ஸா வீரர்களுக்கு, ஆயுதங்கள் தாங்கிய படைக்குள்ள சக்தியில் எள்ளளவேனும் குறைவாகவிருக்காது. ஏனெனில், சத்தியமும், அஹிம்ஸையும், இவைகளின் சொந்த பலத்தாலேயே 'பேடெண்ட்' ஆயுதங்களா யிருக்கின்றன."

## எது ஸ்வதேசிக் கம்பேனி ?

"ஸ்வதேசி கம்பெனிகள் என்பது யாவை என்பதற்கு நான் சொல்லக்கூடிய வியாக்யானம் இது ஒன்றுதான். மானேஜிங் டைரக்டராலோ அல்லது மானேஜிங் ஏஜெண்டுகள் அதிகாரத்திலோ எந்த ஒரு கம்பெனியின் நிர்வாகம், ஆதிக்கம், நடைமுறை ஆகியவைகள் இந்தியர்கள் கையிலிருக்கிறதோ அவைகள் ஸ்வதேசிக் கம்பெனிகளாகும். நமக்கு அவசியமானபோதோ அல்லது இந்தியாவில் இல்லை யென்றால் வெளிநாட்டின் திறமை, உழைப்பு ஆகியவைகளை நாம் அமர்த்திக் கொள்வது அல்லது வெளிநாட்டினர் முதலை உபயோகப்படுத்திக்கொள்வதையும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் ஒரு நிபந்தனையில், மேற்சொன்ன முதலோ அல்லது அமர்த்திக்கொள்ளப்படும் வெளிநாட்டினரோ முற்றிலும் இந்தியர்களது ஆதிக்கத்தின் நிர்வாகத்தில் இருக்கவேண்டும். இவைகள் இந்தியாவின் நலனிற்கு உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

வெளிநாட்டினரை வேலைக்கு வைத்துக்கொள்வதும் வெளிநாட்டு முதல் பணத்தை உபயோகப்படுத்திக் கொள்வதும் ஒரு விஷயம்; வெளிநாட்டுக் கைத் தொழில் கம்பெனிகளை இங்கு நுழைப்பது முற்றிலும் வேறு விஷயம். நீங்கள் கூறிய கம்பெனிகள் கொஞ்சங்கூட சுதேசி கம்பெனி

களென்றே கூற முடியாது. இந்தமாதிரி கைத்தொழில்களைச் சம்மதித்து ஏற்றுக்கொள்வதைவிட பிரஸ்தாப கைத்தொழிலை நாமே வளர்த்து நடத்தவும் நம்முடைய தேசத்திலேயே பணம் அகப்படும் வரையிலும் அபி விருத்தி செய்யாமல் சில வருஷங்கள் பேசாமல் விட்டு வைப்பதை நான் ஆதரிப்பேன். இந்தமாதிரி கைத்தொழில்கள் முற்றிலும் இந்தியர் நிர் வாகம், ஆதிக்கத்தில் நடத்தும்படியான காலம் வரும் வரையில் இவைகளை அபிவிர்த்தி செய்யும் விஷயத்தை தாமதப்படுத்துவதை நான் விரும்பு வேன்."

---

## ஸ்டுடியோச் செய்திகள்

---

### "ஜலஜா"

சாகர் மூவிடோன் ஸ்டுடியோவில் "ஜலஜா" படம் எடிட்டிங் நடந்து வருகிறது. வெகு நேர்த்தியாக இருக்கிறதாம். இப்படத்தை இந்தியா முழுதும் மட்டிலுமல்ல; அயல் நாடுகளிலும் காட்ட ஸ்ரீபடேல் ஏற்பாடு செய்திருக்கிறாராம். சென்னை பிராட்வே டாக்கீஸில் விரைவில் வெளிவரும்.

### "பக்த மீரா"

மேவார் தேசத்துக்கு ராணா, ஒரு பெரிய சக்திவாய்ந்த அரசரே; மொகலாயர்களுக்கு ஜென்ம விரோதியும் கூட; மிகுந்த மனக் கிலேசத் துடன் விளங்குகிறார். அவரது மனைவியான மீராவைத் தன் சக்தியால் கட்டுப்படுத்த முடியாமல் விட்டுவிட்டது அவருக்கு வருத்தத்தை யூட்டியது. ஏதாவது செய்யலாமென்றாலோ அவளோ தெய்வபக்தியின் திருச்சுடராக விளங்குகிறாள். மீரா அவரிடம் காட்டும் பரா முகமும், அவளைப்பற்றிய சில சம்பவங்களும் ராணாவை மிகவும் கஷ்டப்படுத்தின. என்ன செய்வார்? விஷயம் ஆராய்ந்து பார்க்கத்தக்கதன்று. மனைவியின் மீது அவரது வெறுப்பு இருக்கத்தான் செய்கிறது. உண்மை யென்ன வெனில் மீரா தன் வேதாந்த வழிபாடுகளில் கணவனுக்கு இடங் கொடுக்க முற்படாததுதான். இதுவே ராணாவுக்குப் போதும். அவர் முகத்தில் எள்ளு வெடிக்கிறது. ராஜ உத்திரவு ஒன்று பிறப்பிக்கிறார். அவளை மரண தண்டனை அடையும்படி உத்திரவிடுகிறார். உள்ளிருக்கும் வாஞ்சை அவரைத் தூண்டுகிறது. இருபக்கமும் முரண்பாடு.

இந்த விதமான மனோ பாவங்களை வெகு அழகாகச் சித்தரிக்கிறார், ஒய். எச். ராவ் என்றவர். ஸ்டுடியோ வேலைப்பாடுகள் வெகு அருமையாக விருந்தன. டைரக்டர் ஒய். வி. ராவ் மிகுந்த விலையுயர்ந்த அமைப்புகளைக் கேட்டும், அதற்குமேல் மேன்மை கொண்டே எல்லாம் காணப்படுகின்றன.

தயார் ! தயார் !!

காணத் தகுந்த காக்ஷி ! காதல் மணம் கமழும் காக்ஷி !

எது ?

**அதுவே வி. எம். கோதைநாயகி அம்மாளின்**

அரிய கற்பனையான

# "அனாதைப் பெண்"



எம். கே. ராதா—கதாநாயகன்; துரைராஜா.

நடிகமணிகள் நடிக்கும் உன்னத படம்

அனாதைப் பெண் உங்கள் ஊருக்கு விஜயம் செய்யும் நன்னாளை

**எதிர்பாருங்கள்!**

டைரக்ஷன் :—ஆர். பிரகாஷ்

JUPITER PICTURES LIMITED TIRUPUR

அனாதைப் பெண் பாடல்களை

ஓடியன் ரிகார்டுகளில்

எதிர்பாருங்கள் !

**பிராட்வே டாக்கிஸ்""க்கு—நான் வருகிறேன்!**

எனது நடனம், எனது சங்கீதம் இவற்றால்
உங்களை மகிழ்விக்க, உங்களைப் பரவசப்படுத்த



**ஜலஜா**
என்ற
சாகர்-ரினைசான்ஸ்
தியேட்டரின்
தமிழ்ப் படத்தில்!

என் பெயர் **பானுமதி**
அவர்கள் அழைப்பதோ

# ஜலஜா

# ஜலஜா

(கோயில் நாட்டியக்காரி)
என்றுதான்!

ஏனென்று எனக்குத் தெரியாது! எதற்கும்
நான் *பிராட்வேக்கு* வரும்போது பாருங்கள்

---

**ஸ்ரீ சத்தியநாராயணா அண்டு கோ**

## ஊறுகாய்கள்

பலவித இங்கிலீஷ், இந்திய காய்கறிகள் சேர்ந்த ஊறுகாயும், மற்ற இதர தினுசு ஊறுகாய்களும் இவ்விடம் செய்யப்படும்.

| | பவுண்ட் 1-க்கு |
|---|---|
| எவ்விதமான ஊறுகாய்களுக்கும் | ரூ. 1—0—0 |
| சாம்பிள் பாட்டில் (பெரிய சயிஸ்) | ரூ. 0—4—0 |
| சாம்பிள் பாட்டில் (சின்ன சயிஸ்) | ரூ. 0—2—0 |

ஆர். ராஜாங்கம் அய்யங்கார்,
1-2, சோலையப்ப முதலி தெரு,
மயிலாப்பூர், சென்னை.

---

வெளி வந்துவிட்டன!
விற்பனைக்குத் தயார்!!

இரண்டாம் பதிப்புக்கள்

**ராஜமோஹன்**
**பிச்சைக்காரக் குடும்பம்**
**நளின சேகரன்**
**சோதனையின் கொடுமை**
**அன்பின் சிகரம்**
**இன்பஜோதி**
**ப்ரேமப்ரபா**

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
திருவல்லிக்கேணி,
சென்னை.

OFFICE OF T... MADRAS
7-MAY 1938

எதிர்பாருங்கள்!
விரைவில் வெளிவரும்

# "பக்த மீரா"

பக்திப் பரிமளம்

கர்ணாம்ருத கானம்

டைரக்ஷன்:

ஒய். வி. ராவ்

நடிகர்கள்:

ஒய். எச். ராவ், பி. ஏ.
வசுந்தராதேவி
வித்வான் ஸ்ரீநிவாஸன்
எல். நாராயண ராவ்
எம். ஆர். துரைராஜ்

ஸ்டுடியோ:

நியூ டோன்ஸ்
ஸ்டுடியோஸ்,
கீழ்ப்பாக்கம், சென்னை.

சிந்தாமணி பிக்சர்ஸ்
லிமிடெட்,
116, ராயப்பேட்டை ஹைரோடு,
சென்னை.

| தந்தி: | போன்: |
| --- | --- |
| காமதேனு. | 8331 |

'பக்த மீரா'வின் கீதங்களை
ஒடியன் ரிகார்டுகளில்
எதிர்பாருங்கள்.

# டாக்கி விமர்சனம்

## கிருஹலக்ஷ்மி

தமிழ் நாட்டில் தமிழ் ஸ்டூடியோவில் தெலுங்கரின் வெற்றி என்ருல் அது மிகையாகாது. அது,தமிழர்களுக்கு ஓர் உணர்ச்சியை ஊட்டும் கருவியேயாகும். மரத்திலிருந்து சரகு உதிர்வதுபோல் தினம் ஒரு தமிழ்ப் படம் வெளியாவதும் அதைப் பார்த்துவிட்டு மனக் கசப்புடன் திரும்பி வருவதுமாகவுள்ள சமயத்தில் "கிருஹலக்ஷ்மி" மக்களுக்கோர் உன்னத கலை நடிப்புச் சிகரம்போன்ற விருந்தேயாகும் எனலாம். சலித்துப்போன பழய கதையாயினும் ஸ்ரீமான் ரெட்டியார் அதில் புதிய ஜீவ நாடிகளை உண்டாக்கி, புத்தியிருடன் சிருஷ்டித்திருப்பதுதான் போற்றத் தக்க தாகும். நம் புராணங்களிலும் சரித்திரங்களிலும் "மேகமே நீ கண்டாயா? நீ சொல்லு. காற்றே; செடியே; கொடியே; பக்ஷியே!" என்றெல்லாம் விசனம் நிறைந்தவர்களும், பிரிவாற்ருத் துயருடையோரும் புலம்பிய தாகப் படிக்கிருேம். "சுவருடனுவது சொல்லி ஆறு" என்பது முது மொழி. இவ்விரண்டு தத்துவங்களின் சாரத்தையும் தேச பக்தர்களைக் கதாநாயகி அவர்களின் செய்கைக்கேற்ற வசனங்களுடன் முறையிட்டுக் கதறும் காட்சியாகச் சித்தரித்து அந்தப் பாகத்திற்கு ஒரு அற்புதமான நூதன ஜீவனைக் கொடுத்திருப்பது மிக மிகப் போற்றத் தக்க பாகமாகும். இதனுல் தேசத் தலைவர்களுக்கு ஏற்கெனவே உள்ள மதிப்பை இன்னும் ஒரு படிக்கட்டு உயர்த்தி பாமர மக்களின் மனத்தில் பதிய வைக்கும் பிரசாரமாகவும் அமைந்திருக்கிறது. சத்தியத்திற்கே பாடுபடும் மகாத்மா காந்தியடிகளின் முகத்தில், குற்றவாளியின் முகம் தெரியச் செய்து விளக்கியிருப்பது மிகவும் சிறந்த நோக்கமாகும்.

தமிழ்ப் படங்களில் ஹாஸ்யமென்ற பெயருடன் குப்பைகளைப் புகுத்தும் முதலாளிகளும் டைரெக்டர்களும் இந்தப் படத்திலுள்ள கம்பீர மான உயர்ந்த ஹாஸ்யத்தைப் பார்த்த பிறகாவது, தமது நைந்துபோன வழக்கத்தை விட்டு விடுவார்களென்று எதிர் பார்க்கிருேம்.

நடிப்பில் போட்டாபோட்டி என்ருல் மிகையாகாது. நாகையாவின் தோற்றம் தத்ரூபம் உயர்ந்த தேச பக்தரைப்போலவே இருக்கிறது. காஞ்சனமாலாவின் நடனம் அற்புதம். கண்ணும்பாளின் நடிப்பில், பிற்பகுதி நடிப்பின் சிகரத்தையே எட்டியதென்று கூறலாம். தற்காலத்தை உபயோகப்படுத்திக் கொண்டு இத்தகைய தேசீய பிரசாரப் படத்தை முதன் முதல் எடுத்து உதவிய பெருமை, ஸ்ரீமான் ரெட்டியாருக்கே உரித் தாகும். இனியாவது தமிழ்ப் பட முதலாளிகள் இம்மாதிரி ஒரு புதிய படத்தைத் தயார் செய்ய முன் வருவார்களா?...

## "கிரிஜா"

[**28** பைகிராப்ட்ஸ் ரோட் திருவல்லிக்கேணி, சென்னை.]

"கிரிஜா" என்னும் புதிய மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று, ஸ்ரீமான் எம். எஸ். ராமசாமி ஐயரை ஆசிரியராகக் கொண்டு, ஏப்ரல் மாதத்தில் வெளி வருமென அறிகிருேம்.

# நூதன குறள்

செயற்கை யானுய அறிவையும் தீர்க்கும்
இயற்கையே ஊழுக்(கு) இயல்பு. 1

ஊழினுல் தம்பொருள் போன துணர்ந்தக்கால்
தாழார் துயரத்துள் தாம். 2

செய்தற்கே யல்லாது சூழ்தற் கிடங்கோடா(து)
எய்தற் குரியதாம் ஊழ். 3

ஊழை ஒழிக்கும் உபாயமும் உண்டோதான்
ஏழை ஒருவற்(கு) இயைந்து. 4

பிறர்பால் உளதாம் பெருமை யறியார்
இகழ்வார் அறியாமை யால். 5

---

## கிராம்பை உபயோகிக்காதீர்கள்

### ராஷ்டிரபதியின் அறிக்கை

"நான் பம்பாயில் இருக்கும்போது கல்கத்தாவில் ஜான்ஸிபார் கிராம்பு பகிஷ்கார விஷயமாக எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவும் செய்யப்படவில்லை யென்றும், கள்ளத்தனமாகக் கிராம்பு வரவழைக்கப்படுவதாகவும், ஜான்ஸிபார் கிராம்பு பகிஷ்காரத்தில் துடியாகவுள்ளவர்களில் பலர் என்னிடம் கூறினுர்கள். இந்தக் கூற்று எவ்வளவு தூரம் நிஜமானதென்று சொல்லும்படியான நிலைமையில் இப்போது நான் இல்லை.

ஆயினும் வெளிநாட்டுக் கிராம்பு இறக்குமதியாவதைத் தடுக்குமாறு நான் காங்கிரஸ் கமிட்டிகளை கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் உடனே நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். ஜான்ஸிபாரில் உள்ள நமது இந்தியர்கள் கோரிக்கைகளுக்கு ஜான்ஸிபார் சர்க்கார் இணங்கும் வரையில் பொது ஜனங்களும் கிராம்பை உபயோகப்படுத்த வேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஜான்ஸிபார், மடகாஸ்கர், ஜாவா கிராம்பு என வித்தியாசம் கண்டு பிடிப்பது துர்லபம். ஆகையினுல் அவைகள் எங்கிருந்து வந்தாலும் சரி எல்லா வெளிநாட்டுக் கிராம்புகளையும் பகிஷ்கரிக்கவேண்டியது அவசியமாகிறது. பகிஷ்காரத்தை கடுமையாக்க வேண்டுமானுல் பொது ஜனங்களும் கிராம்பு உபயோகத்தை நிறுத்தவேணடியதும் அவசியமாகிறது. இப்

போது அப்படியும் இப்படியும் அபிப்பிராயமுடைய கிராம்பு வியாபாரிகளையும் இது வழிக்குக்கொண்டுவரும்.

இவ்விஷயமாக சென்னை துறைமுகத்திலும் கிராம்பு இறக்குமதியாவதைக் கண்டிப்பாகத் தடுக்க வேண்டுமென்ற அவசியத்தைச் சென்னையிலுள்ள காங்கிரஸ் ஸ்தாபனங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

## காற்றுள்ளபோதே தூற்றிக்கோள்

### சுபாஷ் பாபுவின் கர்ஜனை

"ஆஸ்டிரியாவில் நடந்த சம்பவங்களானது பிரிட்டனும் பிரான்சும் ஜெர்மனியை எதிர்க்க முடியவில்லை யென்பதையே காட்டுகிறது. முஸோலினியைக் கண்டும், ஜப்பானைக் கண்டும் பிரிட்டன் அஞ்சுகிறது.

அயர்லாந்தைப் பாருங்கள். இப்போது டிவேலரா புதிதாக மீண்டும் இங்கிலாந்துடன் சமரசப் பேச்சு நடத்தி வருகிறார்.

இதுதான் நமது தருணம். நாம் யாவரும் ஒரு முகமாக நின்று இந்தியாவின் கோரிக்கையைக் கோருவோமாக. சர்வதேச நிலைமையை நீங்கள் கவனித்தால், மற்ற வல்லரசுகளை எதிர்க்க இங்கிலாந்திற்குத் தைரியமில்லை யென்பதை நீங்கள் காண்பீர்கள். எப்போதும் அது தன்னைக் காத்துக் கொள்வதிலேயே கவனத்தைச் செலுத்துகிறது. இந்த நிலைமையில் இங்கிலாந்து இந்தியாவின் கோரிக்கைக்கும் இணங்கியே யாகவேண்டும். எதிர்ப்பதற்கில்லை."

"இவ்வளவு நாள் கழித்து நாம் காத்திருந்த சரியான சமயம் வந்துவிட்டது. இந்தியா, சர்வதேச நிலைமைகளைக் கவனித்தால், இந்தமாதிரியான நிலைமை என்றுமே ஏற்பட்டதில்லை. நமது ஜனங்களுக்கு மட்டும் தேவையான தேச பக்தியும், ராஜ தந்திரமும் இருக்குமானால், இந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்."

## சுழல் காற்றின் சதி

கோமில்லா ஜில்லாவின் மேற்கு எல்லையில் உள்ள ஜௌதாலா, காலம்பக், கதாமிச்சார் என்ற கிராமங்களில் அடித்த சுழல் சண்டமாருதத்தின் (பேய்த்தேர்) விளைவாக 60 பேர் மாண்டனர் என்றும், பல நூற்றுக் கணக்கானவருக்குக் காயம் என்றும் தகவல் கிடைத்திருக்கிறது.

குடிசைகள் மரங்கள் யாவும் தரை மட்டமாயின. கால்நடை சேதத்திற்குக் கணக்கில்லை.

# ஆஸ்டிரியாவின் கதி

## ஹிட்லரின் கனவு நனவாகியது

"ஒரு சிலர் மட்டுமின்றி, ஜெர்மன் மக்கள் எல்லோருமே மகத்தான சவுஜன்ய வாழ்க்கையை ஸ்தாபிக்க விரும்புகின்றனர் என்பதற்கு இத்தனைப் பேர்கள் இங்கு கூடியிருப்பதே போதிய அத்தாட்சியாகும். இந்த நகரிலிருந்து என்னைக் கிளப்பி, விதி ஜெர்மன் மக்களின் தலைவனாக என்னைச் செய்தது. என் பிரிய நாட்டை மீண்டும் ஜெர்மனியிடம் சேர்ப்பிப்பதுதான் அதன் நோக்கமாயிருந்திருக்கக்கூடும்.

அந்த லட்சியத்தை நான் நம்பினேன். அதற்காகவே என் வாழ்வையும் போராட்டத்தையும் அர்ப்பணம் செய்தேன். இப்பொழுது அதை நிறைவேற்றி வைத்துவிட்டேன்.

வெகு சீக்கிரத்தில் ஸர்வஜன வோட் எடுக்கப்படும். இந்த நாட்டைப் பேதப்படுத்த எதிர்காலத்தில் முயற்சிகள் நடைபெறுமாகில் அவை வியர்த்தமாகத்தான் போகுமென்பதை அது உலகிற்கு நிரூபிக்குமென்று நான் நம்புகிறேன்.

அத்தருணத்தில் உங்களைச் சாரும் கடமையை நீங்கள் செய்யவேண்டியிருக்கும். அதைப் போலவே, ஜெர்மனி பூராவும் தன் கடமையைச் செய்யத் தயாராயிருக்கிறது. ஜெர்மனியில் எல்லா பாகங்களிலிருந்தும் துருப்புகள் இந்த க்ஷணத்தில் அணிவகுத்து வருகின்றன.

ஜெர்மன் மக்களின் ஐக்கியத்திற்காக தியாகங்களுக்கு அவை தயாராயிருக்கின்றன. [ஹிட்லரின் "லின்ஸ்" பிரசங்கம்]

### '35 லக்ஷம் மக்களுக்கு அநீதி'

ஆஸ்ட்ரியாவை ஒரு தனி சிறு நாடாக சிருஷ்டித்தது 65 லக்ஷம் ஜனங்களைத் துராக்ரகம் செய்ததாகும். அந்த சிருஷ்டி ஜீவசக்தியுடன் உயிர் வாழக்கூடியதாகவும் இல்லை. மீண்டும் ஜெர்மானியர் தம் தாய் நாட்டுக்குத் திரும்புவது குற்றமென்று கூறினார்கள். ஆனால், நியாயந்தான் ஜெர்மானியர் விஷயத்தில் கூட வெற்றி பெறும். இந்த மக்கள் தாங்களே நியாயம் பெற முற்பட்டதைக் கண்டு யாரே ஆச்சரியப்படுவர்?

### சங்கத்துக்குச் சாட்டை

தேசங்கள் கடவுளின் சிருஷ்டிகள்; ஆனால் ஸர்வ தேச சங்கம் மானிடரின் பலவீனம், பேராசை, சுயநலம் இவற்றினால் அமைக்கப் பெற்ற சந்தேகாஸ்பதமான ஒரு அமைப்பு.

ஸர்வதேச சங்கம் மறைந்துபோய் நெடு நாட்களுக்குப் பிறகு கூட தேசங்கள் நீடித்து இருக்கத்தான் போகின்றன. ஸர்வதேச சங்கத்துக்குப் புத்தியிருந்தால், அதன் ஒழுக்க முறையை உயர்தரமாக்கட்டும்.

ஜெர்மனி மீண்டும் ஒரு உலக வல்லரசாகிவிட்டது. ஆனால், பெருமை மிகுந்துள்ள ஒரு மக்கள், வெளியே தலை நீட்டக் கூடாமலிருந்தால், எந்த உலக வல்லரசுதான் அதை அமைதியுடன் பார்த்துக்கொண்டிருக்கும்?

## ஷுஸ்னிக்குடன் பேச்சு

பெர்க்டிஸ்காடென் சம்பாஷணைகளின்போது ஷுஸ்னிக்கிடம் ஒரு விஷயத்தைக் கூறினேன். ஜெர்மனி புதியசக்தி பெற்றிருப்பதாலும், ஆஸ்ட்ரியாவிலுள்ள நிலைமை நீடித்துப் புரட்சிகரமான கிளர்ச்சிகளுக்கு இடந் தருமாகையாலும், ஒரு பெரிய தேசம் இதையெல்லாம் சும்மா பார்த்துக்கொண்டிருப்பது சாத்தியமில்லாத தருணம் வருமென்று ஷுஸ்னிக்கிடம் கூறினேன். இதுதான் என் கடைசி சமரஸ முயற்சி யென்று அவருக்கு ஞாபகப்படுத்தினேன். ஆஸ்ட்ரியாவிலுள்ள என் தேச மக்களின் உரிமைகளைக் காப்பாற்றுவதென நான் திட சங்கல்பம் செய்துகொண்டிருப்பதையும் தெரிவித்தேன். ஷுஸ்னிக் விவகாரங்களை மாற்ற மறுப்பாரானால், நீதி மறுக்கப்படுகையில் எப்பொழுதுமே உபயோகிக்கப்படும் சாதனங்களைப் பிரயோகிப்போம் என்று கூறினேன். நான் நேசப்பான்மையில் ஒத்துழைப்பதாகக் கூறினேன். அதை அவர் மறுதளித்து விட்டார்.

## ‘ஷுஸ்னிக் துரோகம்’

பெர்க்டிஸ்காடென் ஒப்பந்தத்தை உடைப்பதென்று ஷுஸ்னிக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தார் என்பதைப்பற்றிச் சந்தேகமே கிடையாது. ஸர்வஜன வோட்டைப்பற்றி வதந்திகள் முதலில் என் காதுக்கு எட்டியபோது அவற்றை நான் கொஞ்சமும் நம்பவில்லை.

ஆஸ்ட்ரியாவில் நடைபெறும் தேர்தல்கள் பெருத்த மோசடிகள்தான். தன்னை ஆதரிப்பது ஜனசங்கியையில் ஒரு சிறிய மைனாரிடிதான் என்பது ஷுஸ்னிக்குக்குத் தெரியும்.

## குறுக்கிட்டதேன்?

நான் உடனே நடவடிக்கை எடுத்துக்கொண்டிராவிடில் ஸ்பெயினின் கதியே ஆஸ்ட்ரியாவுக்கும் ஏற்பட்டிருக்கும். அந்த பயங்கர நிலை ஏற்படாமல் நான் தடுத்தேன். என் தாய் நாட்டை ஜெர்மனியுடன் சேர்த்துவிடும்

மகத்தான லட்சியத்தை நிறைவேற்றினேன். நான் குறுக்கிடுவேன் என்று ஷுஸ்னிக் நம்பவில்லை.

நான் குறுக்கிட்டதற்காக ஷுஸ்னிக்கும் அவரை ஆதரிப்பவர்களும் கடவுளை வாழ்த்தவேண்டும். பல்லாயிரம் ஆஸ்ட்ரிய உயிர்களை என் சுறு சுறுப்பான நடவடிக்கையின் மூலம் காப்பாற்றினேன்.

### ஜனநாயக நாடுகளுக்கு எச்சரிக்கை

என்னுடைய முடிவை ஆதரித்து நிற்போர் ஏழரை கோடி மக்கள். அவர்களின் முன்னணியிலிருப்பது ஜெர்மன் ராணுவம்.

இந்தப் போக்கை ஜனநாயக நாடுகள் உணர்ந்து கொள்ளாமலிருப்ப தற்காக வருந்துகிறேன். இது சம்பந்தமாய் அவற்றின் மனப்பான்மையும் போக்கும் நமக்குப் புரியவில்லை. அவை நம்மை அவமதிப்பதாயிருக் கின்றன.

பிரெஞ்சு எல்லையைப்போலவே, இத்தாலிய எல்லையிலும் கை வைப்ப தில்லை என்ற உத்தரவாதத்தை முஸோலினிக்குக் கொடுத்தேன்.

### ஸர்வஜன வோட்

இந்த மகத்தான தருணத்தில் ஜெர்மன் மக்களின் சாசுவதமான கனவு பலித்துவிட்டது. இந்த ஐக்கியத்தை நம்முடைய மக்கள் எல்லோரு மாகச் சேர்ந்து ஊர்ஜிதம் செய்வோம்.

எப்ரில் 10-ந் தேதியன்று ஆஸ்ட்ரிய மக்கள் தனியாக வோட்டுச் செய்யமாட்டார்கள். ஜெர்மன் மக்கள் அத்தனைப் பேரும் கலந்துகொள் வார்கள். 65 லக்ஷம் மக்களில்லாமல், 750 லக்ஷம் பேர் இதை ஊர்ஜிதம் செய்யுமாறு கேட்கப்படுவார்கள்.

ஆஸ்ட்ரியா ஜெர்மனி ஐக்கியத்தைப் பூர்த்தி செய்ய இன்னும் நான்கு வருஷங்கள் வேண்டுமெனக் கேட்கிறேன். [ரீச்ஸ்டாக் பிரசங்கம்]

---

## பெண்களுக்குத் தனி சர்வகலாசாலை

அகில இந்திய பெண்கள் சர்வ கலாசாலை யொன்றை ஸ்தாபிக் கவும் பெங்களூரில் அதற்குத் தலைமை ஸ்தலத்தை ஏற்படுத்தவும் பெல்ஜியம் மிஷன் ஏற்பாடுகள் செய்து வருவதாகவும் இதற்கு நல்ல இடம், இதர வசதிகள் சம்பந்தமாக மைசூர் சர்க்காருடன் கடிதப் போக்கு நடத்தி வருவதாகவும் தெரிகிறது.

# இறந்த காலத்தின் இன்ப உணர்ச்சிகள்

"உலகத்தையே மறந்தவளைப்போல ஏதோ யோசனை செய்து கொண்டிருக்கிறாயே! என்ன விசேஷம், கமலா?" என்று விமலா கேட்டுக்கொண்டே வந்தாள்.

கமலா:—"ஓ! விமலாவா? வா; உட்காரு. யோசனை ஒன்று மில்லை. என் புருஷர் ஏதோ ஒரு முக்கியமான விஷயமாய் ஊருக்குப் போயிருக்கிறார். அவர் சென்ற காரியத்தைப்பற்றியும், அது நடந்தால், பிறகு எப்படியிருக்கும் என்பதைப்பற்றியும் யோசித்துக் கொண்டிருக் கிறேன்."

விமலா:—"எதிர் காலத்தைப்பற்றி எண்ணியா கோட்டை கட்டு கிறாய்! அதில் என்ன இன்ப மிருக்கிறது?"

கமலா:—"ஏன்! என் புருஷன் சென்ற காரியம் பலிதமானால் அடுத்த ஆண்டு நான் இம்மாதிரியா யிருப்பேன்? பெரிய மாடி வீடென்ன! மோட்டாரென்ன! இவைகளைப்பற்றி நினைக்கும்போதே இன்பம் சுரக்க வில்லையா?

விமலா:—"ஆமாம்! அவைகள் கை கூடாவிட்டால் என்று நினைக் கும்போது துன்பம் சுரக்குமே! கமலா! நீ என்ன சொன்னாலும் சரி. எதிர்காலத்தைப்பற்றிக் கோட்டை கட்டி ஏமாறுவது இன்பமேயில்லை. ஒருகால் அப்படியே எண்ணுவதுபோல நடந்தால், முன்பே மனத்தினால் அனுபவித்து விட்டதனால் அதில் புதிய ருசியுமிருக்க முடியாது. நிகழ் காலத்தைப்பற்றிக் கூறவே வேண்டாம். அதன் உணர்ச்சி யந்திரம் போன்றது. நாம் இறந்த காலத்தைப்பற்றி எண்ணும் உணர்ச்சி இருக் கிறதே!—அதில்தான் இன்பம் பொதிந்து கிடக்கின்றது. என்னுடைய தனிமையான காலம் முற்றும், இறந்த கால உணர்ச்சியிலேயே கழிப்பேன். அது எப்போதும் மனதிலேயே இருக்கும். வருங்காலமென்றால் கூடவே சலிப்பு, ஏமாற்றம், தடுமாற்றம் முதலிய எத்தனையோ இருக்கும்.

கமலா:—"அதென்ன நீ புதிதாகச் சொல்லுகிறாய்? இறந்த காலத்தைப்பற்றி நினைக்கவும், இன்ப உணர்ச்சி பெறவும் என்ன இருக் கிறது? அப்படி நீ எதை எண்ணிப் பூரிப்பாய்? சற்றுச் சொல்லேன் பார்ப்போம். நானும் கேட்கிறேன்.

விமலா:—எதை எண்ணுவதென்று கேட்கிறாய்? நமக்குப் புத்தி தெரிந்த நாள் முதல் இன்று இதுவரையில் நம் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்கள் எத்தனையோ இருக்கலாம். அவைகளில் பல பெரிதாயும்,

பல சிறிதாயும், பல உபயோகமற்றதுபோலத் தோன்றுவதாயும் இருக்கலாம். அப்போது அதன் அருமை தெரியாது; இப்போது நினைத்துப் பாரு; எத்தனை அற்புதக் காட்சியாய்த் தோன்றுகிறது! இப்போது நமது குழந்தைகள் நம்மை காலணுவுக்குத் தொந்தரவு செய்யும் நிலைமையை நாம் அடைந்து விட்டோம்.

அந்தக் காலத்து இளமையின் அழகு, களங்கமற்ற மனத்தின் போக்கு, நிர்மலமான இதயத்துடன் கூடிய விளையாட்டு, சலிக்காத ஓட்டம், ஆட்டம், பாட்டம், ஆஹா! அந்தக் குதூகலம் இப்போது வருமா? சற்று யோசித்துப் பார்.

கமலா :—ஆமாம் விமலா! நீ சொல்வது வாஸ்தவமாகத்தான் தோன்றுகின்றது. நான் சின்ன வயதில் காலணுவும் அரையணுவுமாக அப்பா ஜேபியிலிருந்து திருடிக்கூட மிட்டாய் வாங்க ஓடுவேன். அடடா! அந்தக் காலம் மறைந்து எத்தனை வருடங்களாய்விட்டன! அப்பொழுது அச் செய்கைகள் பாவமென்று சிறிதும் தோன்றவே இல்லை. இப்போது அதை நினைத்தால் எப்படியிருக்கிறது!

விமலா :—அதற்குத்தான் சொல்லுகிறேன். அப்போது செய்த சில காரியங்கள் மிகவும் சந்தோஷமாயும், திருப்தியாயும்—அல்லது, பரம கஷ்டமாயும் வெகு துன்பமாயும், கசப்பாகவும் கூடத் தோன்றியிருக்கலாம். இப்போது அவைகளே நேர்மாறான உணர்ச்சியுடன் தோன்றலாம்.

உதாரணமாகப் பாரு :—நமக்குச் சற்று வயது வந்த பிறகு, "கண்டபடி திரியாமல், கண்டவர்களுடன் பேசாமல், கடைகளுக்கு ஓடாமல் சமத்தாக இரு. கண்ட புருஷர்களுடனும் பேசாதே. இது மஹா குற்றம்!" என்று வீட்டில் பெரியவர்கள் கண்டித்துக் கூறும்போது எத்தனை கஷ்டமாயிருந்தது! பின்னும் 'நன்றாக பாட்டுகளை நெட்டுரு பண்ணு; பாடங்களைப்படி; கை வேலைகளைச் செய்; வம்பளக்காதே; ஒழிந்த நேரத்தை வீணாக்காமல் வீட்டு வேலைகளைச் செய்ய கற்றுக்கொள். நீ அதிர்ஷ்டக்காரியாகப் பல வேலைக்காரர்களைப் படைத்த ராணிபோல விருக்கும் பாக்கியம் கிடைத்தாலுங்கூட சகல வேலைகளும் உனக்குத் தெரிந்திருந்தால்தான் வேலைக்காரர்கள் உன்னை ஏமாற்றாது வேலை செய்வார்கள். உனக்கு வேலையின் நோட்டமே தெரியாவிட்டால், அவர்கள் வெகு எளிதில் உன்னை ஏய்த்து விடுவார்கள். ஆகையால் சமையல், பலகாரங்கள், இதர வேலைகள் எல்லாம் செய்யக் கற்றுக்கொள்"

என்று என் அத்தையும், பாட்டியும் சொல்லும்போது எனக்கு வந்த கோபத்திற்கு அளவே இட முடியாது. சிறுமிகளுடன் கும்மாளமடித்து விளையாடும் நேரம் கொள்ளைபோய் விட்டதுபோலத் தோன்றும். அப்போது கசந்ததே, அதன் பலன் இப்போதல்லவா தெரிகிறது! எனக்கு எல்லாப் பலகார வகைகளும், சமையல் வகையறுக்களும் செய்யத் தெரிந்திருப்பதால் தான் சமையல்காரன் பயபக்தியோடு நன்றாகச் செய்கிறான். அப்படித்தான் மற்றவை எல்லாம்.

கமலா! இம்மட்டுமல்ல. இறந்த காலத்தின் இன்ப உணர்ச்சிகள் இன்னும் அனந்த மிருக்கின்றன. நாம் கல்யாணமாவதற்கு முன்பு இருந்தது, கல்யாணம் ஆனது, அதன் பின்பு புக்ககம் சென்றது, இப்போது இருப்பது இவைகளை யெல்லாம் நினைத்துப் பாரு. இப்போதுதான் மணப் பந்தலில் உட்கார்ந்திருந்ததும் நம்மைச் சுற்றி ஆரவாரத்துடன் பெண்கள் விளையாட்டும், பரிகாசமுமாக "நலங்கிடு, சந்தனம் பூசு, பூச்சூட்டு, மாலை போடு" என்றெல்லாம் கூறுவதுபோல ஒலிக்கின்றது. ஆனால், நாம் இப்போது எப்படி இருக்கின்றோம்!

நான் என் ஞாபகத்திலிருப்பவைகளில் சிலவற்றைச் சொல்லுகிறேன், நான் சிறியவளா யிருந்தபோது முதன் முதல் மோட்டார் வண்டி தலைப் பட்டு இவ்வூருக்கு வந்தது. இதைவிட அதிசயமான மனிதன் பலூனில் பறக்கும் காட்சியும் வந்தது. அவ்விரண்டையும் பார்த்து ஜனங்களுக்கிருந்த ஆச்சரியம் கூறத் தகுமா? புதியதாக மோட்டார் வாங்கிய ஒரு பெரிய மனிதர், தினமும் ஒருமுறை 'பம், பம்' என்று ஹாரன் அடித்துக்கொண்டு தெருத் தெருவாய்ச் சுற்றி வருவார். அந்தச் சப்தத்தைக் கேட்கும்போதே குழந்தைகளுக்கு மட்டுமின்றிப் பெரியவர்களுக்கும் ஆனந்தம் பொங்கி விடும். கிருஷ்ணனின் வேணுகானத்தின் இன்னிசையைக் கேட்டுக் கோபிகள் மயங்கினதுபோல இந்த ஹாரனைக் கேட்டதும், அவரவர் செய்து கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு ஓடிவந்து பார்ப்பார்கள். பலூனையும் அப்படித்தான். அதே மோட்டாரை இப்போது பார்த்தால், யாருக்கு வியப்பு உண்டாகிறது? எறும்பு, எலி, பெருச்சாளி முதலியன ஓடுவதுபோலாகிவிட்டன. மோட்டாரில் வருத மனிதர்கள்தான் ஏது? இப்போது நானே ஒரு மோட்டார் வாங்கினாலுங்கூட முதன்முதல் பார்த்த அந்த ஆனந்தமும், உணர்ச்சியும் ஏற்படுமா?

அக் காலத்தில் சினிமாவென்பது நம் நாட்டில் இல்லவே இல்லை. நான் மிகவும் சிறியவளாக விருந்த சமயம் எங்கள் ஊர்க் கோவிலுக் கெதிரிலுள்ள ஆனைகட்டும் மண்டபத்தில் ஏதோ சில காட்சிகள் மட்டும்

ஊமைப் படமாக வந்ததைக் காட்டினார்கள். அக் காலத்தில் மின்சாரம் கிடையாது. அந்த மண்டபத்தில் எள் போட்டால் எள் விழ இடமில்லை; மூச்சு விட்டால் அக் காற்றுகூட வெளியே போக முடியாது. மூக்கையே இறுக்கும்படியான கூட்டம். அதில் 90 வயது கிழம் முதல் 40 நாளேயக் குழந்தை வரையில் நசுங்கியது. டிக்கட்டுகளுக்கு இக்காலம்போல அதிக விலையில்லை; பெரியவர்களுக்கு ஒரு அணவும், சிறியவர்களுக்குஅரையணவும் தான். அடாடா! பார்த்தசாரதி பிரும்மோத்ஸவத்தில் கண்ணுடி பல்லக்கு சேர்வைக்குக்கூட அவ்வளவு கூட்டம் கிடையாது எனலாம். சினிமாவே அன்றுதான் புதிதாகையால் எல்லோருடைய உள்ளத்திலும் ஒரு புதிய எழுச்சி, தாங்கமாட்டாத ஆச்சரியம். படத்தில் மனிதன் நடப்பதும், ஓடுவதும், குதிப்பதும், ரயில் ஓடுவதும், சமுத்திரத்தில் அலை யடிப்பதும், கப்பல் போவதும், ரயில்வே ஸ்டேஷனும், அதில் ஏறும் இறங்கும் கூட்டங்கள்—அடாடா! என்னவென்றுதான் சொல்ல முடியும்? பெரியவர்களும், சின்னவர்களும் என்ன நினைத்தார்கள் தெரியுமா? "ஓரணுவுக்கும் அரையணுவுக்கும் சொர்க்கபோகத்தைக் காட்டிவிட்டார்கள் பார்த்தையா?" என்று வாய்விட்டும் சொல்லிக் கொண்டார்கள். அன்றுதான் ஸினிமாவை நானும் முதன் முதல் பார்த்தது.

பிறகு எத்தனையோ, மூவிகள் போயிற்று. இப்போது டாக்கியும் வந்து விட்டது. ஆயிரத்தெட்டு சினிமாவை நாமே பார்த்து விட்டோம். அந்த இறந்த கால உணர்ச்சி இப்போது வருமா? அந்த ஆச்சரியம் இப்போது உண்டாகுமா? இப்போது சினிமாவைப் பார்க்கும்போது நமக்கே புதிய புதிய யோசனையும், விமர்சன புத்தியும், விசால எண்ணங்களும், "இது தப்பு; இது சொள்ளை; இது மோசம்; இது கேவலம்; அது ஆபாசம்; இது வெகு அழகு; இப்படி மாற்றியிருந்தால் நன்றாயிருந்திருக்கும்; இது முடிவு சரியாயில்லை; ஒலிப்பதிவு விகாரம்; வெளிச்சம் மங்கல்; அல்லது அதிகம்; போட்டோகிராபி பரவாயில்லை........." என்றெல்லாம் நுணுக்கங்களைப்பற்றி நாமே கூறும் நிலைமையில் வந்து விட்டதால், ஆச்சரியமும் ஆனந்தமும் எப்படி உண்டாகும்?

இதேபோல கிராமபோன் யந்திரம் முதன் முதல் உண்டானபோது ஏற்பட்ட மனோ உணர்ச்சி இன்னும் என்னைவிட்டுப் போகவில்லை. எங்கள் வீட்டுக்கு எதிரில் ஒரு பஜனைக்கூட மிருந்தது. அதில் நடக்கும் உத்ஸவங்களில் நாங்கள் பங்கெடுத்துக் கொள்வோம். அப்போதுதான் கிராமபோன் அந்தப் பஜனை சபைக்கு ஒரு பெரியார் சன்மானங் கொடுத்தார். கமலா! நான் என்ன சொல்லுவேன் போ; அந்தப் பெட்டியும் அதன் பெரிய

குழாயும் வந்ததுதான் தாமதம். முன்பு சினிமாவுக்குக் கூடியபடி கூட்டம் கூடிவிட்டது. அப்போதெல்லாம் இக் காலத்தைப்போல் கன்னாபின்னாப் பாட்டுகளும், தலைநோவுப் பாட்டுக்களும் கிடையாது. நல்ல சங்கீத வித்வான்கள், வித்வாம்ஸனிகள் பாடிய பாட்டுக்கள் பொறுக்கு மணி போல விருக்கும். எங்க பக்கத்தாத்துப் பாட்டியும், எதிர் வீட்டுப் பாட்டியும் பேசிக்கொண்டது என் காதில் இன்னும் ஒலிக்கிறது. எங்காணும் இந்தப் பொட்டி எப்படிதான் பாடறது? அதிசயமாயிருக்கே” என்றாள் ஒரு பாட்டி. அதற்கு அந்தப் பாட்டி “ஆமாண்டி இந்தப் பொட்டிக்குள்ளே பாட்ரவாளெ போட்டு பாடச் சொல்றான்னு என் தம்பி சொல்றான். இதுக்குள்ளே யிருக்க முடியுமா? மூச்சு திணறாதாம்மா? இத்தனை பெரிய கொழாயாலே மூச்சு போகாதாக்கும்” என்று அந்தப் பாட்டி பதிலுரைத்தாள். இந்தச் சம்பாஷணையைக் கேட்ட ஒருவர், “பாட்டீ! இதுலே மனுஷாளுமில்லே ஒண்ணுமில்லே; புதுசா கண்டு பிடிச்சிருக்கா” என்றார். அப்போது அது அப்படிப்பட்ட ஆச்சரியமா யிருந்தது. இப்போது சீந்துவாரத்துப் போய் விட்டது. முன்பு இருந்த பாட்டி இப்போது இருந்தால், ஒரு ட்ராமா செட்டு ரிகார்டிலாவது பாடியிருப்பாள். உண்மையில் நான் ரிக்கார்டு கொடுத்தபோது மைக்ராபோன் முன்பு நிற்கையில் எனக்குப் பழய பஜனை கோவிலின் ஞாபகமே.

அதே போலத்தான் ஏரோப்ளேனும் வந்த புதிசில் வீதியில் கூடாத ஜனமில்லை. அதை ஆவலுடன் பார்க்காதவர்களில்லை. வாயில் காக்காய் எச்சமிட்டாலும் தெரியாதபடி மெய்ம்மறந்து ஆச்சரியத்துடன் பார்த்த பாட்டிமார்கள்கூட இப்போது ஏரோப்ளேனில் ஏறி சுற்றும் காலமாகி விட்டது.

இதுபோல பலவிதமான நிகழ்ச்சிகள், சம்பவங்கள் எல்லாவற்றையும் இப்போது நினைத்துப் பார்த்தால், அந்த ஆனந்தமல்லவோ அழியாத இன்பங் கொடுக்கும். நாம் நன்மை செய்திருந்தாலும், தீமை செய்திருந்தாலும், அதனதன் உணர்ச்சிகள் நம்மை மாறி மாறிப் பாதிக்கும். அதனதன் ருசியே வேறுதான். இன்பமாயின் மெய்ம்மறந்த ஆனந்தமடைகிறோம். குற்றமாயின் அக்குற்றத்தை மன்னிக்கும்படி பகவானை வேண்டுகிறோம். எதிர்காலத்தைப்பற்றி எண்ணி ஏன் ஏமாறவேண்டும்?

**கமலா** :—விமலா! நீ சொல்வது ஒவ்வொன்றும் மிகவும் உண்மையானதென்று இப்போதுதான் தோன்றுகிறது. எனக்கு எதிர்காலத்தின் யோசனையைத் தவிர, இறந்த காலத்தை நான் நினைத்ததேயில்லை. இப்போது நீ சொல்லிய பிறகு நினைத்துப் பார்த்தால், ஆதி பருவம் நன்றாக ஞாபகத்திற்கு வருகிறது. அடாடா என்ன குதூகலம்! என்ன ஆடல் பாடல்!.........

—வை. மு. கோ.

## 38

மீனாட்சி பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போது வீதியில் பிணம் செல்வதையும் வாஸந்தியும் மூர்த்தியும் கதறுவதையும் பார்த்ததும், சிறுமியானாலும் அவள் மனசு தாங்காமல் கண்ணீர் முட்டுகிறது. தன் தாயார் இறந்துவிட்ட கதைகள் முற்றும் நினைவிற்கு வந்து விட்டன. தன்னைப்போல் வாஸந்தியும் தாயற்ற பரதேசியாகிவிட்டாளே என்ற விசனமும் அனுதாபமும் மீனாவைக் கப்பிக்கொண்டன. இச் செய்தியை உடனே தன் சித்திக்குச் சொல்லும் பொருட்டு, ஓட்ட ஓட்டமாக ஓடி வரும்போதே, "சித்தீ! சித்தீ! வேணி மாமி செத்துப்பூட்டா! சித்தீ! பொணம் தூக்கிண்டு போரா! வாஸந்தி ரொம்ப அழரா சித்தீ! ஐயோ பாவம்னு இருக்கு சித்தீ!" என்று கூவிக்கொண்டே மைதிலியைப் பூட்டி இருக்கும் அறைப் பக்கம் ஓடி வந்தாள்.

அப்போதுதான் கிழவர் கருப்பன் மண்டையில் அடித்ததும், அவன் கீழே விழுந்ததும், உள்ளிருந்து மைதிலி கத்துவதும் மீனா நேரில் பார்த்து, நடு நடுங்கி சில வினாடி நேரம் அப்படியே தம்பித்துவிட்டாள். அங்கு நடக்கும் சம்பவத்தின் காரணத்தையும் ஒரு நொடிப்பொழுதில் அவள் யூகித்தறிந்துகொண்டாள். மைதிலி, 'ஐயோ! கதவைத் திற; திற' என்று கத்திக் கொண்டே இருப்பதையும் மீனா உணர்ந்தாள். பிறகு தன்னைச் சற்று ஒருவாறு சமாளித்துக் கொண்டு, தனக்குள் ஒரு யோசனை செய்து கொண்டாள்.

மெல்ல தகப்பனாரிருக்கும் இடத்திற்கு வந்து கண்ணீர் பெருகியவாறு, "அப்பா! வேணி மாமி செத்துப்பூட்டாப்பா! வாஸந்தியும் என்னெப்போலெ தாயில்லாத பரதேசிப் பொண்ணாயுட்டாப்பா! நீ நெரய பணக்காரனா இருக்கரதாலே எனக்காவது ஒரு குறைவும் இல்லெ. வாஸந்தி ஏழெயாச்சேப்பா! அவா அம்மாவும் செத்துப்போயிட்டாளே! அவளுக்கு யார் சாதம் போடுவாப்பா?" என்று பெரிய குரல் பாய்ச்சி அழுதபடியே கிழவரைக் கட்டிக் கொண்டு, அவர் இடுப்பில் சொருகி இருந்த சாவிக்

கொத்தை மெல்ல கழற்றித் தன் ஜோபியில் போட்டுக்கொண்டு கோவென்று கதறினுள்.

கிழவருக்கிருந்த ஆத்திரத்தில் அவருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. "படுநீலி முண்டே! கருப்பனைக் கூட்டு கதவெ ஒடைக்கச் சொல்ல ஒனக்கு அத்தனெ தைரியமாடீ வந்துடுத்து?" என்று மைதிலியை வைவதிலிருந்ததால் மீனுவின் செய்கையை அவர் கவனிக்கவில்லை. மீனுவை இழுத்துத் தூர தள்ளிவிட்டு, "சீச்சி! மூதேவி! யார் செத்தா யாருக்கென்னடீ! தரித்திரமே! பெலாக்கணம் பாடி சித்தியோடெ நீயும் அழுடீ! பீடையே! எல்லாம் அஸமஞ்சமா வந்திருக்கு" என்று சீறி சிள்ளென்று விழுந்தார்.

மீனு கண்ணைத் துடைத்தபடியே சுற்றுமுற்றும் பார்த்துப் பின்னர், மெத்தையைப் பார்த்தாள். "அப்பா! அப்பா! அதோ மெத்தைலே வேணு மாமா வந்திருக்காப்பா! எதையாவது எடுத்துண்டு போயிடப் போராளெப்பா!" என்று தந்திரமாய்க் கூறியதுதான் தாமதம். "என்ன! என்ன! வேணு வந்திருக்கானு? கட்டெலெ போரவனெ! இந்த வீட்டுக்கு வரத்துக்கு அத்தனெ தைரியமாடா! வா! வா! வாடா! வா! இன்னிக்கு ஒங்காதலி ஒங்கண்ணுக்கு ஆப்படமாட்டா! ஒன்னெ இன்னியோடே தொலேச்சு தலெ முழுகிப்புட்ரென் வா!" என்று கைத்தடியுடன் தடதடவென்று மெத்தையை நோக்கி ஓடினுர்.

மீனு வெகு சுறுசுறுப்பாக அந்தக் கதவின் பூட்டைத்திறந்து விட்டதும், மைதிலி தலைவிரி கோலமாக, "ஹா! வேணீ! வேணீ!" என்று கதறியபடியே வீதிப் பக்கம் ஓடி வந்தாள். அவள் வருவதற்கும் சவம் இவர்கள் வீட்டுப்பக்கம் வருவதற்கும் சரியாக இருந்தது. தூக்கிச் செல்லும் பிணத்தருகில் காளிகா தேவியின் ஆவேசமும், உடன்பிறந்த சகோதரியின் ஒப்பற்ற வாஞ்சையும் ஒன்றுகூடி ஓடிவரும் மைதிலியைக் கண்டு எல்லோரும் வியப்புற்று அசைவற்றுர்கள்.

ஓடி வந்த மைதிலி, "ஐயோ! நில்லுங்களேன்! நில்லுங்களேன்! அந்தப் புண்ணியவதியின் அழகு முகத்தை—ஆசை முகத்தைக்—காட்டுங்களேன்! வேணீ! வேணீ!" என்று பதறித் துடிக்கும் துக்கத்துடன் பாடையைப் பிடித்திழுத்துக்கொண்டு கூடவே ஓடினுள்.

**பி**ணம் தூக்கிகளுக்கும் மனது கரைந்து விட்டதால், சவத்தைத் தாழ்த்திக் கையில் பிடித்தபடியே காட்டினார்கள். மைதிலி வேணியின் முகத்தோடு முகம் பதித்து, "வேணீ! உத்தமீ! புண்ணியவதி! ஐயோ! உனக்கா சாவு வரணும்? மகா பாவி உலகத்திலேயே உதவாக் கட்டையான எனக்கு வரக்கூடாதா! ஐயோ! வேணீ!" என்று கதறும் சமயம் வாஸந்தி தள்ளாடித் தடுமாறிக் கதறியபடியே ஓடி வந்து, "மாமீ! எங்கம்மா செத்துப் போய்ட்டாளே மாமீ! இனுமே நாங்க என்ன செய்வோம் மாமீ! ஐயோ! மாமீ! எங்களெ உட்டுட்டுப் போய்ட்டாளே மாமீ!" என்று கூவியவாறு மைதிலியைச் சேர்த்துக் கட்டிக் கொண்டாள். இக்காட்சி அங்குள்ள அத்தனை பெயர்களின் மனத்தையும் உருக்கியது. யாவரும் கண்ணீர் பெருக நின்றார்கள்.

**மை**திலி, "கண்ணூ! வாஸந்தீ! என் செல்வமே!" என்று சேர்த்துக் கட்டிக் கொண்டு, தேகம் குலுங்கக் குலுங்கப் புலம்புகிறாள். மெத்தைக்கு ஆத்திரத்துடன் சென்ற கிழவர் அங்கு வேணுசாமியை எங்கு தேடியும் இல்லாததால், ஏமாற்றத்துடன் திகைக்கையில், மைதிலி வீதியில் கதறும் குரல் கேட்டுக் குடுகுடு வென்று பால்கனிக்கு ஓடி வந்தார். வீதியிலுள்ள காட்சியைக் கண்டதும் தூக்கி வாரிப்போட்டது. பூட்டி யடைத்து வைத்திருந்த பறவை எப்படி கூட்டை விட்டுப் பறந்து விட்டது? "இதென்ன மோசம்? இதென்ன அநியாயம்?" என்று பின்னும் ஆயிரம் மடங்கு அதிகரித்த ஆத்திரத்துடன் செய்வதறியாது நின்றார்.

**அ**தே சமயம் இத்தனை அமர்க்களத்திலும் வழக்கம் போன்று வாழ்க்கையின் நாதமான வானக்குயிலின் இனிய கீதம் கணீர் என்று சப்தித்தது.

(அதே மெட்டு—சரணம்)

இன்றிருப்பது மெய்! நாளை இருப்பது பொய்
என்றறிந்துன் கடமை ஆற்றி இறைவனிடம்
சேன்றிடுவாய் மனமே. (தூய்மை)

இந்தத் தேவகானத்தின் அதியற்புதமான அபார வசீகர சக்தியால் கவரப்பட்ட மைதிலி, தடை கட்டிய நாகம்போல் துவண்டு பிணத்தின்மீது விழுந்து விட்டாள்.

## 39

சவச் சடங்குகளும் இமச் சடங்குகளும் முடிந்தன. மூர்த்தி ஏற்கெனவே அரைப் பயித்தியமாக விருந்தவன் முக்கால் பைத்தியம்போல் ஆய்விட்டான். ஊண் உறக்கம் துறந்து தேகம் மெலிந்து, "வேணீ! வேணீ!" என்று புலம்பித் தவிக்கிறான். மைதிலி அன்று சவ அடக்கம் ஆன உடனே வாஸந்தியையும் ராஜுவையும் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டாள். வாஸந்திக்கும் ராஜுவுக்கும் பலவிதத்திலும் தேறுதல் சொல்லி, அவர்களைப் பராக்குக் காட்டி, சமாதானம் செய்வதையே மைதிலி முக்கியமாகக் கொண்டாள்.

கிழவருக்கு இந்தச் செய்கை எரியும் உடம்பில் எண்ணெயும் வார்த்ததுபோல் தோன்றியது. ஆத்திரம் பின்னும் மூண்டது. சதா மைதிலியைத் திட்டியும் சில சமயம் அடித்தும் இழிவாகப் பேசியும் இம்சை செய்து வருவதை வாஸந்தி உணராமலில்லை. தங்கள் பொருட்டு மைதிலிக்கு ஏற்படும் துன்பங்களை அவள் சின்ன பெண்ணாயினும் நன்றாக அறிந்து இதற்கென்ன வழி செய்வதென்று யோசிக்க வாரம்பித்துவிட்டாள்.

மைதிலி, குழந்தைகளுக்காக காப்பி ஆற்றிக் கொண்டிருந்தாள். பக்கத்தில் வாஸந்தி, ராஜு, மீனா மூவரும் உட்கார்ந்திருந்தார்கள். பொங்கும் ஆத்திரத்துடன் அங்கு வந்த கிழவர் பதட்டத்துடன், சற்றும் யோசிக்காமல், "ஏண்டீ! இந்த மாதிரி சோம்பேறிக் கூட்டத்தைக் கூட்டி வைத்துக்கொண்டு, என் குடியைத் தண்டகுடியாக்கவாடி இம்மாதிரி செய்றே! பவிஷு

கெட்ட கழுதைகளுக்குக் காப்பியும் டிப்பனும் வேறெயா?" என்று கூறிக்கொண்டே ஆத்திக் கொண்டிருந்த காப்பியை வெடுக்கெனப் பிடுங்கிச் சற்றும் அஞ்சாமல் மைதிலியின் தலைமீது கொட்டி விட்டார். இந்த விபரீத செய்கையைக் கண்டு குழந்தைகள் மிரண்டுபோய், "ஹா! மாமீ! மாமீ!" என்று வாய்விட்டுக் கூறிய படியே எழுந்தார்கள். கிழவர் தங்களையும் என்ன செய்து விடுவாரோ வென்ற பயத்தால் நடுநடுங்கினர்கள்.

அதுவரையில் தனது பொறுமையை இழக்காதிருந்த மைதிலிக்கு ஆவேசம் காளிகா தேவியைப்போல் வந்து விட்டது. காப்பி வழியும் தலையுடனும், ஆவேச முகத்துடனும் தலைப்பை இழுத்துக் கட்டிக் கொண்டு, "ஆஹ்ஹா! இவ்வளவு தூரமா மிதமிஞ்சிவிட்டது. நான் எனக்காகவும் உங்களுக்காகவும் பயப் படவில்லை. என்னைப் படைத்த, பெற்ற தாய்நாட்டின் பெருமைக் காக, நான் இதுவரையிலே பொறுத்திருந்து நீங்கள் செய்த அநியா யத்துக்கெல்லாம் ஆளாகி இருந்தேன்.

பாரத நாட்டு நாரீமணிகளின் வழியைப் பின்பற்றி நடக் கணும்; அவர்கள் காட்டிய வழிக்குப் பங்கம் செய்யக்கூடாது. ஹிந்து தர்மத்தின் மகிமையைக் கெடுக்கக் கூடாது. பொறு மையை இழக்கக் கூடாது என்றெல்லாம் நான் எண்ணி, என்னைப் படுத்தும் சித்திரவதைகளை எல்லாம் சகித்தேன். அப்படி நான் இனுமே பொறுக்கமாட்டேன்.

அக்கிரமம் மிஞ்சிப்போனு அதையும் தடுக்க வேண்டியது என் கடமை. என் வாழ்வைப் பாழ்படுத்தி கொலை செய்தது மில்லாமல், இன்னமும் விபரீதம் விளைக்கவா எண்ணி இருக் கிறீர்கள்? மகா உத்தமியான வேணியின் குடும்பம் யாராலே சிதறி அழிந்தது? அந்த உத்தமியின் உயிருக்கு உயிரான புருஷ னுக்கு யாரால் அங்கபங்கம் உண்டாச்சு? இந்த ரகசியத்தை மூடி வைக்கணுமா, ஒடச்சி வெளியே இழுக்கட்டுமா?

பொறுக்கப் பொறுக்க போராட்டமே அதிகமாறது. இந்த வீட்டின் சகல சொத்தும் எங்க அப்பன் வீட்டுது என்றது ஞாபக மிருக்கட்டும். நான் இன்னமும் மைனர் நீங்காதவள். என்

சொத்தை அபகரிக்க உங்களுக்கு என்னிக்கும் சுதந்திரங் கிடையாது. நான் முன்னொரு காலத்தில் எழுதிக் கொடுத்த கடிதாசி மைனரானதால், சட்டப்படி செல்லாதுன்றது ஞாபகமிருக்கட்டும்.

அதிகமா வாலாட்டினுல் இனிமே நான் பயப்படப் போறதில்லே. மன்மத பாண சஞ்சீவிக்கும் மற்ற மருந்துக்குமே கடன் பட்டிருக்கும் ரகஸியமும்....ஹா!....இன்னொரு கொடிய ரகஸியமும் கூட எனக்குத் தெரியும். அதிமாகப் பேசினு எல்லாம் அம்பலமாயிடும். ஜாக்கிரதை" என்று துர்க்கா தேவிபோல் கூறியவாறு குழந்தைகளைச் சேர்த்து அணைத்துக்கொண்டாள்.

இம்மாதிரி தைரியத்துடன் மைதிலி பேசுவாள் என்று கிழவர் கனவிலும் எதிர்பார்க்கவில்லை யாதலால், சிடு சிடுத்து விட்டது. முகத்தில் பிணக் களை சொட்டுகிறது. ஆத்திரம் ஒருபுறம், அவமானம் ஒருபுறம், மைதிலியை ஒரே வெட்டு இரண்டே துண்டு செய்து விடலாமாவென்ற எண்ணமும் உண்டாகி விட்டது. பேந்தப் பேந்த விழித்தவாறு நின்ருர்.

## 40

மைதிலியின் வீட்டில் ஒரு தனி இடத்தில் வாஸந்தி விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள். ராஜு அவளைக் கட்டிக் கொண்டு, "எங்கா அழறே! ஐயோ! இதென்ன தழும்பு. தாதா அடிச்சுட்டாளா?" என்று கண்ணில் நீர் முட்டக் கேட்டான். வாஸந்தி அழுகையும் சிரிப்பும் கலந்த முகத்துடன், "இல்லே ராஜு! இல்லே" என்று கூறுகிருள்; மேலே கூற முடியாது புலம்புகிருள்.

ராஜு :—நீ பொய் சொல்றே! இதோ பாரேன் தழும்பு. ஐயோ! அக்கா! நாம்ப ஆத்துக்கு அப்பாகிட்டெ பூடலாம் வாடீ! இங்கே இந்தத் தாதாகிட்டே அடிபட வேண்டாண்டீ! என்னெயும்

தாதா அடிச்சிபுடுவார். வாக்கா! ஓடிப் பூடலாம்.—என்று வாஸந்தியின் கையைப் பிடித்து இழுத்தான்.

வாஸந்திக்கும் அது சரியாகத் தோன்றியதாகையால், மெல்ல வந்து மைதிலியின் அறையில் எட்டிப் பார்த்தாள். மைதிலி படுத்துக் கண்ணை மூடிக் கொண்டிருந்தாள். அவள் தூங்குகிற சமயந்தான் சரி என்று எண்ணியவளாய் மைதிலியைச் சற்று நின்று பார்த்துவிட்டுக் கண்ணீர் வழிந்தபடியே ராஜுவை இழுத்துக் கொண்டு ஒரே ஓட்டமாக வெளியே ஓடிவிட்டாள்.

வீதியில் இவர்கள் ஓடுவதை மெத்தையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த கிழவர் தலையையும் தொந்தியையும் தடவியவாறு, "சனிகள் தொலைந்தன. இனி திரும்பி வரட்டும் சொல்றேன்" என்று கூறியபடியே, "போங்கோ! திரும்பி வந்தா ஒதெ. பத்ரம்" என்றார். வாஸந்தி திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே செல்கையில், கிழவரைப் பார்த்ததும் ஆத்திரத்துடன் முகத்தையும் கையையும் வலித்து அழகு காட்டி எளனம் செய்துகொண்டே போய்விட்டாள்.

## 41

மூர்த்தி துரும்பென மெலிந்து பித்தன்போல் வேணியின் படத்தினருகில் உட்கார்ந்துகொண்டு, கண்ணீர் விட்டுக் கதறிக்கொண்டே, "வேணீ! என்னை இப்படித் தனியே விட்டுப் போவேன்னு நான் கெனவில்கூட நினைக்கல்லெயே! என் கண்ணே! உத்தமப் பெண்ணே! எனக்கு வழி தெரியலையே! நான் இப்படிக் கஷ்டப்பட நீ செய்யலாமா! நீ இதைப் பார்த்துச் சகிக்கமுடியுமா! ஐயோ! நானொரு இடம்; நீயொரு இடம்; குழந்தைகள் ஒரு இடம்; நம் குடும்பம் இப்படியா சிதறிப்போகும்? என்னால் பொறுக்க முடியல்லையே! ஒன்னுக்கும்

183020.
சென்னை-600 008

உதவாத நொண்டி. நான் இனிமே என்ன உபயோகம்? நீ போன எடத்துக்கு என்னையும் அழைச்சிண்டு போகக் கூடாதா?

வேணீ! அழைக்கமாட்டெ, என் கனவில்கூட வரமாட்டே! உன் பொறுமை நிறைந்த முகத்தைக் காட்டமாட்டே? ஒரு வார்த்தை உன் வாய் திறந்து சொல்லமாட்டே!" என்று புழு வாய்த் துடிக்கும் சமயம் அவ்விடம் குழந்தைகள் இரண்டும் ஓடி வந்து, "அப்பா!" என்று கட்டிக் கொண்டு கோவெனக் கதறி யழுதார்கள். துக்கத்தோடு துக்கம் ஒரே கையால் குழந்தைகளை வாரியணைத்துக் கொண்டு, "ஏண்டாப்பா! என்ன சமாச்சாரம்? என் கண்ணு! வாஸந்தீ! ஏம்மா அழறே?" என்று கேட்டான்.

வாஸந்தி :—(அழுதபடியே) அப்பா! அப்பா! நம்ப அம்மா ஏன் செத்துப்போனு! அவ செத்துப்போகவே தானே நமக்கிந்த கஷ்டம். அந்த மாமி எங்கமேலெ ஆசையா இருக்கான்னு அவளெ தாதா எப்பப் பாத்தாலும் அடிக்கறு; திட்று. என்னையும் இதோ பாருப்பா தழும்பு விழும்படி அடிச்சுப்புட்டா! எங்களாலெ மாமிக்குக் கஷ்டம். அதாலெ சொல்லாமெ வந்துட்டேன்பா—என்று தேம்பித் தேம்பி அழுதாள்.

இதற்கு மூர்த்தி என்ன பதில் சொல்வான்! கலங்கிய அவனுடைய உள்ளத்தில் இன்னும் சகிக்க முடியாத துக்கம் பொங்கி விட்டது. வாய் திறந்து பதில் பேசவே முடியவில்லை. கண்ணீர் ஆறுய்ப் பெருகுகிறது. வேணியின் படத்தில் வைத்த விழியை வாங்காமல், அப்படியே குழந்தைகளை அணைத்தவாறு தம்பித்து விட்டான்.

அச் சமயம் மைதிலி அங்கு வந்து கதவினருகிலேயே நின்று, இந்தக் கோரக் காக்ஷியைக் கண்டு சகிக்காமல், கண்ணீர் விட்டபடியே உள்ளே சென்றுள். அவளாலும் பேச முடியவில்லை. ராஜு ஓட்டமாக ஓடி வந்து மைதிலியின் காலைக் கட்டிக் கொண்டு, "மாமீ! இனிமே நாங்க ஒங்காத்துக்கு வரமாட்டோம். எங்க ஒடம்பெல்லாம் வீங்கிடும்படி தாதா பெரம்பாலெ அடிச்சு

புட்டா! இனுமே நாங்க வரவேமாட்டோம். எவ்வளவு கூட்டாலும் உங்காத்துக்கு வரவேமாட்டோம் மாமீ!" என்ருன்.

வாஸந்தி :—(ஓடி வந்து மைதிலியைக் கட்டிக் கொண்டு) மாமீ! எங்களே மன்னிக்கணும். நீங்க தூங்கினங்கோ! சொல்லாமெ வந்துட்டோம். தாதாக்கு ரொம்ப கோவம் வரது மாமீ! நாங்க இங்கெயே இருக்கோம். எங்களாலே ஒங்களுக்கு வசவு வேண்டாம் மாமீ!—என்ருள். மைதிலிக்கு பதில் சொல்ல முடியாது கண்ணீர் பெருகி, துக்கம் தொண்டையை அடைக்கிறது. சோகப் பதுமைபோல் நின்ருள்.

மூர்த்தி :—(கண்ணைத் துடைத்துக் கொண்டு) அம்மா! ஒங்க உபசாரத்துக்கும் அன்புக்கும் பதில் ஒங்களுக்கு உபத்திரவ முண்டாகாமலிருந்தா போரும். அம்மணீ! ஒங்க தயவு குழந்தைங்க மேலே இருக்கிறதே போரும். வீணுக கஷ்டப்பட வேண்டாம். மன்னிக்கணும்—என்று வணக்கமாகக் கூறினுன்.

மைதிலி :—(கண்ணீர் பெருகியபடியே) ஐயா! நான் பண்ண கருமத்தை நான் அனுபவிக்கிறேன். அதுக்கு குழந்தைகளென்ன பண்ணும்? கண்ணு! வாஸந்தி! வரமாட்டே? ராஜு! வர மாட்டே?

ராஜு :—ஊஹூம் வரவேமாட்டேன்.

வாஸந்தி .—மாமீ! மன்னிக்கணும் மாமி! எங்கப்பா தனியா இருந்தா ரொம்ப கஷ்டப்படுவா மாமீ! அவருக்கு நான் இருந்தால் ஒத்தாசையா இருக்கும் மாமீ! பாட்டியும் துடிக்கிரு பாருங்கோ! அவளுக்கும் நான் ஏதாவது செய்யலாமோன்னே, அதுக்காக வல்லே மாமி?—என்ருள். அதற்குமேல் மைதிலி ஒன்றும் சொல்ல முடியாமல், 10 ரூபாயைக் கொடுத்துவிட்டு வீட்டிற்குப் போய் விட்டாள்.

மூர்த்தி வேணியின் படத்தை நோக்கி, "வேணீ! நீ நிம்மதியாய் போயிட்டே. நான் நொண்டியாய் அலையறேன். இருந்தாலும் ஒன்னெ முழுங்கி ஏப்பம் விட்ட அந்த மாயக் கொள்ளெக்காரரளே புடிக்க நான் சத்ய சங்கல்பம் பண்ணுதே இருக்க

மாட்டேன். அந்தச் சதிகாரக் கூட்டத்தைக் கண்டு பிடிக்க இப்பவே ஓம்மேலெ ஆணையா நான் கங்கணங் கட்டிக்கறேன். எந்தப் பாடு பட்டாவது நான் பிடிச்சே தீருவேன்" என்று அப் படத்தின் முன்பு சபதம் செய்துகொண்டு எழுந்தான்.

## 42

வீட்டில் பச்சிளங் குழந்தையான வாஸந்தியே, சமயல் செய்வது; கிழவி, ராஜு இருவருக்கும் போடுவது; தங்கைக்கும் தானே சில சமயம் கலந்து வாயில் ஊட்டுவது; ஓர் பெரிய குடும்பத்தைத் தாங்கும் தலைவிபோலாய் விட்டாள். ஆனால், சாப்பாட்டுக்குத்தான் வழி இல்லை. கையே இல்லாத மூர்த்தி எப்படி தையல் வேலை செய்ய முடியும். மைதிலியின் உதவியால் ஜீவனம் செய்வதைத் தவிர, அவர்களுக்கு வேறு வழியே இல்லை.

அன்று சபதம் செய்தது முதல், மூர்த்தி பைத்தியக் காரனைப்போல் தெருத் தெருவாய் அலைவதும், இந்தக் கொள்ளைக் கூட்டத்தாரை எப்படி பிடிக்கலாம் என்ற எண்ணத்தில் மூழ்குவதுமாக இருந்தான். யார் யார்மீது தனக்குச் சந்தேகமோ அவர்களை எல்லாம் பின் தொடர்ந்து கவனிப்பதும், சதா இரவும் பகலும் வீதியிலேயே அலைவதும், வேணியின் சமாதி யருகில் சென்று புலம்புவதுமாக இருப்பதைக் கண்ட சிலருக்கு இவன் அலைவதன் உள் மர்மம் தெரியாதாகையினால், பித்தம் பிடித்து விட்டது என்று எண்ணினார்கள்.

பின்னும் சிலர், "இவன் சம்சாரம் இறந்த பிறகு இரவு முற்றும் ஊர் சுற்றுவதால் புத்தியே கெட்டு விட்டது. தீய காரியத்தில் பிரவேசித்து ஊர் சுற்றுகிறான். குடிக்கவும் ஆரம்பித்து விட்டான்" என்று தாராளமாகச் பேச வாரம்பித்தார்கள். அநியாயமாகப் பேசும் அந்த வசைகள் மூர்த்தியின் காதில்

விழாமலில்லை. தன்னுடைய கஷ்ட காலத்தின் கொடிய ஆட்சியில் எதையும் கேட்கும் விதி என்று பொறுமையுடன் நினைத்தானே யன்றிச் சற்றும் அவற்றைச் சட்டை செய்யவே இல்லை.

மூர்த்தியின் கவலை நிமிடத்திற்கு நிமிடம் அதிகரிக்கும் வேகத்தில் அடிக்கடி அவனுக்குப் புத்திமாருட்டமும் தலைசுற்றலும் மயக்கமும், நடக்கும்போதே ஒருவிதமான சோர்வும் தடார் தடார் என்று தடை கட்டிய நாகம்போல் நின்று விழிப்பதுமான ஓர் நிலைமையும் உண்டாகி விட்டன. தனக்குச் சரியான புத்தி இருக்கிறதா, அன்றிக் கலங்கி விட்டதாவென்ற சந்தேகம் அடிக்கடி அவன் மனதிலேயே தோன்றிக் குழம்பிப் போவான். இத்தகைய தடுமாற்றங்கள் உண்டாகும்போது அவனை யறியாத ஓர்வித பீதியும் திகிலும், சகிக்க முடியாத துக்கமும் பொங்கி வரும். தன் பாழாப்போன விதியினுல் ஒருகால் மூளையும் சிதறி விட்டால் என்ன செய்வது? பிறகு குழந்தைகளின் கதியும் கிழவியின் விதியும் எப்படி முடியும் என்று நினைக்கும்போது அவன் நிற்கவும் சாத்திய மற்றுத் துவண்டு கீழே விழுந்து விடுவான்.

இம்மாதிரி நிலைமையுடன் ஒருதினம் பகல், பித்தன்போல் வெகு தூரம் நடந்து செல்கையில், மேற் குறித்த எண்ணங்கள் அவனை முற்றிலும் கப்பிக்கொண்டுவிட்டன. தன் மொண்டிக் கையைப் பார்க்கிறுன். சகிக்க முடியாத வேதனையுடன் கண்களை மூடிக்கொண்டு, 'ஹா!'வென்று ஒரு பெருமூச்சுடன் தடுமாற்ற மடைந்து, அவன் நடக்கும் வழியிலேயே விழுந்துவிட்டான்.

அங்கு சிறிது தூரத்தில் இரண்டு மூன்று பேர்கள் பேசிக்கொண்டே ஏதோ பச்சிலைகளைப் பறித்துக்கொண்டே இருந்தார்கள். மூர்த்தி கீழே விழுந்தவன் சிறிது நேரங்கழித்துச் சற்றுத் தெளிவு பெற்றுத் தலையைத் தூக்கிப் பார்க்கும்போது, "இந்தப் பச்சிலை தாண்ணே! இதுதான் மூந்து பாத்தவுடனே ஆளெ மயக்கிப்புடும். கத்தெ கத்தெயா இதெத்தாண்ணே கொண்டு வந்து மருந்து செய்யணும்" என்று ஒரு குரல் கேட்டது.

மூர்த்தி இதைக் கேட்டதும் ஏதோ புதையல் கண்ட தரித்திரன்போலச் சந்தோஷத்தை யடைந்து எழுந்து உட்கார்ந்து,

நாற்புறமும் சுற்றிப்பார்த்தான். சிறிது தூரத்தில் இரண்டு முரட்டு ஆள்கள் ஏதோ பூண்டுகள், பச்சிலைகள் இவைகளைப் பறித்துக் கொண்டு செல்வதைக் கண்டான். மெல்ல எழுந்து அவர்கள் செல்லும் திசையாகவே சென்று பார்த்தான். அதற்குள் அவர்கள் வெகு தூரம் போய்விட்டார்கள். அவர்கள் பறித்தது எந்தப் பச்சிலையாக விருக்கும் என்று அவன் கீழேயுள்ளவற்றையெல்லாம் பார்த்தான். அங்ஙனம் பார்த்தும் ஒன்றும் தெரியவில்லை. ஏதாவதொரு இலையை முகர்ந்து பார்க்கவும் பயப்பட்டவாறு சில இலைகளை மட்டும் பறித்துக்கொண்டு, "வேணீ! உன்னைக்கொன்ற விஷம் இதுவாயிருந்தால், நீ எங்கேயோ தெய்வமாயிருந்து இதைக் காட்டிக்குடுத்து பழிக்குப்பழி வாங்கி என் ஆத்திரத்தைத் தீர்த்துச் சாந்தியை உண்டாக்கு" என்று வெறிபிடித்தவன்போல் கூறிக் கொண்டே "ஆம்! இந்தப் பச்சிலைகளை நாம் முதலில் இன்ஸ்பெக்டருக்குக் காட்டலாம்" என்று எண்ணியவாறு நடந்தான்.

## 43

இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்தின் வீட்டில் அவர் இந்த மாயக்கொள்ளையின் மர்மத்தைப்பற்றியே தீவிரமாக யோசித்துக்கொண்டிருந்தார். அச்சமயம் வேதாசலம் வெகு அவசரமாக இன்ஸ்பெக்டரின் வீட்டிற்கு ஓட்டமாக ஓடிவந்தார். இவர் வரும் அலங்கோலத்தைக் கண்ட இன்ஸ்பெக்டர் சற்று வியப்புடன் "என்ன சார் விசேஷம்?" என்றார்.

வேதா:—விசேஷமா! ரொம்ப ரொம்ப விசேஷம்! மாயக் கொள்ளைக்காரர்களில் சிலபேர் பிடிப்பட்டுவிட்டார்கள். நான் என்னுன்னு சொல்லுவேன் போங்கோ! என் கண்ணையே, என் மனசையே நான் நம்பலே. அக்கிரமம்! அநியாயம் சார்!

"என்ன! என்ன சமாசாரம்? சீக்கிரம் சொல்லுங்கோ! எங்கே பிடிபட்டிருக்கா! யார் புடிச்சா! எழுந்திரும் ஓடனே

போலாம்” என்று கூறிக்கொண்டே ஏகாம்பரம் எழுந்திருக்க முயன்றார். வேதாசலம் அவரைத் தடுத்து உட்காரவைத்து, “சார்! அவசரப்படாதேங்கோ! இருங்கோ! நான் தக்க போலீ ஸாரிடம் புடிச்சி குடுத்துட்டுதான் வந்திருக்கேன். அந்த மாயக் கொள்ளையிலே அந்த நொண்டி மூர்த்தியும் சம்பந்தப்பட்டிருக் கான்னுக்கா அதைவிட ஆச்சரியம் வேறே வேணுமா சார்!” என்றார்.

இதைக் கேட்டதும் ஏகாம்பரத்திற்குத் தூக்கிவாரிப் போட்டது. “என்ன! என்ன! மூர்த்தி சம்பந்தப்பட்டிருக்கானு! இதென்ன வேடிக்கையா யிருக்கு. அவன் மனைவியெ கொலை பண்ணிப்புட்ட கொள்ளைக் கூட்டத்துலேயா அவன் சேருவான்? பழிக்குப்பழி வாங்கப்போறேன் என்றுதானே அவன் சொல் லிண்டிருந்தான்.

கிழவர்:—சார்! இதை யாரும் நம்பவே முடியாத காரியம்தான் சார்! மொதல்லே ஆசாமி பழிக்குப்பழி வாங்கத்தான் நெனைச்சின் டிருந்தான். அதனுலே அவாளே கண்டுபிடிக்கத்தான் அலைஞ்சான். அதுலே ஒத்தனெ புடிச்சு போலீஸ்காரன் கிட்டே காட்டிப்புட்ர தாகப் பயமுறுத்தினும். அப்பறம் விஷயம் என்னுச்சு தெரியு மொன்னே? செத்தவள் எப்படியும் செத்துப்பூட்டா! அவ இனுமே திரும்பி வரப் போரதில்லே. தானே மொண்டி. சம் பாதிக்க வழியில்லே. சோத்துக்கோ வேறெ மார்க்கமே கிடை யாது. வீட்டிலேயோ நாலுபேர் சாப்பிட்டுப் பொழைக்கணும்.

இதெல்லாம் உத்தேசித்து அவளெ கொன்னத்துக்காகக் காட்டி குடுத்துட்டாக்கா இவனுக்கு லாபமென்ன இருக்கு? பிழைக்க ஏதாவது வழி வாண்டாமோ! “நீ இதை வெளியிலே சொல்லாதே. ஒனக்கு வேண்டிய பணம் தரேன். நீயும் எங்களோடே சேந்துடு”ன்னு அவன் சொல்லி மூர்த்திக்குக் கடு தாசியும் எழுதினும். பணம்னு யார் சார் சும்மா இருப்பா! ஏன்? கஷ்டப்படாமெ சாப்படலாமே; செத்தவ செத்தா! இனுமே ஏன் அலையணும்னு இந்த வழிலெ சேந்துட்டான்னு எனக்கு நேத் திக்கிதான் சமாசாரம் தெரிஞ்சுது.

ஓடனே இங்கே வந்து சொல்லிப்புடனும்னு நெனச்சேன். இன்னும் கொஞ்சம் உண்மை எல்லாம் தெரிஞ்சிண்டு வரலாம்னு வந்தேன். தெற்குப் பேட்டையிலே இருக்கற ஒரு பாகவதர் வீட்டுலே மாயக் கொள்ளைக்காரா ரெண்டுபேர் வந்தாளாம். அந்த வீட்டு பெரியவர் மயங்கிப் போனபோது வேலைக்காரன் ஓடிவந்து வீதிலே அடிச்சுண்டானும். நான் தற்செயலா அங்கே போனேன். அப்போ மூர்த்தியும் வேறொரு ஆளும் நிக்கறத்தே கண்ணாலே பாத்துட்டு ஓடனே டெலிபோன் செய்து போலீஸாரே வரவழச்சு அவாளெ புடிச்சுக் குடுத்துட்டேன்.

மூர்த்தி என்ன சொல்ரான் தெரியுமா? நானும் இவாளெ புடிக்கதான் துப்பறிபவன் போலே கூட வந்தேன்னு ஒரேயடியா அளக்கரான். கூட இருக்கர மனுஷன், இவனும் தன் மனுஷன் தான்னு சொல்லிப்புட்டான். இது எப்படி இருக்கு பாருங்கோ?" என்றார். ஏகாம்பரத்திற்கு இதை நம்பவே முடியவில்லை. "ஏன் சார்! இது உண்மையானதா? நிச்சயமாவா சார்!" என்று பலதரம் கேட்டார்.

கிழவர்:—சார்! ஏன் இத்தனெ சந்தேகம்? நீங்க ஓடனே வந்து பாருங்களேன். மூர்த்தியின் வீட்டெயுந்தான் சோதனை போட்டு பாத்துட்டா தெரிஞ்சுபோறது—என்றார். உடனே ஏகாம்பரம் தன் உடுப்புகளை எடுத்து மாட்டிக்கொண்டு, போலீஸ் ஸ்டேஷனுக்குக் கிழவருடன் மோட்டாரில் கிளம்பினர்.

## 44

போலீஸ் ஸ்டேஷன் வாசலில் கூட்டம் சொல்லத்திறமில்லாது கூடி இருக்கின்றது. மாயக்கொள்ளைக்காரன் புடிபட்டுவிட்டானும். அவன் நாசமாப் போக. அவன் எழவெடுக்க. எத்தனெபேரெ அவன் அக்கிரமமாகக் கொள்ளையடிச்சான்! எத்தனை பேரைக் கொன்னான். அவனும் புடிபடுவானுவென்று எல்லோரும் எதிர் பாத்ததுக்குப் புடிபட்டுவிட்டான்; 'இனுமே என்ன பயம்?' என்று

பொது ஜனங்கள் தங்கள் தங்கள் மனம்போனவாறு பேசிக்கொள்கிறார்கள்.

அவர்களில் சிலர், "ஐயையோ! இந்த தர்ஜி மூர்த்தியும் கொள்ளைக் கூட்டத்துலே சேந்துட்டானுமே. அவனெயும் புடிச்சுட்டாளாமே. அவனுக்குக் கையும் ஒடெஞ்சுது. பொண்டாட்டியும் செத்தா. இனுமே பொழைக்க வழியில்லென்னு திருடவும் ஆரம்பிச்சுட்டானுமே. இதென்ன அக்கிரமம்! கை வரண்டால், கையே கன்னக்கோலாகும். வறுமை வந்தால் சிறுமை புத்திதானே உண்டாகும் என்பது மெய்யாகிவிட்டதே. அட பாவமே! வீட்டுலெ ரெண்டு பசங்க, ஒரு கிழவி எல்லாரையும் விட்டு இந்த மனுஷன் ஆப்ட்டுண்டானே" என்று கூறுகிறார்கள். சிலர், "சீச்சீ! அவன் மகா யோக்யமாச்சே இப்படி செய்வானு? அவன் மனைவி செத்த பிறகே அவனுக்குப் பயித்தியம் பிடித்து விட்டது. பயித்தியத்தில் என்ன செய்தானோ?" என்கிறார்கள்.

வீதியில் தன்னைப்பற்றி இவ்விதமெல்லாம் கூறும் வார்த்தைகளை இடிந்துபோன மனத்துடன் உள்ளே வயிறெரிய இதயத் துடிப்புடன் உட்கார்ந்திருக்கும் மூர்த்தி எங்ஙனம் அறிவான் பாவம்!

அதிகமான சந்தோஷம் வந்தாலும் அதிகமான துக்கம் வந்தாலும் மனிதர்களுக்கு நிலை புரண்டு வெறி பிடிப்பது சகஜம். அந்த நிலைமையில் மூர்த்தியின் தாங்கமாட்டாத துயரத்தில் மூளையே சுழன்று சித்தம் கலங்கிவிட்டதுபோலாகிவிட்டது.

நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைப்பது என்பது மூர்த்தியின் விஷயத்தில் சரியாகி விட்டது. அவன் பழிக்குப் பழி வாங்கிவிட எண்ணியதற்குப் பதில், அவன் தலைமீதே பழியும் அபாண்டமும் விழுந்து விட்டதும், அவன் ஆத்திரத்தினால் ரண வீரபத்திரனைப்போல் கண்கள் சிவக்க, "ஐயோ! அநியாயம். அநியாயம். நான் நிரபராதி. நான் நிரபராதி. நான் நிரபராதி. கடவுளே நான் நிரபராதி!" என்று கத்துவதைத் தவிர, மற்றபடி ஒன்றும் தெரியவில்லை.

இவனைக் கைது செய்து கொண்டு வந்த சப்-இன்ஸ்பெக்டர் "ச்ச்ச் கத்தாதே! நீ நிரபராதின்றது ஒன் செய்கையே காட்டி

விட்டதே! என் கூச்சல் போட்றே? பேசாமலிரு” என்று ஒரு அதட்டு அதட்டினன். அப்போது அங்கு வந்த ஹெட் கான்ஸ்டேபிள் ஒருவிதமாக பல்லைக் கடித்துக் கொண்டே மூர்த்தியை நோக்கி, “உஹூம்! அய்யா ஆப்டுக்கிஞரா?” என்ருன். சப்-இன்ஸ்பெக்டரை நோக்கி, “சார்! இவன் மேலே எனக்கு சில நாளாகவே ஒரு சந்தேகம் இருந்தது. அதனல் இவனைப் பிடிக்க சமயம் பாத்துண்டே இருந்தேன். இன்னிக்கு அது ஒங்க கையாலெ முடிஞ்சுது. இவனை லேசில் விடாதெங்கோ! இவன் பயித்தியம்போல் நடிக்க கொஞ்ச நாளாகவே பழகிவரான். இந்தக் கூச்சலுக்கெல்லாம் இந்தப் போலீஸ் புலிகளா பயப்படும்? பேசாம லிருங்கோ” என்று முறைப்பாகக் கூறினன்.

மூர்த்தியின் மார்பு வெடித்துவிடும் போலிருக்கிறது. “ஐயையோ! என் மேலெ பழி சொல்றது அநியாயம்! அக்கிர மம். நான் நிரபராதி! நான் நிரபராதி! கடவுளே! ஆண்டவனே! நான் நிரபராதி!” என்று மீண்டும் கண்ணீர் வழிய பெரிய குரல் பாய்ச்சிக் கதறினன். அதே சமயம் வேதாசலமும் ஏகாம்பரமும் அங்கு வந்தார்கள். உண்மையில் மூர்த்தியைப் பார்த்தவுடனே ஏகாம்பரத்திற்கு ஆச்சரியமும் பரிதாபமும் பொங்கின. ஏகாம் பரத்தைப் பார்த்தவுடனே மூர்த்தியின் துக்கமும் வயிற்றெரிச் சலும் பீறிக்கொண்டு வந்துவிட்டன.

ஆவேசத்துடன் தன் ஒரு கையால், மொண்டி கையைச் சேர்த்துக் கும்பிடுவதுபோல் தலைமீது தூக்கி வைத்துக்கொண்டு, உடனே ஏகாம்பரத்தின் காலில் விழுந்து, “ஐயா! ஒங்க அதி காரத் தடபுடலில் நியாய அநியாயமில்லையா? என் உயிரினும் இனிய வேணியைப் பலி வாங்கிய அந்தக் கூட்டத்தில் நான் சேர்வேனு! இது ஒரு குழந்தைக்குக் கூடத் தெரியுமே! நான் நிரபராதி! நான் நிரபராதி! என்னெக் காப்பாத்தணும்” என்று கண்ணீர் பெருகக் கதறினன்.

கிழவர் முகத்தில் ஆத்திரக் களை ஜ்வலிக்க மேல் வேஷ் டியை உருகி இழுத்துப் போர்த்திக் கொண்டு, “இன்ஸ்பெக்டர் சார்! நானும் முதல்லே இவனெ ரொம்ப நிரபராதின்னுதான்

நெனச்சேன். பின்னாலே விசாரிச்சாதானே வள்ளல் வெளிப் பட்றது. இவன் இந்த வேஷமெல்லாம் போட்டா இனுமே பிரயோஜனம் என்ன?" என்று தானே முந்திக்கொண்டு, முந்திரிக் கொட்டைபோல் கூறினர்.

ஏகாம்பரம், மூர்த்தியை எழுந்திருக்கும்படிக் கூறி, தானே தூக்கியும் விட்டுப் பின்னர், "ஐயா! கத்தாதேயும். இது போலீஸ் ஸ்டேஷன்; வீடல்ல? நீர் நிரபராதியானல் தானே விடுதலையாகி விடுகிறீர். இதற்கு ஏன் வருந்தவேணும்? உண்மையிலே உம் மைப் பார்த்தால், பரிதாபமாகத்தான் இருக்கு. ஆனல் விஷயம் விபரீதமாயிருக்கே! நான் என்ன செய்வேன்? இதில் நீர் சம் பந்தப்பட்டிருப்பது கையும் மெய்யுமாக ஏற்படுகிறது.

இதற்குள் சப்-இன்ஸ்பெக்டர், "சார்! ஜேபியில் பாருங்கோ இன்னும் பச்சிலை கொத்து இருக்கு. இதுதான் அந்த மாயக் கொள்ளைக்காரா மயக்கும் மருந்து. இதை இவன் அவர்களுக்குக் கொஞ்ச நாளாகச் சப்ளை செய்யரானும். இதோ கூட இருக் கிறவன் சொல்ரான். இந்தப் பச்சிலையே பரிசோதிக்க வேண்டி ஒரு கான்ஸ்டேபிளை முகரச் சொன்னேன். மயக்கமாகிவிட்டான்; ஆனல், பத்து நிமிஷத்தில் தெளிஞ்சுபோயிடுத்து. இதைவிட வேறென்ன சாக்ஷி வேணும்? இவன் வீட்டே சோதனை போடும் படி மேல் அதிகாரி உத்திரவு பிறப்பித்துவிட்டார்" என்றார்.

இந்த வார்த்தையைக் கேட்டவுடன், மூர்த்தியின் சர் வாங்கமும் தீப்பிடித்து எரிவதுபோலாய்விட்டது. அவன் ஒரு கையினல் தலையிலடித்துக்கொண்டு, "ஐயையோ! இந்தப் படு மோசத்தைக் கடவுள் எப்படி சகிப்பார்?....கடவுளே! நீ என்ன கல்லா! மண்ணு! வெறும் செம்பா! ஐயோ! என்னல் பொறுக்க முடியல்லையே! இந்தப் பச்சிலையால்தான் அவா கொள்ளையடிக் கிறன்றதெ கண்டுபிடிச்சு போலீஸில் நானே தகவல் கொடுத்து இவாளெ பிடிக்கிறதற்காக வேலை செய்து வந்தேனெ யொழிய நானு இதை இவாளுக்குச் சப்ளை செய்தேன்? இது அக் கிரமம். இது வெறும் முழுமோசம். ஐயா! இன்ஸ்பெக்டர்

சார்! இது சுத்த பொய். இதை நம்பாதெங்கோ!" என்று கதறினன்.

ஏகாம்பரம் ஒன்றுமே பதில் சொல்ல முடியவில்லை. இதற்குள் மூர்த்தியுடன்கூட கைதியாகி இருக்கும் ஒரு முரட்டு மனிதன், மூர்த்தியைப் பார்த்து, "ஓகோ! நீ பலே பேர்வழியா இருக்கயே! நீ இந்த பச்செலே எங்களுக்கு சப்ளை பண்றதில்லே! நீயா எங்களே பிடிக்கப்போறே. சும்மா கதெ அளக்காதே. போய்யா! இதுக்காவ பணத்தெ வாங்கி ஊட்டெ பொதச்சு வச்சிகினு அளக்கரயே" என்றான்.

இந்த வார்த்தையை மூர்த்தியால் சகிக்கவே முடியாது உச்சஸ்தாயியை எட்டிவிட்டதால், "ஹா! உலகமே முழுமோசம். அநியாயக் குப்பை. பழிகாரப் பாண்டம். கடவுளாம் கடவுள். கடவுளுமில்லை, மண்ணுமில்லை. கடவுள், கடவுள் என்பதெல்லாம் சுத்தப் பொய்! சுத்த ஹம்பக்கு. கடவுள் இருந்தால் நான் நிரபராதி என்றது அவன் கண்ணுக்குத் தெரியாமலா போய்விடும்? இத்தகைய கல்நெஞ்சக் கடவுள் உலகில் இருந்தால் என்ன? ஓடிப்போய் விட்டால் என்ன?" என்ற விரக்தியும் ஆத்திரமும் மேலிட்டதால் ஆவேசத்துடன் கூறிக்கொண்டே அந்த அதிர்ச்சி தாங்காமல் கீழே விழுந்துவிட்டான்.

திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்பார்கள். அத் தெய்வம் துணை செய்யுமோ! அன்றி வினைதான் வெல்லுமோ? யார் கண்டது? மூர்த்தியின் கன்றுவியைக் கண்ட யாருடைய மனந்தான் சகிக்கும்? அவன் விடும் ஒவ்வொரு சுவாசமும், 'நான் நிரபராதி. நான் நிரபராதி. அம்மா! வாஸந்தீ! ராஜு! அம்மா!' என்ற புலம்பலையே சப்திக்கின்றன. இரு கான்ஸ்டேபிள்கள் அவனைத் தாங்கிக்கொண்டார்கள். ஏகாம்பரம் முதலியோர் மூர்த்தியின் வீட்டைச் சோதனை செய்யும் பொருட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள்.

## 45

மைதிலி தன் விதியை நினைத்துக்கொண்டு வேணியின் படத்தைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டுக் கண்ணீர் உதிர்த்தபடியே, "வேணீ! நீ உபகாரப் பிராணியா யிருந்ததாலேதான் சீக்கிரம் போய்ட்டே. என்னைப் போல் உதவாக்கட்டையா யிருந்தால், நீ செத்துப்போயே இருக்க மாட்டே. ரத்தினங்கள்போல் குழந்தைகள், மனத்திற்குகந்த மணாளன், வருவாய்க்குத் தக்க திருப்தியுடன் குடும்பம் நடத்தும் பெருமை, எல்லாம் ஒன்றாயடைந்ததால்தான், நீ அபாக்கியவதி யாய்ப் போயிட்டே. என் பாபாத்மா போகும் வழியாவது இருக்கா பாத்தியா! ஊம். இன்னும் என்னென்ன கஷ்டங்கள் அனுபவிக்கணுமோ! எப்படி ஆடல் படணுமோ! அதெல்லாம் விட்டுச் சாவு வருமான்னா?" என்று சொல்லிக்கொண்டே இருக்கையில், விம்மி விம்மி யழுங் குரல் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து பார்த்தாள்.

வாஸந்தி தலைவிரிகோலமாய்க் கதறியபடியே, "மாமீ! மாயக்கொள்ளைலே எங்கப்பா சம்மந்தப்பட்டிருக்கான்னு அவரை புடிச்சு ஜெயில்லே வெச்சுட்டா மாமீ! ஐயையோ! இனுமே என்ன பண்ணுவோம் மாமீ! எங்க வீட்டே போலீஸார் சோதனைபோட்டு பெருச்சாளி அருத்திருக்கர பாழியிலெந்து ஏதோ பணம், நகை, எல்லாம் எடுத்திண்டு போனா மாமீ! அதெல்லாம் எங்கப்பா திருடினாராம் மாமீ! எங்கப்பா ஒருநாளும் செய்திருக்கவே மாட்டா மாமீ! கோவில்லேகூட சாமி செத்தாபோயிடுத்து மாமீ! நாங்க என்ன பண்ணுவோம் மாமீ!" என்று கல்லும் கரையும்படிக் கதறினாள்.

மைதிலிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. "என்ன! வாஸந்தீ! மாயக்கொள்ளைலே ஒங்கப்பா சம்மந்தப்பட்டான்னு புடிச்சுண்டு போயிட்டாளா! இதென்ன அக்கிரமம்! இதென்ன அநியாயம்! ஒங்கப்பா ஜெயில்லேயா இருக்கா?" என்று வாஸந்தியைக் கட்டி

யணைத்தவாறு கண்ணீர் பெருகக் கேட்டாள். அவள் வயிறும் மனமும் பத்தி எரிந்து சித்திரவதை செய்கிறது. வேணியின் குடும்பம் சிதறிப்போனதற்குத் தன் புருஷனல்லவா காரணம் என்று நினைக்கும்போது பூமியே வெடித்து அவளை விழுங்கிவிட்டது போல் தோன்றியது.

வாஸந்தி திக்கித் திக்கிப் புலம்பிக் கொண்டே, "மாமீ மாமீ! எங்கப்பாவே நானு பாக்கணும் மாமீ! எங்களெ யார் அழைச்சிண்டு போவா மாமீ! எங்க பாட்டி புழுவாட்டம் துடிக்கிறு மாமீ! அவளும் செத்துப் போயிடுவா பொழக்கமாட்டான்னு பாக்கரவா சொல்று மாமீ! இங்கே வந்தா தாதா அடிக்கப் போறாளேன்னு பயந்துண்டே வந்தேன் மாமீ! எங்களுக்கு ஒங்களே தவிர, வேறே திக்கில்லே மாமீ! எங்கப்பாவுண்டே அழச்சிண்டு போரகளா மாமீ!" என்று கதறும் வயிற்றெரிச்சல் மைதிலியின் வயிற்றிலிருந்து துக்கம் பீறிக் கொண்டு வந்து விட்டது.

அவளுடைய கண்கள் சிவக்க, தேகம் பதைக்க மைதிலி எழுந்தாள். "வாஸந்தி! என் கண்ணே அழாதே! இதோ நான் உன்னை ஸ்டேஷனுக்கு அழைச்சிண்டு போறேன். இதனாலெ இனுமே என்னெ கெழவர் கொலை பண்ணாலும் சம்மதந்தான். நான் பயப்படப் போறதில்லே. ஒரு நிரபராதியின் குடும்பத்தைச் சிதறப் பதற வடித்த ஒரு மனுஷனுக்கு நான் இனியும் உடந்தையா யிருக்கணுமா? இதுதானு ஹிந்து பெண்மணிகளின் உயர்ந்த தருமம்? இல்லே; இல்லே. இனுமே என்னாலெ இந்த அநியாயத்தைச் சகிக்க முடியாது. ஆனது ஆகட்டும். ஒரு அனாதைக்கு ஆபத்துக் காலத்தில்கூட உதவி பண்ணாத ஜென்மம் இருந்தாலென்ன? இறந்தாலென்ன? வாஸந்தீ! வாம்மா! போகலாம். கருப்பா! கருப்பா! வண்டியெ கட்டுடா" என்று கூறிக் கொண்டே ரணவீர சண்டிபோல் வாஸந்தியுடன் வெளியில் வந்தாள்.

கதவின் வெளியில் ஆட்டுக் கிடாவைப்போல் தலையை யாட்டிக் கொண்டே நின்றிருந்த கிழவன், பொங்கி வரும் ஆத்திரத்

துடன் “ஆஹா! அத்தனெ தைரியமா வந்துடுத்து? ஏதோ பார்க்கலாம். எங்கே? எங்கெ? திமிர் பிடிச்ச கழுதெ! அந்த மூர்த்தி வலைலே நீ விழுந்துட்டயா? அந்த மாயக் கொள்ளெக்காரன் ஒன்னெ மயக்கிட்டானா? ஓஹோ! தெரிஞ்சுதுடீ தெரிஞ்சுது. சீச்சீ அடுமெ நாயே! உள்ளே போ!” என்று கூறிக்கொண்டே, மைதிலியின் தலை மயிரைப் பிடித்துத் தடதடவென்று இழுத்து உள்ளே தாறுமாறாய்த் தடாரென்று தள்ளிக் கதவைப் பூட்டி விட்டு, வாஸந்தியை நோக்கினார்.

ஏற்கெனவே சிம்மத்தைக் கண்ட மான்போல் நடுங்கும் வாஸந்தி, கிழவரின் இந்த ஆத்திரப் பேச்சையும், செய்கையையும் பார்த்த உடனே, தன்னையும் அவர் கொலை செய்து விடுவார் என்ற திகில் பிடித்துக் கொண்டதால், பயந்து நடுங்கியபடியே, “மாமீ! நீங்க வர வேண்டாம். நாங்கல்லாம் சமுத்திரத்திலெ விழுந்து செத்துப் போயிட்டோம். இனுமே நாங்க பூமிலெ இருக்கவே வாண்டாம்” என்று கத்திக் கொண்டே ஓடி விட்டாள்.

உள்ளே தாறுமாறாகத் தள்ளப்பட்ட மைதிலியின் காதில் இந்தப் பச்சக் குழந்தையின் சொல் விழுந்த உடனே, மூளையே கலங்கி விட்டது. உடனே சமுத்திரமும் அதில் வாஸந்தி, ராஜு, கிழவி மூவரும் விழுந்து விட்டதுபோன்ற ஓர் பயங்கரத் தோற்றமும் கண்முன்பு தோன்றியதால், “ஹா!” வென்ற ஒரே அலத்தல், பெருஞ் சத்தம் நெஞ்சை பிளந்து கொண்டு வந்தது. அடுத்த நிமிடம் மூர்ச்சையாகி விட்டாள். வெளிப் பூட்டு போட்ட கிழவர், வாஸந்தி கூறியதைக் கேட்டதும் ஆத்திரத்துடன் அவளைப் பின் தொடர்ந்து, “சமுத்திரத்திலேயா விழுந்து சாகப் போரே! போ! போ! இப்பவே செத்துப்போ! கொள்ளைக்காரன் பொண்ணா யிருப்பதைக் காட்டிலும், சமத்தா செத்துப்போ” என்றார். மீனாக்ஷியின் கண்ணிலும் கண்ணீர் துளிர்த்தது.

## 46

போலீஸாருக்கு இம்மாயக் கொள்ளைக் கூட்டத்தில் ஒருவரையாவது பிடித்துவிட்ட பெருமை கூறத் திறமில்லை. ஏதோ பெரிய மலையையே புரட்டி விட்டதுபோல ஆநந்தமடைந்து விட்டார்கள். இன்னும் இதன் முழு கூட்டத்தையும் பிடித்து விட்டால், கட்டாயம் இந்த ஊர் போலீஸ் உத்யோகஸ்தர்களுக்கு உண்டாகப் போகும் மதிப்புக்கு எல்லையே இல்லை. குறைந்தது இதில் சம்பந்தப்பட்ட சிலருக்காவது பட்டங்களும் பதக்கங்களும் உத்தியோக உயர்வும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பும் சந்தோஷமும் ஒரு விதமான மனவேகமும் உண்டாகி விட்டன.

ஆனால், ஏகாம்பரத்திற்குமட்டும் தாம் வெற்றி பெற்று விட்டதாக எண்ணும் சந்தோஷமும் திருப்தியும் உண்டாகவே இல்லை. "தன் மனைவியைக் கொலை செய்துவிட்ட கூட்டத்தில் இம் மனிதன் எவ்விதம் சம்பந்தப்பட்டிருப்பான்? அம்மாதிரி செய்ய மனம் வருமா?....ஒரு வேளை வயிற்றுக்கில்லாத கொடுமையால், இவ்விதம் செய்திருப்பானோ! பிழைக்க வழியுந்தான் வேணு மோன்னே? ஆனால், அவன் தான் நிரபராதி என்று கதறுவதைப் பார்த்தால் பரிதாபகரமாக விருக்கிறது. வீட்டில் சோதனை செய்த திலோ அவன் அதில் கட்டாயம் சம்பந்தப்பட்டவன்தான் என்பதற்கு ஆதாரம் கிடைத்திருக்கிறது. எது உண்மை? எதை நம்புவது? என்ன மாய உலகம்?" என்றெல்லாம் தனக்குள் எண்ணமிட்ட வண்ணம் ஸ்டேஷனில் உட்கார்ந்திருந்தார்.

அவர் மனத்தில் போராடும் எண்ணமெல்லாம் தங்கள் டிவிஷன் போலீஸார் கையாலாகாதவர்கள், எதையும் திறமை யுடன் செய்யும் சாமர்த்தியம் இல்லாதவர்கள் என்று மற்ற போலீஸார் சொல்லிவிடப் போகிறார்களே! அந்த இழிவான பேர் இன்றித் தங்கள் ஜில்லாவில் தான் உத்தியோகம் பார்க்கும் டிவி ஷனிலேயே தங்களுக்கு நல்ல பேர் கிடைத்துவிட வேண்டும் என்ற பெரிய எதிர்ப் பார்ப்பும் ஆவலும் நிறைந்திருந்தது.

மூர்த்தியுடன்கூட கைதியாக்கிய மனிதனை எத்தனை உதைத்தாலும், சித்திரவதை செய்தாலும் அவன் சாவதற்கும் தயாராக விருக்கிறானே யன்றி, ஒரு விஷயத்தையும் சொல்ல முன்வரவில்லை. தங்கள் கூட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் நோக்கம் அவனிடம் ஒரு சிறிதுமில்லை. அடித்து அடித்து ஆள் பிரக்ஞையற்று விட்டான். மூர்த்திக்கோ பயித்தியமே பிடித்துவிட்ட மாதிரியாகி விட்டது. இவ்விருவர்களின் மூலம் எவ்விதம் இந்தப் பெரிய கூட்டத்தின் மர்மத்தை யறிவது?

"இந்தப் பச்சிலை எங்கெந்தக் காட்டிலிருக்கிறதோ அங்கெல்லாம் ரகசிய போலீஸாரை நியமித்து, அதை யார் யார் பறிக்க வருகிறார்களோ அவர்களை அப்படி யப்படியே ஓடவிடாமல் காலில் சுட்டுத் தடுத்துப் பிடித்துவிட வேண்டும். மலைகள், காடுகள் எங்கும் ரிஸர்வ் போலீஸ் ரகசியமாகப் பதுங்கிக் கிடக்க வேண்டும். உயிருக்குப் பயப்படக் கூடாது; துணிந்துதான் செல்ல வேண்டும்" என்று ஓர் யோசனை செய்து, மேலதிகாரிகளின் உத்திரவு பெற்று, மேற்குறித்தவாறு செய்ய ஏற்பாடு செய்து விட்டார்கள்.

எங்கு பார்த்தாலும் போலீஸார் ரகசியமாகப் பதுங்கி இருந்து வலை போட்டுத் தேடவாரம்பித்து விட்டார்கள். ஒரு தினம் ஏகாம்பரம் இதர விஷயமாக யோசித்துக் கொண்டே ஸ்டேஷனில் தன் தனியறையில் உட்கார்ந்திருக்கையில், அவருடைய வேலைக்காரன் அலறியடித்துக் கொண்டு ஓடி வந்தான். "எஜமான்! எஜமான்! நம்ப ஊட்டுலே மாயக் கொள்ளைக்காரங்க வந்து, அம்மாளே மழக்கமா தள்ளிப்புட்டு, நகைங்களே கழட்டிகிணு பூட்டாங்க. அம்மாளுக்கு இன்னும் நன்னு தெளியில்லேங்க. அக்குறும்பாக இருக்குங்க!" என்று பயத்தோடு தெரிவித்தான்.

இந்த வார்த்தை ஏகாம்பரத்தின் காதில் முற்றிலும் விழுவதற்குள்ளேயே அவர் தலைமீது எரிமலையே புரண்டு விட்டது போலான சங்கடமும் தவிப்பும் வியப்பும் உண்டாகிவிட்டன. உட்கார்ந்த இடத்திலிருந்து அலறி யடித்துக் கொண்டு எழுந்து, "ஹா!....என்ன! மாயக் கொள்ளையா? நம்ப வீட்லேயா? நம்ப

அம்மாக்கு மயக்கமா? நப்ப அம்மா நகை திருடு போயிட்டதா? என்ன அக்கிரமம் இது? என்ன அவமானம்? ஏண்டா திம்மா! நீங்கள்ளாம் அப்போ எங்கேடா செத்துப்போனங்கோ? சேவகன் எல்லாம் எங்கேடா தொலேஞ்சாங்க?" என்றார்.

திம்மன் :—எஜமான்! நானு தோட்ட வேலே செஞ்சிகினு இருந்தேன். சேவகனே எங்கேயோ அம்மா வெளியே வேலையா அனுப்பினுங்க. சப்பு இஞ்சிபட்டரு ஊட்டேருந்து புஸ்ப்பம் குடுத்துட்டு வரச் சொன்னுங்கன்னு ஒரு வேலெக்காரி வந்து அம்மாகிட்டே குடுத்தா. அம்மா அதை வாங்கி மூந்து பார்த்தாங்க. ஒடனே உயிந்துட்டாங்க. நகைங்கல்லாம் பூட்டுது. நானு உள்ளரே போனபோதுதான் அம்மா இந்த சங்கதியெ சொல்லி ஐயாவெ இட்டுகினு வான்னுங்க. ஓடியாந்தேன். எஜமான்! சீக்கிரம் வாங்க" என்றான்.

ஏகாம்பரத்தின் நிலைமையைக் கூற வேண்டுமா? கொள்ளைக் கூட்டத்தைப் பிடிக்க தானே முயற்சி செய்து விபரீத ஏற்பாடுகள் எல்லாம் செய்து கொண்டிருக்கையில், தன்னுடைய வீட்டிலேயே இந்தக் கொள்ளை நடந்து விட்டதென்றால், இதைவிட அவமானமும், ஆத்திரமும் வேறு என்னதான் வேண்டும்? "இது வெளியில் தெரிந்தால், ஜனங்கள் கை கொட்டிச் சிரிப்பார்களே! ஐயோ என்ன செய்வது?" என்ற அபாரமான மன அதிர்ச்சியும் அவமானமும் அவரை வதைக்கின்றன. உடனே வாயைத் திறக்காமல் வீட்டுக்குக் கிளம்பி வந்தார்.

---

## 47

ஏகத்தில் பலவித உணர்ச்சிகள் ஜொலித்தபடியே ஏகாம்பரம் ஸ்டேஷன் வாசலில் வந்தார். அவர் மனத்தில் ஏற்கெனவேயுள்ள கவலையுடனும் புதிதாகக் கொந்தளிக்கும் பலவிதமான கலக்கத்துடனும் இவர் வீதியில் வந்ததும் அங்குள்ள அதிகோரமான காட்சியைக் கண்டதும், தன் மனக் கொதிப்பையும் மறந்து திடுக்கிட்டு, கண் கலங்கியவாறு சில வினாடி நேரம் அப்படியே தம்பித்து நின்றுவிட்டார்.

அத்தகைய மனத்தை யுருக்கும் காட்சி யாதாக விருக்கும்? குழந்தை வாஸந்தியும் ராஜுவும் ஸ்டேஷனின் வாசலில் நிற்கும் போலீஸ் கான்ஸ்டேபிளை நோக்கி, "ஐயா! எங்களை உள்ளே விடுங்கோ! எங்கப்பாவே கண்ணுலே பாத்துட்டுப் போயிட்ரோம். எங்க உசிர் தவிக்கிறது. அவரே பாக்காட்டா எங்க பிராணனே போயிடும். எங்கப்பா ஒருநாளும் சத்தியமா தப்பே செய்யல்லே. எங்களே உள்ளே விடுங்கோ" என்று கண்ணீர் பெருக வாஸந்தி கெஞ்சினுள்; ராஜுவும் விம்மி விம்மி அழுகிருன்.

நெஞ்சில் ஈவிரக்க மற்ற சேவகன், "சீச்சீ! போ கொள்ளேக்காரன் பொண்ணுன்னு அந்த சாமர்த்தியத்தெ அப்படியே காட்ருயே! உள்ளெ விடவே முடியாது, ஓடிப்போ?" என்று நிர்த்தாக்ஷிண்யமாகப் பிடித்துத் தள்ளும் காக்ஷியை ஏகாம்பரம் கண்டதும் மனம் தத்தளித்துப்போய், "அடேய் 130! நில்லு. இவாளெ குழந்தெகன்னு நெனச்சியா, பெரியவான்னு பாத்தியா!" என்று கூறிக்கொண்டேபோய் குழந்தைகளைக் கட்டிக்கொடுத்து அணைத்துக் கொண்டார்.

அனாதைப் பக்ஷிகள்போல் நிராதரவாய்த் தெருவில் நின்றுவிட்ட இப்பரதேசிகளுக்கு ஒரு பெரிய உத்தியோகஸ்தர் ஆதரவு காட்ட கடவுள் திருவுள்ளமிருந்ததை யறிந்த வாஸந்திக்குச் சந்தோஷமும் துக்கமும் கலந்து பீறிக்கொண்டு வந்துவிட்டன. "மாமா! எங்கப்பாவெ பாக்க விடமாட்டங்களா? தினம் இங்கே வந்து வந்து அழுது கெஞ்சி கேட்டும் விடமாட்டேங்கரா மாமா! நாங்க அனாதைகள் மாமா! எங்களுக்குத் தெரிஞ்ச மைதிலி மாமி எங்களெ அன்னிக்கே அழச்சிண்டு வரேன்னு. அந்தத் தாதா அந்த மாமியெ அடி அடின்னு அடிச்சு உள்ளே போட்டுப் பூட்டிட்டார். அதுனுலே அந்த மாமிக்கு மூளெ கலங்கி பயித்தியம் பிடிச்சு போச்சாம். சதா கத்தராளாம். அழராளாம். சிரிக்கிராளாம். வேலெக்கார கருப்பன் சொன்னுன். அவளுக்கும் அப்படியாயிட்டதால் எங்களுக்கு வேறே கதியே இல்லே மாமா! எங்கப்பாவெ ஒரு நிமிஷம் கண்ணுலெ பாக்கக் காட்டுங்கோ போரும் மாமா!" என்று கோவெனக் கதறியழுதாள்.

மகா கடின இதயத்துடன் செய்யவேண்டிய உத்யோகத்தை வகித்தவராயினும் இவ்வார்த்தைகள் ஏகாம்பரத்தின் இயற்கையான தயாளகுணத்தை மேலோங்கச்செய்து அவர் மனத்தை உருக்கிவிட்டது. தற்போது அவருக்குள்ள மிகவும் நெருக்கடியான சமயத்தில் இக்குழந்தைகளுக்காக நேரத்தைச் செலவு செய்ய அவகாசமில்லை யாதலால், வாஸந்தியைத் தடவிக் கொடுத்து, "அம்மா! நான் ரொம்ப அவசரமும் ஆபத்துமான காரியமாக வெளியில் செல்கிறேன். நீங்களும் சமத்தாக வீட்டுக்குப் போங்கள். ஒங்கப்பா சௌக்கியமா இருக்கிறார். நான் நாளைக்கு உன்னெ அழைச்சிண்டு போறேன். போம்மா" என்று சமாதானம் செய்து அனுப்பிவிட்டுத் தன் வீட்டிற்குச் சென்றார். வாஸந்தியும் அழுதவாறு ராஜுவை அழைத்துக்கொண்டு சென்றுவிட்டாள்.

ஏகாம்பரம் அலையக்குலைய வீட்டிற்கு வரும்போது அக்கம் பக்கம் கும்பு கூடிவிட்டதைக் கான அவர் மனம் புழுங்கியது. "போலீஸ்காரன் வூட்டேகூட கொள்ளை யடிச்சுப்புட்டானுக்கா வேறே யாரு ஊட்டேதான் வரமாட்டாங்க? அநியாயக் கொள்ளையா யிருக்கே!" என்று பொது ஜனங்கள் கூறும் வார்த்தைகள் ஏகாம்பரத்தின் வேதனையை இன்னும் அதிகப்படுத்தியது. அவர் வீதியிலிருந்த கும்பலகளை விலக்கிவிட்டு வீட்டினுள்ளே சென்றார்.

அவர் மனைவி கற்பகாம்பாள் அப்போதுதான் மயக்கம் தெளியப் பெற்றவளாய் வாடிய முகத்துடன் உட்கார்ந்திருந்தாள். அந்தம்மாளுக்குத் தன் முகத்தைப் பார்க்கவும் மிகவும் கஷ்டமாயிருந்தது. ஏகாம்பரம் அவளுடைய வேதனையை உணர்ந்தவராய் "என்ன நடந்தது கற்பகம்?" என்றார்.

கற்பகம் :—சப்-இன்ஸ்பெக்டர் வீட்டிலிருந்து புஷ்பம் கொடுக்கச் சொன்னதாக ஒரு வேலைக்காரி கொண்டுவந்தாள். சப்-இன்ஸ்பெக்டர் வீட்டில் அடிக்கடி அனுப்புகிற வழக்கமுண்டு. அதனால் வாங்கி மோந்து பார்த்தவுடனே மயக்கமா வந்தது. விழித்துப் பார்க்கும்போது நகைகளைக் காணவில்லை. ஒடனே ஒங்களுக்கு

ஆள் அனுப்பினேன். பிறகு எனக்குக் கொஞ்சம் நன்றாகத் தெளிந்த அப்பறம் சப்-இன்ஸ்பெக்டர் வீட்டிலே விசாரித்ததிலே அவா ஒன்றுமே இன்னிக்கு அனுப்பல்லெ. இது மோசமானது என்று சொல்லிட்டா. என்ன செய்யறது. எனக்கு ஒன்னுமே தோணலையே! இதோ பாருங்கோ! இந்தத் துண்டு கடுதாசியே என் மடியிலேயே சொருகி இருந்தது. இதைவிட வெக்கக்கேடு வேறே என்னவேணும்.?

ஏகாம்பரம் :—"என்ன! கடுதாசியா!" என்று கூறிக் கொண்டே அதை வாங்கிப் படித்தார். "போலீஸ் புலியே! எங்களையா நீ பிடிக்கப் போகிறாய்? இதோ யாருடைய சாமர்த்தியம் முதலில் ஜனங்களுக்குத் தெரிந்தது பாரு. இனிமே எங்களைப் பிடிக்கும் நோக்கத்தை விட்டு விட்டு சிவனே என்று இரு. இன்னும் ஆபத்துக்கு ஆளாகாதே; ஜாக்கிரதை" என்று எழுதியிருந்ததைப் படித்ததும் அவர் இதயம் துடித்தது.

கற்பகம் :—(எழுந்து அவர் கைகளைப் பிடித்துக்கொண்டு) இந்தக் கடிதாசியைப் பார்த்தா எனக்கு ரொம்ப பயமா இருக்கு! வேறே ஏதாவது ஆபத்து வந்துட்டா என்ன செய்றது. நீங்க வெளியிலே போயி வீட்டுக்குத் திரும்பி வரவரைக்கும் என் மனது தவிக்கிறது. இன்னும் இது வேறே பயமுறுத்தி இருக்கிறது. நீங்க ரெண்டு மாசத்துக்கு லீவு வாங்கிண்டு ஊருக்குப்போயிடலாமே!—என்று விசனமும் பயமும் கலந்த உணர்ச்சியுடன் கூறினாள்.

ஏகாம்பரம் :—(பெரிதாகச் சிரித்துக்கொண்டே) கற்பகம்! நீ கூடவா இத்தனை அசட்டுத்தனமாகப் பேசறெ. ஏற்கெனவே போலீஸ்காரன் வீட்டிலேயெ திருட்டுப் போயிட்டதைப்பத்தி ஜனங்கள் சிரிப்பார்களேன்னு நான் பயந்து சாகிறேன். இன்னும் ஊரையும் விட்டுப் போயிட்டா உத்தியோகத்தை ராஜீநாமா கொடுத்துவிட்டே போகவேண்டியதுதான். இனுமே மனுஷா மூஞ்சிலெ முழிக்க யோக்கியதையே இல்லே. அந்தமாதிரி ஆபத்து வரணும்னு இருந்தா அதைத் தடுக்க முடியுமா என்ன? வரது

வந்துதான் தீரும். இதுக்கெல்லாம் பயப்படாதே! கடவுளைப் பஜனை பண்ணு. அவன் காப்பாத்துவான்—என்று அவளுக்குத் தைரியங் கூறிவிட்டுப் போய்விட்டார்.

## 48

"வந்தேமாதரம்! மகாத்மா காந்திக்கு ஜே! பாரத மாதாவுக்கு ஜே! ராஷ்டிரபதிக்கு ஜே! சுபாஷ் பாபு கி ஜே! வந்தே மாதரம்.

('மேரே மவுலாபுலா' மெட்டு)

வந்தேமாதரமே மங்களகோஷமே
நம்தேயம் வாழ்ந்திட வந்தனை செய்குவோம் (வ)

சாந்தமாமுனி காந்தியின்வழி
மாந்தர் ஒன்ருய்ச் சேர்ந்திடில்
இன்னல்கள் நிற்குமோ ஏழ்மை நிலைக்குமோ (வ)

வேற்றுமையை அகற்றி யாவரும்
ஒற்றுமையாய் உழைத்திடில்
க்ஷேமம் நிறைந்திடும். க்ஷாமம் மறைந்திடும் (வ)

அன்னை நாட்டினில் அன்புகொள்ளா
கன்னெஞ்சரைக் கண்டுருகுவோம்
காந்திக்கதரை கட்டுமென்று நாம்
சாந்தமாகவே மொழிகுவோம்
அஹிம்சையை மறந்திடாததன் வழி செல்லுவோம் (வ)

அன்பர்களே! உலகம் போற்றும் உத்தம தியாக மூர்த்தியான காந்தியடிகளின் பிறந்த தினக் கொண்டாட்டத்தை இன்று எல்லோரும் கொண்டாடி அவரவர் தொழும் தெய்வங்களை வேண்டி, மகாத்மா காந்தி, சென்றது போக இன்னும் ஒரு மார்க்கண்டேயனைப்போல் சிரஞ்சீவியாக வாழும்படிக்கு அருள் செய்யு

மாறு பிரார்த்தனை செய்யுங்கள். ஏழை மக்களின் இடர் தீர்க்க அவதரித்த வள்ளல். அவர் தாய்நாட்டின் சிறப்பிற்கும்—பண்டைய பெருமைக்கும்—புத்துயிர் அளிக்கத் தோன்றிய பெருமான். அடிமையை அகற்றவந்த அழியாச்சுடர். அறியாமையின் அந்தகாரத்தைப் போக்கி, சுதந்தர ஒளியை விளக்கவந்த அவதாரப் புருடரான மகாத்மா காந்தியடிகள் நமக்கு அழியாப் பொருளாய் அவனியிலிருந்து அனேக அரிய தொண்டுகளை ஆற்றி உதவும் சக்தியை அவருக்குக் கொடுக்கும்படி எல்லோரும் இன்று ஆண்டவனை வேண்டிக் கொள்ளுங்கள். இது ஓர் பெரிய கஷ்டமில்லை. மனமுண்டாயின் மார்க்கமுண்டு. மகாத்மா காந்திக்கு ஜே! பாரதமாதாவுக்கு ஜே! வந்தேமாதரம்"

என்று கூறிக்கொண்டே காந்திக் குல்லாய தரித்து கதரணிந்து தேசியக் கொடி தாங்கிய தொண்டர்களும் தேச சேவகிகளும் அடங்கிய அதியற்புதமும் ஆநந்தமும் கூடிய ஊர்வலம் வீதியில் வந்தது. எத்தகைய அடிமை புத்தியும், சுதந்திர உணர்ச்சியற்றத்தன்மையும் இருப்பவர்கள்கூடத் தேசிய ஊர்வலத்தைப் பார்க்க மனங்கூசி கண்ணை மூடிக்கொள்பவர் உலகில் அனேகமாக இல்லை என்றே சொல்லலாம்.

தேச பக்தியில்லாதவர்களுக்குக்கூட தேச பக்தி ஊற்றுச் சுறக்குமன்றோ! இந்த அற்புத ஊர்வலத்தின் காந்தம் இழுக்கப்பட்டு அதில் வந்து கலந்துகொண்ட ஆண் பெண்கள் எத்தனையோ பேர்கள். தம்மை மறந்து உற்சாகத்துடன் மக்களின் இதயம் அந்த மகாத்மாவை வாழ்த்தி ஆசி கூறிற்று. "வாழ்க மகாத்மா! வாழ்க நம் பாரதநாடு!" என்ற ஆர்வத்துடன் கூடிய கோஷம் வாயிலிருந்து வெளிப்பட்டது. உலக விவகாரமே தெரியாத தெள்ளிய மனதுடைய குழந்தைகள் எல்லாம் தம்மை யறியாத ஆநந்தத்துடன், "மகாத்மா காந்திக்கு ஜே! பாரதமாதா கி ஜே!" என்று கத்திக்கொண்டு, இந்தப் பஜனையில் வந்து சேர்ந்தார்கள்.

இத்தகைய அதி மனோகரமான பஜனை வீதியில் வரும்போது நமது பச்சிளங் குழந்தைகளாகிய வாஸந்தியும் ராஜுவும்

போலீஸ் ஸ்டேஷனிலிருந்து திரும்பி வருகையில், இளந்தளிர்களாகையால் சோகமும் பசியும் தாங்காமல் களைப்பு மேலிட்டு உடைந்த மனத்துடன் நடக்கமாட்டாது நடு வீதியில் விழுந்துவிட்டார்கள்.

ஏழைகளுக்கும், எளியவர்களுக்கும் உழைப்பதற்கென்றே கங்கணங் கட்டிக்கொண்டிருக்கும் இந்தத் தொண்டர் படையினர் இந்தக் குழந்தைகளின் பரிதாபத்தைக் கண்டு சகிக்காமல், ஓட்டமாக ஓடி வந்து, இரு குழந்தைகளையும் தூக்கி மடியில் போட்டுக் கொண்டு, ஜலம் விட்டு முகத்தைக் கழுவினார்கள். அப்படியும் தெளியவில்லை.

உடனே தொண்டர் படையின் தலைவன், "நான் இவர்களை நமது ஆச்ரமத்திற்குக் கொண்டுபோய் தெளியச் செய்து பின் வீட்டிற்கனுப்புகிறேன். நீங்கள் பஜனையை முடித்துக்கொண்டு வாருங்கள்" என்று கூறிவிட்டு, குழந்தைகளைத் தோளில் தாங்கிக் கொண்டு சென்றான். 'ஜே! வந்தேமாதரம். பாரதமாதாவுக்கு ஜே!' என்ற கோஷத்துடன் ஊர்வலம் சென்றது.

## 49

காந்தி ஆசிரமம் என்ற பெயருடன் விளங்கும் ஓர் சாதாரணமான பெரிய வீட்டில் எங்கு பார்த்தாலும் தேசியத் தலைவர்களின் படங்களும், கடவுளின் படங்களும், தேசியக்கொடியும் ராட்டினங்களும் பஞ்சுச் சுருள்களும் நூற்ற நூல்களும் நெய்வதற்குத் தயாராகச் சுற்றி வைத்திருக்கும் நூல்களுமாக நிறைந்திருக்கின்றன.

அன்று மகாத்மா காந்தியின் பிறந்த தினமாகையால், மாவிலை முதலிய தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பின்புறத்தில் பெரிய அண்டாக்களில் சுமார் 500 பேர்களுக்கு ஆகக்கூடிய சமயல் தயாராகிக்கொண்டிருக்கிறது. அதற்கான காய்



கறிகளை ஒருபுறம் சிலர் நறுக்கிக்கொண்டிருந்தார்கள். இவைகளை எல்லாம் சில தேச சேவகிகள் மேல் பார்வை பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

இத்தகைய ஆரவாரமான இடத்தில் தொண்டர் படையின் தலைவன் குழந்தைகளைக் கொண்டு வந்து அவர்களுக்கு ஒரு டம்ளர் பாலை வார்த்துக் குடிக்கச் செய்து களை தெளிவித்தான். வாஸந்தி முதலில் தெளிவு பெற்றுக் கண்ணைத் திறந்து பார்க் கையில், "அப்பா !....இல்லெ....மாமா....இல்லெ. இல்லெ....மாமி ! ஊஹூம்....பாட்டீ....என்று விவரமில்லாது கேட்டபடியே நாற் புறமும் திரும்பிப் பார்த்தாள்.

அந்தக் கூடத்தில் மகாத்மா காந்தியின் பெரிய உருவப் படத்திற்குப் புஷ்ப மாலைகள் போட்டு அலங்காரம் செய்திருப் பதைப் பார்த்ததும் அவளை யறியாமல் அவள் முகத்தில் ஒரு புதிய உணர்ச்சியும், தேஜஸும், புன்சிரிப்புந் தவழ்ந்தன. ஹா ! மகாத்மா காந்தி ! காந்தி. ராஜு ! காந்தி பாருடா ! என்று ஒரு நிமிடத்தில் தன் விசனத்தையும் மனக் கலக்கத்தையும் மறந்து போய், படத்தின் முன்பு ஓடினாள்.

தொண்டர் படைத் தலைவனும் 'அவள் போகிற வழியே விட்டுப் பிடிப்போம்' என்ற நோக்கத்துடன் ஆநந்தமாகப் பார்த்துக் கொண்டே நின்றான். ராஜுவும் எழுந்து வாஸந்தி பின்னோடு சென்றான். வாஸந்திக்கு அங்குள்ள படங்களையும் ராட்டினங்களையும் பார்த்ததும் பிரமித்து விட்டது. ஒன்றுமே தோன்றவில்லை. மகாத்மா காந்தி படத்தை உற்று உற்று பார்த்தாள். மகாத்மா காந்தீ தாதா ! நீங்க ரொம்ம நல்லவ ராச்சே ! எங்கப்பாவே விட்டுவிடுவாளா ! எங்கப்பா குத்தமே பண் ணலேயே! அதெ போலீஸாருக்கு நீங்க சொல்லுவங்களா!" என்று வாய்விட்டுக் கூறும்போது, அவளுக்குப் பழைய உணர்ச்சிகளும் துக்கமும் பொங்கி வந்து விட்டது. குலுங்கக் குலுங்க அழத் தொடங்கி விட்டாள்.

உடனே தொண்டர் படைத் தலைவன் ஓடி வந்து, வாஸந் தியைத் தூக்கிக் கட்டிக்கொண்டு, "அம்மா ! குழந்தாய் ! எம்மா,

அழறே! ஒங்கப்பா எங்கே இருக்கா! சொல்லும்மா!” என்று நய மாகக் கேட்டுக் கண்ணைத் துடைத்துச் சமாதானம் செய்தான்.

வாஸந்தி:—மாமா! நீங்க யாரு. இது எந்த எடம்?

தலைவன்:—நான் காந்தியின் தொண்டன். இது காந்தியின் ஆசிரமம். நீ பயப்படாதெ சொல்லும்மா!

வாஸந்தி:—“மாமா! மாயக் கொள்ளெக்காராளாலே எங்கம்மா செத்துப்போயிட்டா! எங்கப்பாவேயும் அதெ கொள்ளெலெ சேந்திருக்கான்னு போலீஸார் புடிச்சிண்டு போயிட்டா. எங்க மாமிக்கும் பயித்தியம் புடிச்சுடுத்து. எங்க பாட்டி தள்ளாதவ. நாங்க எங்கப்பாவே பாக்கக்கூட போலீஸார் விட மாட்டேன்னுட்டா மாமா! எங்கப்பாவே பாத்து எத்தனையோ நாளாச்சு மாமா! எங்கப்பாக்குக் கையும் நொண்டி மாமா! நாங்க பரதேசியாப் பூட்டோம் மாமா! நாங்க சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு மாமா! எங்கப்பாவெ பார்க்கணுமே....மாமா....மாமா!” என்று கண்ணீர் பெருகத் தாங்கமாட்டாது விக்கி விக்கி அழுது விட்டாள்.

தலைவன்:—அம்மா! அழாதே. நீங்க பரதேசி இல்லெ. இதோ இந்த மகாத்மா காந்தி உங்களுக்கு ஆதரவு இருக்கார். பயப்படாதே. கண்ணு! இதோ பாரு. அழாதெ. ஒங்கப்பாவுண்டே நானே அழைச்சிண்டு போறேன். நீ பயப்படாதே! நீ இந்த ஆசிரமத்திலேயே இரு. நாங்கள்ளாம் ஒங்க மனுஷா தான். கடவுள் இருக்கும்போது உனக்கு குறைவு ஒன்னுமே இல்லே. அழாதேம்மா!—என்று வெகு வாஞ்சையோடு சொல்லி, அவள் புத்தியை மாற்றுவதற்கு ராட்டினத்தை எல்லாம் சுற்றிக் காட்டினன்.

வாஸந்தி:—மாமா! நாங்க இங்கேயே இருக்கலாமா? எங்க பாட்டீ....

தலைவன்:—அவகூடதாம்மா!

வாஸந்தி:—மாமா! நீங்க எவ்வளவு நல்லவா மாமா!—என்று அவன் கையைப் பிடித்துக்கொண்டு ஆநந்த நர்த்தனம் செய்தாள். மாமா! எங்கப்பாவே பாக்க அழச்சிண்டு போரங்களா?

தலைவன் :—ஆகட்டும். இன்னிக்கு மகாத்மா காந்திக்குப் பிறந்த நாள் பஜனை ஊர்வலம் வெளியிலே போயிருக்கு. அவா வந்ததும் இங்கே பஜனை நடக்கும். 500 பேர் ஏழைகளுக்குச் சாப்பாடு நடக்கும். அப்புறம் சாயங்காலம் மீட்டிங்கு; இன்னிக்கு திருநாள் மாதிரிதான்.

வாஸந்தி :—(அடங்காத சந்தோஷத்துடன் தலைவனின் இடுப்பில் கையைப் போட்டு வளைத்துக்கொண்டு) "ஆ! மாமா! நானும் பஜனையிலேயே வரேனே! எனக்கும் காந்தி பாட்டுத் தெரியுமே! ஆனா கதர் பாவாடை இல்லேயே மாமா!" என்று முகத்தைச் சுணுக்கிக் கொண்டாள்.

உடனே தலைவன் உள்ளே போய் கதர்ப் பாவாடை, சொக்காய், ராஜுவுக்குக் கதர் நிஜார், சொக்காய் இரண்டும் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்து "சரிதானா? இப்போ நீயும் காந்திக்காரியாயிட்டே இல்லையா?" என்றான். வாஸந்தி தாங்கமாட்டாத ஆனந்தத்துடன் உள்ளே ஓடிப்போய் தூய்மையான கதருடை யணிந்து கொண்டு ஆநந்த பிம்பமாய் வெளியில் ஓடிவந்து, "ராஜு! பாருடா நன்னா இருக்காடா! மகாத்மாவெ நமஸ்காரம் செய்வோம்டா!" என்று கூறி இருவரும் நமஸ்கரித்தார்கள்.

இதற்குள் ஊர்வலம் அத் தெருவில் வரும் சப்தம் வந்தே மாதரம் என்ற கோஷத்துடன் கேட்டதும் வாஸந்தி, "மாமா! வாங்கோ மாமா! வாங்கோ!" என்று அவன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வாசலில் சென்று பஜனையில் கலந்து கொண்டாள். வாஸந்திக்கும் ராஜுவுக்கும் உண்டான ஆநந்தத்திற்கு எல்லையே இல்லை. தங்களையே மறந்து விட்டார்களென்றும் கூறலாம்.

அன்று நடந்த சகல வைபவங்களிலும் இவர்கள் கலந்து கொண்டதோடு ஏழைகளுக்கு அன்னமளிக்கையில், அவர்களுக்கு வாஸந்தி தீர்த்தங் கொடுத்து மகிழும் கைங்கரியத்திலும் ஈடுபட்டாள். அன்றே தொண்டர் தலைவன் வாஸந்தியுடன் அவள் வீட்டிற்குச் சென்று கிழவியையும், சாமான்களையும், தையல்

மெஷினையும் தங்களுடைய ஆசிரமத்திற்குக் கொண்டு வந்து விட்டான். கிழவியின் நிலைமை இருக்குமோ, போய் விடுமோ என்ற கதியில் இருப்பதை குழந்தை வாஸந்தி எப்படி அறிவாள்? சதா தன் பிதாவின் விடுதலையையே கோரி அங்குள்ள கடவுளின் முன்பும், மகாத்மா காந்தியின் படத்திற்கு முன்பும் வாஸந்தி தன் பிதாவைச் சீக்கிரம் விடுதலை செய்யும்படி வேண்டித் தொழுவாள்.

## 50

பொன்னை உருக்கி வார்த்ததுபோல் சூரியன் உலகத்தை பொன்மயமாக்கி விட்டான். வெளியில் எங்கு பார்த்தாலும் ஒரே பொன்வர்ணமாய் ஜகஜ் ஜோதியாய் மின்னும் காக்ஷி மக்களைப் பரவசமுறச் செய்கிறது. ஆனால், வெளிச்சமும் இருளும் ஒன்றாகவே ஆய்விட்ட மைதிலிக்கு எதுதான் தெரியப்போகிறது. சுதந்திரத்துடன் சுயேச்சையாயும் ஆநந்தமாயும் பறக்கக்கூடிய கிளியைக் கூட்டிலேயே அடைத்து வைத்துக் கொல்வதுபோல் மைதிலி இளம்பிராயத்தின் சுகபோக பாக்கியங்களை யொன்றுமே யறியாது சதா விசனமும், கவலையும், விரக்தியும் கொண்டு ஒரு தனி அறையிலும் போட்டு அடைபட்டு விட்டதால், அவளுக்குப் பயித்தியம் பிடிப்பது இயற்கை யல்லவா?

தலைவிரி கோலமும் சதா பெருங் கூக்குரலும் ஓலமும் சிரிப்பும் அழுகையும் அவளுடைய பரிதாபமும் கருப்பனால் கண்டு சகிக்கவே முடியவில்லை. அவன் மனம் உருகியோடுகிறது. மைதிலி இம்மாதிரி ஒரு நிலைமையை அடைவாள் என்று அவன் கனவுகூடக் காணவில்லையாகையால், அவளுக்கு ஏற்பட்ட இக்கதியை எண்ண எண்ண கருப்பனால் தாங்க முடியாத துக்கம் மேலிட்டு விட்டது. இம்மாதிரி இந்த இளந்தளிர் அல்லல் படுவதைக் காட்டிலும் இவள் இறந்து விட்டாலும் தேவலையே

என்ற எண்ணம் அன்பின் ஆழத்தின் வேகத்தால் கருப்பனின் இதயத்தில் தோன்றி வதைக்க ஆரம்பித்தது.

**மை**திலிக்குப் பயித்தியம் பிடித்ததையறிந்த பிறகு கிழவர் அவளைப் புறக்கடைப் பக்கம் உள்ள தனியறையில் போட்டுப் பூட்டி விட்டார். கருப்பனைத் தவிர மற்ற எவருக்கும் மைதிலி அடங்கி சாப்பிடுவது கிடையாது. சதா தலையணைகளை நோக்கி "வேணீ! பேசேன். ஒரு வார்த்தை சொல்லேன். வாஸந்தி! அழாதே கண்ணா! ஹி ஹி ஹி ஹி" என்று பெரிதாகச் சிரிப்பதும், "ஐயோ! மூர்த்தி! ஒன் கை நொண்டியாயிடுத்தே. அடாடா!" என்று அழுவதும், "வேணுசாமீ! வராதே. கெழவன் ஒன்னெ கொன்னுப்புடுவான். போயிடு, போயிடு!" என்று முகத்தைச் சிணுப்பதுமாக ஆய்விட்டாள்.

**த**ன் மனைவிக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதென்று வெளியில் சொல்லிக்கொள்ள கிழவருக்குப் பெரிய அவமானம். ஆனால், அவள் அடங்கி ஒடுங்கி இருப்பதற்காகவும் பிறர் அவளைப் பார்த்துக் கண்ணைப் போடாமலிருப்பதற்காகவும் வீட்டை விட்டு வெளிவராதபடி கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறேன் என்று ஜம்பம் சொல்லிக்கொள்ளும் அல்ப புத்தி, பயித்தியம் என்று கூறுவதைவிடக் கேவலமானது என்று அவர் எண்ணவே இல்லை. இம் மாதிரி சொல்வதில் மகா உத்தம சிகாமணியாகிய மைதிலியின் கற்புக்குப் பங்கமாக முடியுமே என்று அந்தப் படு பாவி கிழம் நினைக்கவே இல்லை.

**வீ**ட்டின் அலங்கோலம் இம்மாதிரியாகிவிட்டதால், மீனுவும் முத்துச்சாமியும் வேதனையொருபுறமும், சரியாக கவனிப்பாரற்ற பரதேசித்தனமொருபுறமும் ஒன்று கூடி அவர்கள் துரும்பென மெலிந்துவிட்டார்கள். கிழவர் ஆத்திரத்தில் எத்தனை திட்டிய போதிலும் வேணுசாமியின் மனம் தாங்காமல் ஒரு தகுந்த ஆளையனுப்பி, அவ்விருவர்களையும் அழைத்துக்கொண்டு போய்விட்டான். கிழவரும் இச்சமயம் அவர்கள் வெளியூருக்குச் சென்றிருப்பதே நலமென்று கருதிப் பேசாதிருந்துவிட்டார்.

கருப்பன், தன் வீட்டில் காவல் காப்பதற்கும் மைதிலியைக் கவனிப்பதற்கும் பொறுப்பாளியாகிவிட்டான். வேளா வேளைக்கு மைதிலிக்கு நல்ல வார்த்தைகள் சொல்வதுடன் வேணி உயிருடனிருப்பதாகவே கதைகளைச் சொல்லி, அவளை ஒரு நாளைக்கு ஒரு வேளையாவது சாப்பிடச் செய்வான். மனம் திரும்பியபோது அவள் ஒரு க்கவளம் சாப்பிடுவாள். மனம் திரும்பாதபோது கடவுளே வந்தாலும் தொட்டுப் பார்க்கமாட்டாள். மைதிலிக்காக உண்மையில் மனம் உருகி பரிதாபத்துடன் கண்ணீர் பெருக்கக்கூடிய பாசமுள்ள மனிதன் கருப்பன் ஒருவன்தான்; ஆகையால் அவன் அவளைக் குழந்தை முதல் தூக்கி வளர்த்த பேரன்பின் வேகத்தினால் நாம் முன் கூறியபடி கன்றுவியைக் கண்டு சகிக்காமல் அவளது மரணத்தையே கோரவும் துணிந்தான்.

மைதிலி தலைவிரி கோலமாய் கட்டிலில் உட்கார்ந்து கடகடவென்று சிரித்துக்கொண்டும் தலையையும் முகத்தையும் பிச்சிக்கொண்டும் இருக்கையில் கருப்பன் ஆகாரத்துடன் உள்ளே வந்தான். கருப்பனின் மனைவியும் கூட வந்தாள். இருவருடைய கண்களிலும் கண்ணீர் பெருகுகிறது.

கருப்பன் :—(கெஞ்சிய குரலில்) சின்னம்மா! இதைச் சாப்பிட்டுடும்மா! இன்னிக்கு வேணியம்மா கட்டாயம் ஒன்னெ பாக்க வராங்களாம். சீக்கிரம் துண்ணுபுடு பாக்கலாம். காத்தாயி கிட்டெ தலெ சீவிக்கோ பாக்கலாம்.

மைதிலி :—அஹ் ஹ ஹ் ஹ் ஹா........போடா போ! மன்மத பாண சஞ்சீவி சாப்பட்ரவாளுக்குக் குடுடா! எனக்கு வேண்டாண்டா! வாஸந்தி! நீயுமா செத்துபூட்டே........ராஜு! ஐயையோ! நீயும் செத்துப்பூட்டயா....வேணீ! நீ ஏன் செத்துப் போனே?....மூர்த்தி! நீ ஏன் செத்துபோகவே,........நீ அசடு. நீயும் செத்துப்போ....ஹி ஹி ஹி—என்று சம்பந்தமில்லாது பிதற்றியபடியே சாப்பாட்டை எட்டி உதைத்துத் தள்ளினாள். கருப்பனும் காத்தாயியும் கண்ணீர்விட்டார்கள்.

கருப்பன் :—அம்மா! நீ அவங்களே எல்லாம் இதோ பாக்கரயா! இதோ பாரேன் அவங்களே—என்று கூறிக்கொண்டே

மூர்த்தி, வேணி, குழந்தைகள் ஆகியோரடங்கிய புகைப்படத்தை அவளுக்குக் காட்டினன். அதைக் கண்ட உடன் மைதிலியின் ஆவேசமும் நிலைமையும் கரைபுரண்டன. ஹா! வேணீ! வேணீ! நீ செத்துப்போகலேயே....என் கண்மணிகளே! மூர்த்தி!....அதோ! அதோ! கை ஒடயலேயே. நன்னு இருக்கே. வாஸந்தியெ கட்டிண்டிருக்கயே. அப்பாடா! இப்பதான் சரியாச்சு....கரப்பா! இவாளுக்கெல்லாம் சாப்பாடு போட்ரா! பசிக்கிறதுன்னு அழறாடா! ஊம்....போடு. போடுடா!" என்று அந்தப் படத்துடன் குலாவிச் சிரிப்பதும் அழுவதுமாக வாரம்பித்தாள்.

இதை வெளியிலிருந்து பார்த்துக்கொண்டே வந்த கிழவர் தலையில் இரண்டு கையாலும் அடித்துக்கொண்டு, 'உம்....கிரகச் சாரம்; தலையெழுத்து. ஊர்லே தினம் தினம் எத்தனையோ பேர் செத்துப்போறாளே. இந்தச் சனியனுக்குச் சாவு வரக்கூடாதா! என் மானத்தெ வாங்க இன்னும் சாகாதெ இருக்கே பீடை" என்ற குரல் கருப்பனின் காதில் விழுந்ததும் அவன் இதயமே பிளந்துவிடும்போலாகிவிட்டது.

அவன் மனத்தைப் பீறிக்கொண்டு வரும் ஆத்திரத்தினுலும் அனுதாபத்தினுலும் எஜமான் என்ற மரியாதையையும் மறந்து "எஜமான்! நீங்க சொல்றது ரொம்ப உளுமெங்க. எங்காச்சும் ஒரு விஷம் அம்பிட்டுதுண்ணு ஒங்களுக்குப் பலியான இந்தம் மாளுக்குக் குடுத்து நானும் துண்ணுப்புடுவேன். சாவாத பொணமா இருக்கரத்துலே செத்த பொணமாயிட்டா ரொம்ப நல்லா இருக்கும்" என்று மனம் கொதிக்கக் கூறினன். அதே சமயம் எதிர் வீட்டுக் கிழவர் வேதாசலத்தைக் கூப்பிட்ட குரல் கேட்டதும் அவர் கருப்பனை ஒருதரம் முறைத்துப் பார்த்துவிட்டு ஓட்டமாக ஓடினர்.

## 51

கிழவர் தன் அந்தரங்க தோழருடன் தமது தனியறைக்குச் சென்ருர். வேதாசலத்தின் தோளில் தட்டிக் கொடுத்து, "அடேய் வேதாசலம்! நமக்கு நல்ல காலம் பிறக்கும் நாள் வந்துடுத்துடா! நேத்திக்கி ஒரு பைராகி வந்தான் பாரு. அவன் யாரோ ஒரு பெரிய மகா தபசிகிட்டெ ஏதேதோ மந்திரம் தந்திரம் மருந்து வகை எல்லாம் கத்துண்டு பெரிய நிபுணனுயிட்டானும். தங்கம் பண்ணத் தெரியுமாம். வெள்ளி பண்ணத் தெரியுமாம். அதெல்லாங் கடக்கட்டும். நம் மைப்போல கிழவன்களெ—

கிழவர் :—(குறுக்கே விழுந்து) டேய்! நீ நாசமாப்போக. பாக்கரவாள்ளாம் கிழவன்னு சொல்ரபோதே என் உசிரு போராப் பலெ இருக்கு. இன்னும் நீயும் சொல்லி எழவெடுக்கிறயெ! இனுமே இப்படி சொல்லாதேடா!

எ. கி. :—இல்லெ! இல்லெ.... அப்படிப்பட்டவாளுக்கு மருந்து குடுத்தாக்கா ஒடனே சின்னபிள்ளை மாதிரி பலமும் சுறு சுறுப்பும் வாலிபமும் தேகக்கட்டும் வந்துட்ரதாண்டா! அந்த மாதிரி எத்தனேயோ பேர் சாப்பிட்டு வாலிபமா இருக்கறவாளே நேரில் அழைச்சிண்டு போய் அவன் காட்டினுன். எனக்கு ஆச்சரியமா யிருந்தது. அந்தப் பைராகியெ இப்பொ இங்கே வரச்சொல்லி இருக்கேன். அதெ ஒன்னிடம் முன்னதாகத் தெரிவிக்கவே வந்தேன். அதோ பைராகி வரான். பாத்தியா எப்படி இருக்கான்? "வாங்கோ பைராகிவாள்! ஆயிபெ இதர் பைட்டியே!" என்ருர். பைராகியும் வந்து உட்கார்ந்தார். "ஜே ஸீதாராம்! ஜே ஸீதாராம்!" என்று கூறியபடியே மருந்துப் பெட்டியை அவிழ்த்தார்.

வேதாசலம்:—(சந்தோஷத்துடன்) ஏன் ஐயா! இதெல்லாம் நன்னு பலிச்சிருக்கா.

பைராகி:—பேஷா பலிச்சிருக்கு; இவாளேதான் நேத்திக்கு யழைச்சிண்டு போய் காட்டினேனே. அவ்வளவு என்னத்துக்கு. எனக்கே முதல்லே சந்தேகமாயிருந்தது. என் தமயனுக்கே கொடுத்துப் பரீக்ஷித்த பிறகே பொது மக்களுக்குக் குடுக்கவாரம் பிச்சேன். இதோ! இது மன்மதபாண லேகியம். இது மதன

பான சூர்ணம். இது மாரலீலா ஷர்பத்து. மூனு மாதிரி செய்திருக்கிறது. எல்லாம் ஒரே சத்துள்ளதுதான். ரூபந்தான் வேறு. இதோ ஒரு உருண்டெ சாப்பிட்டுப் பாருமே. இப்பவே நல்ல தென்பு உண்டாகும்—என்று லேகியத்தில் ஒரு உருண்டை கொடுத்தார்.

கிழவர் கைகளை நன்ருகத் துடைத்துக்கொண்டு மன்மதனை நினைத்தபடியே லேகியத்தை வாங்கிச் சாப்பிட்டார். "அடாடாடா! என்ன ருசியா இருக்கு? என்ன ஆநந்தமா இருக்கு ? நீ சாப்பிட்டு பாருடா!" என்ருர். மற்ருெரு கிழவரும் வாங்கி சாப்பிட்டார். இருவருக்கும் சந்தோஷம் சொல்லத் திறமில்லை. "சரி. இந்த லேகியத்தை அப்படியே எனக்குக் குடுத்துடும். அவருக்கு நாளைக்கு பண்ணித் தரலாம்" என்று கிழவர் டப்பியுடன் வாங்கிக் கொண்டு "பணம் எவ்வளவு?" என்று கேட்டார்.

பைராகி சற்றுத் தயங்கியபடியே "கடவுள் சாக்ஷியாக 15 ரூபாய் செலவாச்சு. ஐயா அதுக்குமேலே என்ன குடுத்தாலும் சரி" என்ருர். கிழவர் இரண்டு பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தார். அவ்வறையின் ஜன்னலுக்கு வெளியே நின்ற கருப்பன் ஜன்னலால் இவைகளைப் பார்த்துக்கொண்டே "ஐயோ ! தலைவிதியே ! இவன் யாரோ இந்தக் கிழவனின் பைத்தியத்தைத் தெரிஞ்சுகினு பணம் அடிச்சிகினு போக வந்திருக்கான். இப்படி ஏமாற்றதே! ஊம். விதி! விதி! கிளியாட்டும் பொண்ணை கொண்ணு புட்டு இதுக்கு மருந்து வேரயா !" என்று முணு முணுத்தான்.

## 52

**க**ல்லுக்குள்ளிருக்கும் தேரைக்கும், கருப்பைக்குள்ளிருக்கும் சிசுவுக்கும், காட்டிலிருக்கும் மரங்களுக்கும் கடவுள் தம் பொறுப்பாக உணவளித்துக் காக்கவில்லையா ! அதுபோல் அவரால் ஆக்கப்பட்ட உலகத்தில் அவரால் படைக்கப்பட்ட ஒரு குடும்பத்தைக் காக்காது கைவிடுவாரா ! விடமாட்டார். யார் மூலமேனும் தம் காத்தலான

தொழிலை நடத்தியே தீருவார். நமது குழந்தைகளுக்கு இத் தேசியத் தொண்டர்களை ஏவி உதவி புரியச் செய்தார்போலும்.

கிழவி ஆசிரமத்திற்கு வந்ததும், சற்று தேறினாள். குழந்தைகள் ஆசிரமத்தின் ஆனந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு நூல் நூற்கவும், பஞ்சு பதம் செய்யவும், வீடு வீடாகச் சென்று, "காங்கிரஸில் அங்கத்தினர்களாகச் சேருங்கள். தேசியக் கக்ஷியைப் பலப்படுத்துங்கள். பாரத தேசத்தின் கௌரவத்தைக் காக்க முன்னால் வாருங்கள். கதரணியும் விரதம் எடுத்துக்கொள்ளுங்கள். சுதேசி சாமான்களை வாங்குங்கள். பகவத்கீதையைப் பாராயணம் செய்யுங்கள்" என்றெல்லாம் காங்கிரஸ்காரர்களின் கொள்கைகளைப் பரப்பவும் பழகிவிட்டார்கள்.

இந்த ஆனந்தகரமான வேலையிலீடுபட்டுக் கவலை இன்றிச் சந்தோஷமாகக் காலங்கழிக்கும் மார்க்கம் ஏற்பட்டிருப்பினும் வாஸந்தியின் மனத்தில் தன் பிதாவின் கதி, பளிச் பளிச் என்று தோன்றிக் கவலையையும், அபாரமான துக்கத்தையும் உண்டாக்கி வருத்தாமலில்லை. 'அப்பாவும் இங்குகூட விருந்தால் எத்தனை ஆனந்தமாக விருக்கும்?' என்று சதா எண்ணுவாள். அவ்வாறு எண்ணும்போதெல்லாம் கண்ணீர் தானாகப் பெருகி வழியும். அந்தச் சமயங்களிலெல்லாம் ஆசிரம வாஸிகளும் தொண்டர் தலைவனும் இவளுக்குத் தேறுதல் கூறுவார்கள். தொண்டர் தலைவன் அதிகாரிகளின் உத்திரவு பெற்று இரண்டு மூன்று தரம் குழந்தைகளை அழைத்துச் சென்று மூர்த்திக்குக் காட்டிவந்தான். தன் கதி இவ்விதமாயினும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு உண்மையாக உழைக்கும் தேசத் தொண்டர்கள் கிடைத்தது பற்றி மூர்த்தியின் உள்ளம் ஆனந்தத்தினால் பரவசமுற்றது.

வாஸந்தி கையில் ஒரு சிறு கதர்க் கொடியும் புத்தகமும் எடுத்துக்கொண்டு தலைவனுடனும் மற்றும் சில தேச ஸேவிகைகளுடனும் வழக்கம்போல் காங்கிரஸ் அங்கத்தினர்களைச் சேர்க்கக் கிளம்பினாள். சுறுசுறுப்பும், வேலையில் உத்ஸாகமும் கொண்ட வாஸந்தி ஒவ்வொரு வீடு வீடாக ஏறி இறங்கி, தக்காருக்குத் தக்கபடிப் பேசி, "ஐயா! நாலணா ஒரு வருஷத்திற்கெல்லாம் உங்கள் தேசத்திற்காக உபயோகப்பட்றதெ நீங்க தடுக்கலாமா? நம்ப பாரத நாடு க்ஷேமமடைய வாண்டாமா? நமக்கெல்லாம்

சுதந்திரம் வாண்டாமா? நாலணு கட்டிக் கையெழுத்துப் போடுங்க சார்!” என்று ஆடவர்களிடம் கூறுவாள்.

ஸ்திரீகளிடம், “மாமீ! ஒரு நாளேக்கு மார்க்கட்டிலே காய்கறி வாங்கினு எட்டணு செலவாரது. இரண்டு அல்லது மூணு நாள்ளே ஜீரணமாயிட்ரது. ஒரு வாயல் ரவிக்கே வாங்கினு அடுத்த மாசம் கிழிஞ்சிபோறது. தேசத்தின் பெருமையை நிலே நாட்ட ஒரு நாலணு கொடுக்கக் கூடாதா? அது முடியாதா? குடுத்து காங்கிரஸ் மெம்பராகச் சேருங்கோ மாமீ!” என்பாள்

சிறுவர் சிறுமியரிடம் பேசும்போது, “இதோ பாருங்க. ஒங்கப்பாவெயும் அம்மாவெயும் காங்கிரஸில் மெம்பரா சேரச் சொல்லுங்க. கதர் வாங்கிக் கட்டுங்க. நீங்களும் இங்கே வந்து சேந்துடுங்கோ! நாம்பல்லாம் ரொம்ப தமாஷா வேலே செய்யலாம். காந்தி தாதா வரப்போறாராம். அப்ப நாம்பளே தொண்டரா இருந்து அவருக்கு வேலெ செய்யலாம்!” என்று தூண்டி விடுவாள்.

இம்மாதிரியே காங்கிரஸ் அங்கத்தினர்களேச் சேர்ப்பதில் வெகு சாமர்த்தியசாலியாகிவிட்டாள். அவ்வாறு சேர்க்கப் போகும் இடங்களில் இவளுடைய சமத்காரத்திற்கு மெச்சியும் குழந்தை இத்தனே பேசுகிறதே என்று சந்தோஷப்பட்டும், அங்கத்தினர்கள் சேர்ந்தார்கள். அவ்வாறு கேட்கும் இடங்களில் சில கொழுப்புப் பிடித்தவர்கள் ‘இந்தப் பெண் யாரு? மாயக் கொள்ளேயிலே சம்பந்தப்பட்டிருக்கும் மூர்த்தியின் பெண் ணல்லாவா?’ என்று கேட்கும்போது, வாஸந்தியின் உத்சாக மெல்லாம் பறந்துபோய் முகத்தில் விசனமும் கோபமும் ஜொலிக்கும்.

அப்போதும் சேர்ந்த இடத்து சகவாஸத்தின் மனத் தால் சாந்தத்தை இழக்காமல், “ஐயா! அநியாயமாக எங்கப் பாவெ பழிக்காதேங்கொ! இந்த அநியாய அபாண்டத்தையும் கடவுள் ஒரு நாளேக்கி நிரூபிப்பார். இப்படியே குத்தவாளியா இருக்கமாட்டார் எங்கப்பா” என்று கண்ணீர் பெருகக் கூறிக் கொண்டே வந்துவிடுவாள்.

ஒரு தினம் அங்கத்தினர்கள் சேர்த்துக்கொண்டு வருகையில் மைதிலியின் வீட்டுப் பக்கம் வரும்போது வாஸந்தி தடைகட்டிய நாகம்போல் நின்றுவிட்டாள். தன் தாயாரின் சவத்தை எடுத்துச் செல்கையில் நடந்த சம்பவமும், மைதிலியின் அன்பும், அவளுக்குப் பயித்தியம் பிடித்திருக்கும் கண்ருவியும் சிறிய பெண்ணையினும் ஞாபகம் வந்து, அவளால் தாங்கமுடியாத வேதனையுண்டாகிவிட்டது. மைதிலியைப் பார்த்து எத்தனையோ நாளாகிவிட்டதால், அவளைப் பார்க்க வேண்டுமென்று தடுக்கமுடியாத ஆசையும் மனத்தில் போராடுகிறது. போனல் கிழவன் என்ன செய்வானே என்ற பயமும் கூடவே நெஞ்சை அள்ளுகிறது. இத்தனை பேர்கள் இருப்பதால் தைரியமாக உள்ளே சென்று பார்த்துவிட்டே வருவது என்று தைரியங்கொண்டாள்.

தலைவனை நோக்கி, "மாமா! இந்த வீட்டில் எங்களுக்கு மிகவும் வேண்டிய மாமி இருக்கா! அவளே பாத்துட்டு வரேன். நீங்களும் கூடவே வாங்கோ மாமா! அங்கே ஒரு தாதா இருக்கு. அது மகா பொல்லாத கெழம். அடிச்சுடும். அதுக்காக நீங்க வாங்கோ மாமா!" வென்று கையைப் பிடித்து இழுத்தாள். இதற்குள் மற்ற தொண்டர்கள் வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்! பாரத மாதாக்கு ஜே! மகாத்மா காந்திக்கு ஜே! பாரத நாட்டின் பெருமையை நிலை நாட்ட எல்லோரும் காங்கிரஸில் அங்கத்தினராகச் சேருங்கள். தேசத்திற்கு ஒத்துழையுங்கள். நாட்டின் சுதந்திரத்திற்காக நாலணு கொடுத்து அங்கத்தினராகுங்கள்" என்று கோஷித்தார்கள்.

வாஸந்தி, தலைவனை அழைத்துக் கொண்டு, மைதிலியின் வீட்டிற்குள் தைரியத்துடன் ஏறினுள். கிழவர் இருக்கிருரோ வென்று நாற்புறமும் சுற்றிப் பார்த்துக் கொண்டே மெல்ல நடந்தாள். அப்போதுதான் கருப்பன் சோப்பாக்களை எல்லாம் தட்டிக் கொண்டிருந்தான். வாஸந்தி மெல்லஅவனருகில் சென்று கையைப் பிடித்து அசைத்தபடியே, "கருப்பா! அம்மா எங்கே? அம்மாக்கு எப்படி இருக்கு? அம்மாளே பாக்கணும்னு ஆசெ அடிச்சுண்டுது. அதுக்காக வந்தேன். அந்தக் கெழம் இருக்கோ?" என்று வாஞ்சை ததும்பக் கேட்டாள்.

கருப்பனுக்கு வாஸந்தியைப் பார்த்த சந்தோஷம் ஒரு பெரிய காட்டு வெள்ளம்போல் பொங்கிவிட்டது. அவளை ஒரு சிறுமியாக எண்ணுமல் பெரிய தேவதையைப் பார்ப்பதுபோல் எண்ணி, வாஸந்தியைக் கட்டியணைத்துத் தடவியபடியே "கொயந்தே....சவுக்யமா இருக்கியாம்மா! எங்கண்ணு! என் ராசாத்தின்னு அம்மா சதா ஒன்னேயே நெனச்சுகிட்டு இருக்காங்கோ! ஓடியாம்மா!" என்று கையைப் பிடித்துக் கொண்டு ஓடி, மைதிலி இருக்கும் அறைக்கு அழைத்துச் சென்று "அம்மா! சின்னம்மா! இதோ பாருங்க. ஒங்க ராசாத்தி யம்மா வந்திருக்குதுங்க" என்று காட்டினன்.

மைதிலியின் தலைவிரி கோலமும், முக விகாரமும், பரிதாபமும் வாஸந்தியை ஒரே கலக்கு கலக்கிவிட்டன. அவள் தாங்க முடியாத விசனத்துடனும், பயத்துடனும் மைதிலியை உற்றுப் பார்த்தபடியே, "மாமீ! மாமீ! என்னெ தெரியறதா மாமீ!" என்று கோவெனக் கதறிவிட்டாள். அத்தகைய நிலைமையிலும் மைதிலி வாஸந்தியைப் பார்த்த உடனே இரு கைகளையும் விரித்துக் கொண்டு பயங்கரமாகக் கண்களை விழித்துப் பார்த்தபடியே ஓடி வந்து, "வாஸந்தி! வாஸந்தி! நீ செத்துபோகல்லே? ஒம் பொணத்தெ எடுத்துண்டு போகல்லே....கண்ணு! நீ செத்துப் போகவேண்டாம். அழாதேடா ராஜா! என் கண்ணல்ல" என்று ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாது கூறி, வாஸந்தியைக் கட்டியணைத்து, கண்ணில் கொட்டிய ஜலத்தினல் வாஸந்தியின் தலையை நனைத்துவிட்டாள்.

வாஸந்திக்குக் கரை காணுத அன்பு ஒரு புறமிருப்பினும் சிறுமியானதால் பயமும் கூடவே நடுக்குகிறது. மைதிலியின் முகத்தைப் பார்க்கிருள்; பயந்து தலை குனிகிருள். மைதிலி கடகடவென்று சிரிப்பதும் கண்ணீர் விடுவதும் வாஸந்தியின் முகத்தைத் தன் முகத்தோடு முகம் பதித்துக் கொண்டு அழுவதுமாக விருந்தாள்.

இந்தப் பரிதாபத்தைக் கண்ட தொண்டர் தலைவன் "ஐயோ! என்ன கண்ருவிக் காட்சி! ஏம்பா! எதனுலே இந்தம்மா இப்படி இருக்காங்கோ?" என்று கருப்பனைக் கேட்டான். கருப்பன் கண்ணீர் பெருக சகல சரிதையையும் கூறிப் பின்னர் "சாமீ! இனுமே இந்தம்மாளும் பழயமாதிரி தெளிஞ்சு வருவாங்களா!

இதுக்கு ஏதாச்சும் வயி சொல்லுங்களேன். எம் பெத்த பொண்ணு மாதிரி வளத்துப்புட்டேஞ் சாமி! வவுறு பத்தி எரியுது சாமி! இப்படி பாக்கரத்தெவிட இந்தம்மா செத்துட்டாகூட தேவலென்னு தோணுது சாமி!" என்று அழுதான்.

தலைவனுக்கும் மனம் தாங்காமல் கண்ணீர் துளிர்த்து விட்டது. கருப்பனை நோக்கி, "அப்பா! இந்தம்மாளின் உடம்பு வாசியாகலாம். ஒரே எடத்துலே போட்டு அடச்சுட்டதாலே இப்படி யாயிடுத்துன்னு நெனக்கிறேன். நீ இவாளே மெல்ல வெளியிலே அழைச்சிண்டு போயி பலாக்குக் காட்டு. புத்தி தெளிய லாம். எங்க ஆசிரமத்துக்கு அழைச்சுண்டு வா! அங்கே வந்து பாத்தாலே மனம் சாந்தி யடையும்" என்றான்.

கருப்பன் :—ஐயையோ! இந்த ஊட்லே பெரும் பூதம் ஒன்று இருக்கே. அது சும்மா இருக்குமா?........(சற்று யோசித்து) சரி சாமீ! ஆவுட்டங்க. அப்படியே பண்ரேன். கடவுள் எந்த கதி குடுக்காருன்னு பாக்கலாம்.

தலைவன் :—வாஸந்தி! மாமியெ நம்ப ஆசிரமத்துக்கு வரா ளான்னு கேளும்மா.

வாஸந்தி :—மாமீ! என்னோடெ காந்தி ஆசிரமத்துக்கு வரங் களா மாமீ!

மைதிலி :—ஹி ஹி ஹி! காந்தீ! காந்தீ! மகாத்மா காந்தீ! மகாத்மா காந்திக்கு ஜே!....ஜே!....ஜே!....வந்தேமாதரம்....

வாஸந்தி .—(கண்ணீர் பெருக) ஆமாம் மாமீ! வந்தேமாதரம் தான். வரயா மாமீ!

மைதிலி :—வேணி இருக்காளா?....வேணி கிட்டயா போக லாம். சரி. எனக்கும் பாடெ கொண்டு வா. அதுலெ வரேன். ஹி ஹி ஹி!

வாஸந்தி :—கருப்பா! எங்க மாமா சொன்னப்பலெ எப்படி யாவது அழெச்சிண்டு வரயா. நானு போரேன். மாமீ! நானு போகட்டுமா?—என்றாள். மைதிலி அவளே இறுகத் தழுவி முகத்தோடு முகம் வைத்து முத்தமிட்டுப் "போம்மா! போ! செத்துப் போ! நானும் செத்துப் போரேன். வேணியும் செத்துப் போயிட்டா. மூர்த்தியும் செத்துப் போயிட்டான். எல்லாரும்

செத்துப் போயிட்டா. தாதா மாத்திரம் செத்துப் போகல்லே.... ஹி ஹி" என்றாள். கண்ணீர் பெருக வாஸந்தி கருப்பனிடம் சொல்லிக் கொண்டு, வெளியில் வந்து கூட்டத்தில் கலந்து கொண்டாள்.

## 53

"காத்தாயி! அல்லாஞ் செஞ்சுபுட்டாயா?" என்று கருப்பன் கேட்டான். காத்தாயி சந்தோஷத்துடன் "தலெ சீவினேன். பொட்டு வெச்சேன். வேறெ சீலெ கட்டினேன். அல்லாம் செஞ்சுப் புட்டேன்" என்றாள்.

கருப்பன்:—ரொம்ப சந்தோஷம்டீ! சரி. நீ போயி அம்மா பொடவெயெ கட்டிண்டு தலெ விரிச்சிண்டு அம்மாளெ போலயே அழு, சிரி, பேசு. அல்லாம் பண்ணிக்கிட்டு இரு. கெழவன் வந்தாக்கா கதவெ தொரக்காதே. இடிச்சிட்டுப் போவட்டும். நானு நம்ப வீரம்மாளெ இட்டுகிணு சின்னம்மாளெ அழச்சிட்டு போரேன். சங்கதி வெளியிலே தெரிஞ்சுதோ ஒண்ணெ கொன்னுபுடுவேன். போயி நீ சிங்காரம் பண்ணிக்கோ.—என்று சந்தோஷத்தால் தட்டிக் கொடுத்தான். காத்தாயியும் எழுந்து உட்புறம் ஓடினாள்.

பின்னும் 5 நிமிஷத்துக்கெல்லாம் கருப்பன் வீரம்மாள் என்ற ஒரு கிழவியை உதவிக்குக் கொண்டு மைதிலியை மெல்ல அவ்வறையிலிருந்து வெளியே அழைத்து வந்தான். "சின்னம்மா! நீங்க வாங்க. வேணியம்மா ஒங்களெ பாக்கணுமாம். இட்டாரச் சொன்னாங்க. பேசாதே வாங்க" என்றான். வீரம்மாள் மைதிலியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். கருப்பன் முன்னே சென்றான். மைதிலி பைத்தியக்காரப் பார்வையும் சிரிப்பும் அழுகையும் முகக் கோணலுமாக மெல்ல நடந்தாள். தயாராக நிற்கும் வண்டியில் ஏற்றிவிட்டு, கருப்பன் வண்டியை ஓட்ட வாரம்பித்தான். வீரம்மா மைதிலியைப் பிடித்துக் கொண்டாள். பிரமிப்புடன் மைதிலி உட்கார்ந்திருந்தாள்.

இவர்கள் சென்ற 5 நிமிடத்திற்கெல்லாம் கிழவர் ஒய்யார நடையுடன் அந்தப் பக்கம் வந்து, "கருப்பா! கருப்பா!" என்றார். சந்தடி இல்லை. "காத்தாயி" என்றார். அதற்கும் பதிலில்லை. "எங்கே தொலைந்தது சனிகள்?" என்று கூறியபடியே மைதிலியின் அறையில் ஜன்னலால் எட்டிப் பார்த்தார். காத்தாயி சிரிப்பும் அழுகையுமாக ஜன்னல் பக்கம் முதுகு காட்டியவாறு "மன்மத பாண சஞ்சீவி....ஹி ஹி ஹி....மன்மத பாண சஞ்சீவி ஈ ஈ ஈ ஈ" என்ற வார்த்தையைப் பாட்டாக இழுத்து பெரிய நடனம் செய்ய வாரம்பித்தாள்.

வெளியிலிருந்து பார்க்கும் கிழவர் தலையிலடித்துக்கொண்டு, 'கிரகசாரம்!....தலை யெழுத்து, ஏ மூதேவி! எய் இதென்னக் கூத்து? மானம் போரதுடீ சனியனே! நிக்கறையா வந்து பெரம்பு முறியும்படி அடிச்சுப் புடட்டுமா?" என்று கத்தினார். அதே சமயம் காத்தாயி தலை மயிரால் முகத்தை நன்றாக மூடிக்கொண்டு, ஜன்னல் பக்கம் வந்து திடீரென்று "ஹி ஹி ஹி! தாதா! மன்மதனாட்டமே இருக்கிங்களே....மன்மதனே....கிழ மன்மதனே!" என்று அபிநயம் பிடிக்க வாரம்பித்தாள். கிழவர் முதலில் திடுக்கிட்டு நடுங்கி விட்டார். பின்னர் கோபத்துடன் தலையிலடித்துக் கொண்டே "பாவி முண்டே. ஒனக்கேண்டி சாவு வரல்லே?" என்று கூறிக்கொண்டே போய் விட்டார். அதே சமயம் காத்தாயி, "சனி! தொலைஞ்சு போ" என்றாள்.

## 54

மூர்த்தி மாயக்கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்தவன்தான் என்று தீர்மானித்து, அவனுக்கு அதிகாரிகள், இரண்டு வருட காலம் தண்டனை விதித்துவிட்டார்கள். இதைக் கேட்ட வாஸந்தியும் கிழவியும் மூர்ச்சையேயாகி விட்டார்கள் என்றே கூறலாம். தொண்டர் தலைவனின் பேரன்பினால் சற்று தேறுதலடைந்த வாஸந்தி, கிழவியைத் தேற்றிவந்தாள்.

கையுமில்லாமல் சிறைச் சாலையில் தவிக்கும் மூர்த்தியின் கதி எப்படித்தானிருக்கும்? அவன் மனது என்ன பாடுதான் பட்டுத் தத்தளிக்கும்? சதா கண்ணீர் சிந்தியபடியே இருக்கிறான். மற்ற கைதிகளைப்போல் இவன் வேலை செய்யவும் கை இல்லாததால் இடக் கையினால் இவன் என்னதான் செய்யமுடியும்?

வேலை செய்யவும் வக்கில்லாத நொண்டி என்று கைதிகளே ஏசி ஏளனம் செய்யும்போது, அவன் உயிரே போய்விட்டதுபோலாகி விடும். தலையில் கையை வைத்துக்கொண்டு பயித்தியம்போல் புலம்பித் துடிப்பான்.

அங்கு காவலிருக்கும் வார்டர் உண்மையில் உத்தமமான குணமும் நல்லொழுக்கமும் தயாளத்தனமும் கொண்டவனாகை யினால் மூர்த்தியின் ஆதிமுதலான சரிதையைக் கேட்டுப் பரிதாபப் பட்டு, அவ்வப்போது அவனுக்குத் தேறுதல் கூறுவதும், வைராக்ய மான கதைகளைப் போதிப்பதுமாக சமாதானம் செய்வான். அவன் அடிக்கடி வெளியில் சென்று வரும்போது வாஸந்தி, ராஜு, கிழவி முதலியவர்களைப்பற்றிய தகவலைத் தொண்டர் தலைவன் மூலமாக விசாரித்துக்கொண்டுவந்து மூர்த்தியினிடம் ரகசியமாகக் கூறுவான்.

மூர்த்தி, தன் குழந்தைகளைவிடத் தனது அந்திய காலத்தில் அவதிப்படும் தாயை நினைத்து நினைத்துக் கதறித் தேகம் மெலிந்து குச்சிபோலாகிவிட்டான். சதா "அம்மா! நான் மகா பாவி. ஒரு நாளாவது ஒன்னெ வெச்சு நான் காப்பாத்தல்லேயே. நீ கிராமத்துலே அழுதபோது உன்னே இனிமே யாரிடமும் விட மாட்டேன். நானே காப்பேன்னு சொன்னேனே! அந்த மாத்ரு கைங்கர்யம் செய்யாத பாவியாய் நொண்டியாயிட்டேனே! என்று வருத்தப்பட்டேனே, இப்போ அடியோடு படுபாவியாய் பழியோடெ ஜெயிலில் தவிக்க விதியாச்சே. ஈசா! என்னெ ஒன் திருவடியிலே சேர்க்கக்கூடாதா?" என்று கதறுவான்.

மூர்த்தி:—ஐயா! வார்டர்! இன்னிக்காவது அந்தப் பக்கம் போனங்களா! எங்கம்மா எப்படி இருக்கா! சமாசாரம் தெரியுமா? குழந்தைகள் என்ன பண்ரா! அழாமே இருக்காளா! கொஞ்சம் சொல்லுங்களேன்.

வார்டர்:—மூர்த்தி! நான் என்னத்தெச் சொல்வேன்! கிழ விக்கு ஸ்வாசம் வாங்கராதாம். ஆனா அப்பவும் நெனவுமட்டும் தெரிய ரதாம். மூர்த்தி! மூர்த்தின்னு கத்தறாளாம்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் மூர்த்தி வெட்டிச் சாய்த்த மரம்போல் "அம்மா! அம்மா!" வென்று கர்ஜித்தபடியே விழுந்தான். "ஐயோ! நாம் ஏன் சொன்னோம்? பெரிய ஆபத் தாயிடுத்தே!" என்று வார்டர் கூறிக்கொண்டே "மூர்த்தி! மூர்த்தி! எழுந்திரு. எழுந்திரு. ஐயோ! அதோ தொரெ வெந்துட் டாரு! நீ இப்படி விழுந்து கடந்தா ஒன்னெ ஆஸ்பத்திரி வார்டுலே போட்டுடுவா! எழுந்தெ தொர!" என்றான்.

183020
சென்னை 600 008




உங்களது புத்தக செட்டில்

## உளுத்த இதயம்

இருக்கின்றதா?

இல்லையேல் இன்றே
வாங்கிப் படித்து ஒவ்
வொரு வரியிலுமுள்ள
சாரத்தைச் சுவையுங்கள்.

கொஞ்சம் பிரதிகளே கைவசமிருக்கின்றன.

நான்கணு ஸ்டாம்பு அனுப்பவும்.

"JAGANMOHINI" Vol. XV No. 4 Regd. No. M. 2210




தலை
வலிக்கு

Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையும்
விலக்குங்கள்




அம்ருதாஞ்சனை
உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,
சென்னை கல்கத்தா பம்பாய்


Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St. Triplicane, Madras.